REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜனவரி 8 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
89
1932 - 2021
வரு. 90 இல. 07
Saturday 08, January, 2022
16 பக்கங்கள்
30/-



உலகளாவிய ரீதியில்

## கொவிட் தொற்றாளரின் எண்ணிக்கை 300 மில். ஆனது

உலகளாவிய ரீதியில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 300 மில்லியனை கடந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அதன்படி உலகளவில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 கோடியே 8 இலட்சத்து 64,100 ஆக அதிகரித்துள்ளது.

06

ஐந்து ஆண்டுகளில் கடந்த இரு வருட

## எனது பதவிக் காலத்தில் நான் கடன்கள் எதனையும் பெறவில்லை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு



தனது 5 வருட பதவிக் காலத்தில் கடந்த இரண்டு வருடங்களில் வெளிநாடுகளில் இருந்து எந்தவொரு கடனையும் பெறவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சியம்பலாண்டுவவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்கால சந்ததியினருக்கு புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்கள் பாரிய பிரச்சினையாக

06

## இலங்கைக்கு ஒத்துழைப்புகளை வழங்க இந்தியா தயாராக உள்ளது

ஜீ.எல்.பீரிஸிடம் தெரிவித்ததாக ஜெய்சங்கர் டுவிட்டரில் பதிவு



கடினமான சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கில் இலங்கை வெளிவிவகார அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை தாம்

06

ஹக்கீம், மனோ கைச்சாத்திடாத நிலையில்

## பிரதமர் மோடிக்கு அனுப்பவுள்ள தமிழ் கட்சிகளின் ஆவணம் தயார்

புதன்கிழமை இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்க ஏற்பாடு



இலங்கை தமிழர்களுக்கான தீர்வு தொடர்பில் இந்திய பிரதமருக்கான கோரிக்கை ஆவணம், எதிர்வரும் புதன்கிழமையன்று இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்படவுள்ளதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணத்தில் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன்


06

சுகாதார வழிகாட்டலுக்கமைய ஜனாதிபதி தலைமையில்

# வழமைபோல இம்முறை 74ஆவது சுதந்திர தின விழா

முன்னேற்பாடுகள் குறித்த விசேட கலந்துரையாடலில் தீர்மானம்

* வணக்கஸ்தலங்களில் விசேட வழிபாடு
* கட்சித்தலைவர்கள், இராஜதந்திரிகளுக்கு அழைப்பு
* 6,783 வீரர்கள் அணிவகுப்பு மரியாதை
* பொதுமக்களுக்கு இம்முறை அனுமதியில்லை



சுதந்திர சதுக்கத்தில் பிரதான நிகழ்வுக்கு ஏற்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகள் இம்முறை சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளதுடன் அவர்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்

06



1000 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் திட்டத்தின் கீழ் மொனராகலை, சியம்பலாண்டுவ மத்திய மகா வித்தியாலயமும் நேற்று தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நிகழ்வில் கலந்துகொண்டதுடன் அங்கு ஸ்மார்ட் வகுப்பறையொன்றை பார்வையிட்ட போது...



பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும்

## அரச துறைக்கு நீதி வழங்க அரசு பின்னிற்கவில்லை

இதுவொரு சாதனை என்கிறார் அமைச்சர் டளஸ்

03



12 வயது முதல் 15 வயது வரையிலான பிள்ளைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு, கொட்டாஞ்சேனை, புனித அன்னம்மாள் கல்லூரியில் மாணவிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டபோது... (படம்: சுலோச்சன கமகே)

உடன் அமுலாகும் வகையில்

## மியன்மாரிலிருந்து அரிசி கொள்வனவு



மியன்மாரிடமிருந்து ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வர்த்தக அமைச்சுக்கும் மியன்மார் அதிகாரிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்த அரிசி தொகையை "பாதுகாப்பான தொகையாக" பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

24 மணிநேரமும் இயங்கும் வகையில்

## வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கையருக்கு தடுப்பூசி

விமான நிலையத்தில் விமானப்படை ஏற்பாடு



ஸாதிக் ஷிஹான்

வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கையருக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கென பண்டாரநாயக்க சர்வதேச விமான

06

## சீன வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கை வருகிறார்



சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வேங் ஹி (Wang Yi) இன்று (08) உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுஇலங்கை வருகிறார்.

இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான ராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 65 வது ஆண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு

06

கூட்டுச் செயற்பாட்டில் ஏற்பட்ட சிக்கல் நிலை:

## வட,கிழக்கு கட்சிகளின் பயணத்துக்கு தடையாக இருக்கப் போவதில்லை

எமது பயணத்தையும் கைவிடமாட்டோம்



த.மு.கூ சார்பில் மனோ, திகா, இராதா கூட்டறிக்கை

"இந்திய பிரதமருக்கு, இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளின் விண்ணப்ப கடிதம்" என்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டு செயற்பாட்டில், இந்திய

06

## இறைவரித் திணைக்களத்துக்கு ரூ. 494.9 பில்லியன் வருமானம்

ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

03

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் குற்றச்சாட்டுகள்:

## தன்னை விடுவிக்குமாறு கோரிய மைத்திரியின் மனு நிராகரிப்பு

கொழும்பு மாவட்ட நீதிமன்று நேற்று உத்தரவு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றினால் நேற்று (07) நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களால் தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறு அவர் நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.


06



கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 200ஆவது வருடாந்த கொடியேற்ற விழாவை முன்னிட்டு நினைவு முத்திரை ஒன்றை வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தார். பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ், எச்.எம்.எம்.ஹரிஸ் எம்பி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (கல்முனை விசேட நிருபர்)

பிணைமுறி மோசடி வழக்கு:

## மார்ச் 04 இல் மீண்டும் விசாரணைக்கு வரும்



பிணைமுறி மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் உட்பட பத்து சந்தேகநபர்களுக்கு எதிரான கணினி சாட்சியங்களின் பட்டியலை சட்டமா அதிபர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

மேலும், கணினி ஆதாரங்களின் பட்டியலின் நகல்கள், பெஞ்ச் அனுமதியுடன் வழக்கறிஞர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் மார்ச் 4 ஆம்

06

## யாழில் புதிய வகை நுளம்பு கண்டுபிடிப்பு

முழுநாட்டுக்கும் எச்சரிக்கை விடுப்பு



யாழ்ப்பாண நகர எல்லைக்குள் 'எனோபீலிஸ் டிபென்ஸி' எனும் புதிய வகை மலேரியா நுளம்பு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது மிகவும் ஆபத்தான நிலை என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ஏ. கேதீஷ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற

06

ஒமிக்ரோன் வைரஸ் திரிபின்

## தாக்கத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம்



ஒமிக்ரோன் கொவிட் வைரஸ் திரிபின் தாக்கத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வைரஸ் திரிபினால் உலகளாவிய ரீதியில் மரணங்கள் ஏற்படுவதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. முன்னைய திரிபுகளை விடவும், ஒமிக்ரோன் திரிபானது மக்களை கடுமையாக நோய்வாய்க்குட்படுத்தும் தன்மை குறைவானது என அண்மைய ஆய்வுகளில்

06

சீன நிறுவனத்துக்கு

## 6.9 மில். அமெ. டொலர் மக்கள் வங்கி நேற்று செலுத்தியது



லோரன்ஸ் செல்வநாயகம்

தரம் உறுதி செய்யப்படாத நிலையில் திருப்பி அனுப்பப்பட்ட உரக்கப்பலுக்காக மக்கள் வங்கி நேற்றைய தினம் 6.9 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தியுள்ளது.

சர்ச்சையை ஏற்படுத்திய உரத்தை இலங்கைக்கு கொண்டு வந்த சீன நிறுவனத்திற்கு 6.9 மில்லியன் அமெரிக்க டொலரை மக்கள்

06

விக்கல் வீராச்சாமி



பிரதமர் மோடி ஐயாவுக்கு அனுப்பப்–போற ஆவணத்தில கையெழுத்துப்–போடவே இத்தனை இழுபறியா இருக்கு, அப்ப தீர்வு எப்படி இருக்கும்...

இனி, மோடி ஐயாவ சந்திக்கப் போகி–றப்போ யார் யார் போறது எண்டுறிதில அடுத்த குடும்பிச் சண்டை நடக்கும் போல தெரியுது...

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்







ஆதி ஐயப்ப தீர்த்த யாத்திரை மன்றம் ஸ்ரீ ஐஸ்வர்ய ஐய்யப்பன் ஷேத்திரம் நடத்திய மஹா மண்டல பூஜையுடன் ஸ்ரீ கருப்பன்ன சுவாமி பூஜையும் அண்மையில் கொழும்பு ஜிந்துப்பிட்டி கன்னார தெருவில் அமைந்துள்ள ஆதி ஜய்ப்ப தீர்த்த யாத்திரை மண்டபத்தில் நடைபெற்ற போது,...

# 27 வருடங்களாக முஸ்லிம் பிரதேசம் புறக்கணிப்பு; மர்ஜான் பளீல் எம்.பியின் வேண்டுகோளில் வீதிகளுக்கு காபட்





காலி கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காலி புகாரி தக்கியா பிரதேச பிரதான 4 வீதிகள் சுமார் 2 கோடி. ரூபா செலவில் காபட் இட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 4 கிலோ மீட்டர்களைக் கொண்ட தக்கியா வீதி, தக்கியா மாவத்தை, ஜும்ஆ மஸ்ஜித் ஒழுங்கை ஆகிய வீதிகளே சுமார் 27 வருடங்களின் பின்னர் புனரமைப்பு செய்யப்பட்டு காபட் இடப்பட்டுள்ளன.

இப்பிரதேச முஸ்லிம் மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலிடம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இவ் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா ஆகியோரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இவ்வீதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்;

கடவத்சதர பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்தி குழு தலைவராக பிரதமர் என்னை நியமித்துள்ளார்.

சுமார் 27 வருடங்களின் பின் எமது மக்கள் வாழக்கூடிய நான்கு வீதிகளும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இன்றைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனையையேற்று முஸ்லிம் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டும் பிரதேசங்களுக்கு கூடுதல் நிதியொதுக்கீடுகள் வழங்கப்பட்டும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை எதிர்க்கட்சியினருக்கு தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார் .

இதில் காலி மாநகர மேயர் பிரியந்த சஹபந்து, காலி துறைமுக இணைப்பாளர் ராஸிக் ஸரூக் உட்பட மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.







கொட்டாஞ்சேனை புனித அன்னம்மாள் கல்லூரியில் 1215 வயது மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கி வைத்தபோது பிடிக்கப்பட்ட படம்

## பாக். எல்லை வேலி: தலிபான் எதிர்ப்பு



டூரன்ட் லைன் எல்லை பகுதியில் பாகிஸ்தான் வேலி அமைக்க இடமளிக்கப்போவதில்லை என்று ஆப்கானில் ஆட்சியில் உள்ள தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.இரு நாடுகளுக்கும் இடையே தற்போது நிலவிவரும் எல்லை வேலி தொடர்பான பதற்றத்திற்கு மத்தியிலேயே இந்த அறிவிப்பு வெளியாகி இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'எந்த நேரத்திலும், எந்த அமைப்பிலும் வேலி அமைப்பதற்கு நாம் (தலிபான்) அனுமதிக்கப்போவதில்லை' என்று தலிபான் குழுவின் கட்டளைத் தளபதி மௌலவி சனாவுல்லா சங்கின் தெரிவித்தார்.

## ஆப்கானிஸ்தான் ஊடக செயற்பாட்டுக்கு நெருக்கடி



ஆப்கான் எங்கம் உள்ள ஊடக அதிகாரிகள் குறிப்பாக வானொலி நிலையங்களைச் சேர்ந்தவர்கள் தலைநகர் காபுலில் ஒன்றுகூடி தாம் முகம்கொடுக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் தலிபான் அதிகாரிகளின் கட்டுப்பாடுகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பொருளாதார பிரச்சினை, தகவல்களை பெறுவதில் உள்ள கட்டுப்பாடுகள் மற்றும் பெண் செய்தியாளர்களுக்கு எதிரான கட்டப்பாடுகள் தாம் முகம்கொடுக்கும் பிரதான பிரச்சினைகள் என்று அந்த ஊடக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த பிரச்சினைகள் காரணமாக நாட்டின் பல மாகாணங்களிலும் உள்ள வானொலி நிலையங்களும் நிறுத்தப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# கசகஸ்தான் பதற்றம்: ரஷ்யா தலைமை துருப்புகள் விரைவு



கசகஸ்தானில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கடுமையாக முடக்கப்பட்டு வரும் நிலையில் அந்நாட்டு ஜனாதிபதியின் கோரிக்கையை அடுத்து ரஷ்யா தலைமையிலான படையினர் கசகஸ்தனை வந்தடைந்துள்ளனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பினால் கடந்த சில நட்களாக இடம் பெற்று வரும் ஆர்ப்பட்டங்கள் மற்றும் பதற்ற சூழலில் பொலிஸார் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டது தொடர்பில் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவும் மிகப்பெரிய நகரான அல்மட்டியில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அனைத்து தரப்புகளும் வன்முறைகளை நிறுத்தும்படி ஐ.நா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் அழைப்பு விடுத்துள்ளன.

ஆயுதமேந்திய குற்றவாளிகள் என்று வர்ணிக்கப்பட்ட 26 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டதாக கசக் உள்துறை அமைச்சு நேற்று தெரிவித்தது. இதில் மேலும் 3,000க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வன்முறைகளில் 18 பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டிருப்பதோடு 748 பேர் காயமடைந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகளே இந்த பதற்றத்திற்கு காரணம் என்று ஜனாதிபதி காசிம் ஜொமார்ட் டொகாயேவ் குற்றம்சாட்டியபோதும் அதற்கான ஆதாரம் எதனையும் அவர் வெளியிடவில்லை.

இந்நிலையில் சுமார் 2,500 வெளிநாட்டு படையினர் கசகஸ்தான் சென்றிருப்பதாக கூறப்படுகிறது. ரஷ்யா தலைமையிலான கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பினாலேயே இந்தத் துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்தப் படையினர் அமைதிகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் அரச மற்றும் இராணுவ நிலைகளை பாதுகாக்கும் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த படையினர் பல நாட்கள் அல்லது வாரங்கள் அந்நாட்டில் நிலைநிறுத்தப்படும் என்று ரஷ்யாவின் ஆர்.ஐ.ஏ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கசகஸ்தான் வடக்கில் ரஷ்யா மற்றும் கிழக்கில் சீனாவுடன் எல்லைகளைப் பகிர்ந்துள்ளது. இது மேற்கு ஐரோப்பா அளவிலான ஒரு பெரிய நாடு, மத்திய ஆசியாவில் உள்ள பிற முன்னாள் சோவியத் குடியரசுகளின் நிலப்பரப்பில் இது சிறியது.

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிரான கலவரங்கள் அரசாங்கத்தை உலுக்கியுள்ளன. இதன் விளைவாக உயர்மட்டத்தில் உள்ளவர்களின் இராஜிநாமாக்களை எதிர்ப்பாளர்கள் கோரி போராட்டத்தை தீவிரப்படுத்தி வருவதால் அவர்களை ஒடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# கொவிட்-19: வாராந்த தொற்றில் இதுவரையில் இல்லாத உச்சம்

உலகெங்கும் கடந்த வாரத்தில் 9.5 மில்லியன் கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதாகவும் இது 71 வீத வாரந்த அதிகரிப்பாக உள்ளது என்றும் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. ஒமிக்ரோன் வைரஸ் திரிபு உலகெங்கும் பரவியுள்ள நிலையில் இது 'சுனாமி' அளவு அதிகரிப்பாக இருப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் உயிரிழப்பு எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.



'பெருந்தொற்று ஆரம்பித்ததில் இருந்து இதுவரை இல்லாத அளவு கடந்த வாரத்தில் அதிக எண்ணிக்கையான கொவிட் 19 சம்பவங்கள் பதிவாகியுள்ளன' என்று உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

ஆண்டு இறுதி விடுமுறையால் சோதனைகளில் பின்னடைவு ஏற்பட்ட நிலையில் இந்த எண்ணிக்கை குறைத்து மதிப்பிடப்பட்டதாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்று தொடர்பான உலக சுகாதார அமைப்பின் வாராந்த அறிக்கையில், கடந்த வாரத்தில் 9,520,488 தொற்றுச் சம்பவங்கள் உலகெங்கும் பதிவாகி இருப்பதோடு 41,178 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. இது முந்தைய வாரத்தில் பதிவான 44,680 உயிரிழப்புகளுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும்.

# பயங்கரவாத ஒழிப்பில் பாக். இரட்டை வேடம்

## சிங்கப்பூர் போஸ்ட் பத்திரிகை காட்டம்

சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பங்களிப்பு செய்வதாக வெளியில் காட்டிக்கொள்ளும் பாகிஸ்தான் உண்மையில் அதன் வளர்ச்சிக்கே உதவி வருவதாக சிங்கப்பூர் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பயங்கரவாதம் தொடர்பான 2020 அமெரிக்க அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தனது பயங்கரவாதத்துக்கு எதிரான செயல்திட்டத்தில் பாரபட்சமின்றி சகல பயங்கரவாத அமைப்புகளையும் செயலற்றதாக்கி விடுவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று குறிப்பிட்டுள்ள இப்பத்திரிகை, மும்பை தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய மசூர் அஸ்ஸார் மற்றும் சாஜித்மிர் ஆகியோர் பாகிஸ்தானிலேயே உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. மசூத் அஸ்ஸார் இணைய பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் தலிபான்கள் காபூலைக் கைப்பற்றியதைப் பாராட்டியுள்ளதோடு இதன் மூலம் உலகின் பெரு வல்லரசு என்ற தகுதியை அமெரிக்கா இழந்துள்ளது என்றும் குறிப்பிட்டிருந்ததை உதாரணமாக காட்டியுள்ளது.

2002ம் ஆண்டு டேனியல் பேர்ள் என்ற ஊடகவியலாளரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதான ஓமர் ஷேக் என்ற பயங்கரவாதி மற்றும் மூவர் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை சிந்து மேல்நீதிமன்றம் விடுவித்து தீர்ப்பளித்ததையும் இத்தீர்ப்பு சரியானது என பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் உறுதி செய்ததையும் சுட்டிக்காட்டியுள்ள சிங்கப்பூர் போஸ்ட் இதை பாகிஸ்தான் நீதித்துறையின் தவறான போக்கு எனக் குறிப்பிட்டுள்ளது.

9/11 தாக்குதலின் பின்னர் பயங்கரவாத ஒழிப்பில் பாகிஸ்தான் இரட்டை வேடம் பூண்டிருப்பதையும் பயங்கரவாத ஒழிப்பு வெறும் போலியானது என்றும் இப்பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

# பாக். ஊடகவியலாளர்கள் தண்டிக்கப்படக் கூடாது மனித உரிமைகள் ஆணைக்குழு நீதிமன்றத்திடம் கோரிக்கை

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது மகள் மர்யம் ஷெரீப் ஆகியோருக்கு பிணை வழங்குவதை நிராகரித்தமை தொடர்பான விடயத்தில் பாகிஸ்தான் முன்னாள் பிரதம நீதியரசர் தவறிழைத்துள்ளதாக செய்தி வெளியிட்ட மூன்று பத்திரிகையாளர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நீதிமன்றம் கைவிட வேண்டுமென பாக். மனி உரிமைகள் ஆணைக்குழு கேட்டுள்ளது.

ஜாஸ் ஊடக குழுமத்தின் பிரதம ஆசிரியர் மிர் ஷகில் உர் ரஹ்மான், செய்தி ஆசிரியர் அட்மிர் கௌரி மற்றும் புலனாய்வு ஆசிரியர் அன்ஸார் அப்பாஸி ஆகியோர் மீது இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் குற்றச்சாட்டுகளை சுமத்த தீர்மானித்ததையடுத்தே பாக். மனித உரிமைகள் ஆணைக்குழு தன் கவலையை வெளியிட்டுள்ளது.

முன்னாள் கில்கிட் பால்டிஸான் பிரதேச பிரதம நீதியரசர் ராணா ஷமிமுக்கு எதிராக செயல்பட்ட குற்றச்சாட்டிலேயே இம்மூவர் மீதும் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கட்டளையை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் கடந்த டிசம்பர் 28ம் திகதி பிறப்பித்திருந்தது.

மக்களின் பொது நலன்கள் அடிப்படையில் ஊடக சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும். உயர் அதிகார பீடங்களில் உள்ளவர்கள் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பை ஊடகவியலாளர்கள் கொண்டிருக்கிறார்கள்.

வெளிச்சக்திகளில் நீதித்துறை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேசமயம் சட்ட அபிவிருத்தி மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான பாக். செய்தி ஊடகவியலாளர்களுக்கான நிலையமும் தன் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

புலனாய்வு ஆசிரியர் அப்பாஸ் தன் கடமையையே செய்தார் எனவும் மக்கள் கவனத்தை ஈர்த்த செய்தியை வெளியிட்டார் என்றும் கூறியுள்ள இந் நிலையம், ஒரு செய்தியை வெளியிட்டமைக்காக நீதிமன்றம் ஊடகவியலாளர்களை தண்டிக்க கூடாது என்றும் பாகிஸ்தான் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 8 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




**தொழுகை நேரம்**

07 முதல் 08 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.03 |
| லுஹர் | 12.18 |
| அஸர் | 03.39 |
| மஃரிப் | 06.09 |
| இஷா | 07.24 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மார்கழி 24

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | தனம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | சுகம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | மறதி |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | செலவு |
| மீனம் | நிறைவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்ய வேண்டாம்

### உள்ளூர் உற்பத்தியாளர்கள் அரசிடம் கோரிக்கை

அரசாங்கம் வழங்கும் அத்தியாவசிய பொருட்களுக்கான வரியில்லா சலுகையின் மூலம் தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள் பாரிய இலாபத்தை ஈட்ட முயற்சிப்பதாக அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நுகர்வுக்கான தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்வதில் நாடு தன்னிறைவு பெற்றுள்ளதால், தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லையென அச்சங்கத்தின் இணைப்பாளரான புத்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

10,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான அறியப்படாத எண்ணெய் கையிருப்புகளை தேங்காய் எண்ணெய் எனக் கூறி வர்த்தகர்கள் இறக்குமதி செய்துள்ளதாகவும், தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேமிப்புக் கிடங்குகளில் அவை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு கையிருப்புகளை வீணாக்காமல் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்யை வழங்குவதற்கான திறன் உள்ளதாக சங்க உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூர் நுகர்வோருக்கு பாதுகாப்பான தயாரிப்புகளை வழங்குவதன் மூலம் தொழில் துறையை நிலைநிறுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சந்தைக்கு வெளியிடுவதில் இறக்குமதியாளர்கள் வெற்றி பெற்றால் பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களால் பொருட்களை விற்பனை செய்ய முடியாது.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இறக்குமதியாளர்கள் அஃப்லா டொக்சின் அடங்கிய தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ததைப் போன்ற ஒரு நிலைமை மீண்டும் உருவாக்கப்படுமென அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

### 16 – 19 வயதிற்கு இடைப்பட்ட

# சிறுவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி வழங்க அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் இரண்டாவது தடுப்பூசியை 16 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக விசேட மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஷ்யாமன் ரஜிந்ரஜித் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பாடசாலை மாணவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியை வழங்கும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று சிறுவர்களுக்கிடையில் பரவுவது குறைவாகக் காணப்பட்டாலும் சில சமயங்களில் சிறுவர்களும் வைரஸ் தொற்றினால் மரணமடைந்துள்ளார்கள். அவ்வாறு இல்லாவிட்டாலும் சிறுவர்களுக்கு நியூமோனியா போன்ற நோய் ஏற்படலாம். அதனால் ரிஸ்க் எடுத்துக் கொள்ளாமல் சிறுவர்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொடுப்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அது சிறுவர்களின் உயிர்களை பாதுகாப்பதற்கு மிகவும் உறுதுணையாக அமையும். அதனைக் கருத்திற்கொண்டே ஐரோப்பிய நாடுகளில் சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் மத்திய நிலையம் பொரளையில் உள்ள லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. அதனை பொதுமக்கள் உபயோகப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இளஞ்செழியன்

### நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்



வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். வடக்கு, கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான இடமாற்றம் தலைமை நீதியரசரினால் வழங்கப்பட்டிருந்தது.

அதன்படி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டதுடன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்ட மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

நீதிபதி இளஞ்செழியனுக்கு நீதிமன்ற வளாகத்தில் நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்களால் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

# மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களை இல்லாதொழிக்க அரசாங்கம் தயார்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



இந்த இக்கட்டான காலப்பகுதியில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு இன்னல்களை ஒவ்வொன்றாக இல்லாதொழிப்பதற்கு ஒரு அரசாங்கமென்ற ரீதியில் தயாராக இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருணாகல், மாவத்தகம நீர் வழங்கல் திட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கும் நிகழ்வின்போதே பிரதமர் (06) இவ்வாறு குறிப்பிட்டார்.

நிகழ்வில் பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மக்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்கினால், தேர்தல் நெருங்குகின்றதா என்று சிலர் கேட்கின்றனர். தேர்தலை எதிர்பார்த்து நாங்கள் இந்த திட்டங்களை முன்னெடுக்கவில்லை. குடிநீரை பெற்றுக்கொடுக்கும் போது இங்குள்ள மக்களின் கட்சி என்ன என்று யாராவது கேட்டதுண்டா? சிலர் இன்று இவை அனைத்தையும் குழப்பிக் கொள்கின்றனர். மக்கள் இக்கட்டான நிலையில் இருக்கும்போது நிவாரணப் பொதி கொடுத்தால் அதன்போதும் இவ்வாறே கேள்வி எழுப்புகின்றனர். நாம் மக்களின் சிரமங்களை புரிந்து கொண்ட அரசாங்கம். பொருட்களின் விலை உயரும் போது மக்கள் சிரமப்படுகின்றனர். அதனால்தான் நிவாரணம் வழங்க முன்மொழிகிறோம்.

ஆனால், இன்று எதிர்க்கட்சிகள் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு விரும்பவில்லை. அதற்கும் ஏதோ சொல்கிறார்கள். நாம் வழங்குவதையும் விரும்புவதில்லை. அவர்களும் கொடுப்பதில்லை. மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும்.

கொவிட்19 தொற்றை நாம் கொண்டு வந்ததை போன்றே இவர்கள் பேசுகின்றனர். ஆனால் நாம் முன்னெடுத்த நடவடிக்கைகளின் மூலமே மக்கள் கொவிட்19 தொற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டனர் என்பது குறித்து எவரும் பேசுவதில்லை.

பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை அறிந்தவுடன் நாம் அது குறித்து ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் தீர்மானம் மேற்கொண்டோம். ஆனால் முழு உலகையும் ஆட்கொண்ட கொவிட்19 தொற்றினால் ஏற்பட்ட பாதிப்புகளை எம்மால் ஒரே இரவில் அகற்ற முடியாது.

சவால்களுக்கு மத்தியிலேனும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கே நாம் எப்போதும் முயற்சிக்கின்றோம். அதன்போது ஏற்படும் சவால்களை சமாளிப்பதற்கு எம்மத்தியில் ஒற்றுமை அவசியம். அவ்வாறு இன்றி தான்

06

### திருமலை ஒப்பந்தம்

# எதிராக போராட்டம் நடத்த தீர்மானம்

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்காக நேற்று கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்யும் வரையில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

வேலைத் தளங்கள் மற்றும் பிரதான அலுவலகங்களை மையப்படுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுமென தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் வெளிநாட்டு சக்திகள் தேசிய பாதுகாப்பை மீற முடியும். இது தேசத்திற்கு செய்யும் துரோகம் என்றும் அவர் தெரிவித்தார்.

எமது முன்னோர்கள் இலங்கையை பிரித்தானியர்களுக்கு ஒப்பந்தம் மூலம் வழங்கிய வரலாறு மீண்டும்

06

# இந்தியாவிலிருந்து படகு மூலம் நாடு திரும்ப முயன்றவர் கைது

கடல்மார்க்கமாக சட்டவிரோதமாக படகுமூலம் நாடு திரும்ப முயற்சித்த இலங்கையர் ஒருவர், தனுஷ்கோடியில் வைத்து நேற்று முன்தினம் இரவு (06) கடலோர காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து விமானம்மூலம் தமிழகத்திற்கு சென்று தங்கியிருந்த மல்லாவியைச் சேர்ந்த 24 வயதான குறித்த நபர், விசா காலம் முடிவடைந்த நிலையில், சட்டவிரோதமாக படகு மூலம் இலங்கைக்கு திரும்ப முயற்சித்துள்ளதாக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

தனுஸ்கோடி கடற்கரையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய அந்த நபர் தொடர்பில், பிரதேசவாசிகள் கடலோர காவல்துறைக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

06

### திருமலை இந்திய – ஒப்பந்தம்

# இரத்து செய்ய கோரி அடிப்படை உரிமை மனு

### நேற்று உயர் நீதிமன்றில் தாக்கல்

திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியை மேம்படுத்துவதற்காக நேற்று முன்தினம் (06) கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தந்தை இரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்று நேற்று (07) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்களினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் (06) கைச்சாத்திடப்பட்டதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ட்விட்டர் பதிவொன்றை மேற்கொண்டுகுறிப்பிட்டிருந்தார்.

06

# இறைவரித் திணைக்களத்துக்கு ரூ. 494.9 பில்லியன் வருமானம்

### ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் நெருக்கடி சூழ்நிலையிலும் தேசிய வருமான வரி திணைக்களம் கடந்த ஆண்டில் 49,490 கோடி ரூபாவை வருமானமாக பெற்றுக் கொண்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி எச்.எம்.டபிள்யூ.சி. பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் இறைவரி திணைக்களம் பெற்றுக்கொண்டுள்ள வருமானமானது 2020 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 7500 கோடி அதிகமானது என்றும் அது 18 வீத அதிகரிப்பை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வருமான வரி மூலமே அதிக வருமானம் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் அது 258.5 பில்லியனாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் வற் வரியாக 190 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

90 வருட வரலாற்றைக் கொண்ட தேசிய வருமான வரி திணைக்களமானது இந்த வருடத்தில் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவித்த அவர், 1067.8 பில்லியனை இம்முறை வருமானமாக எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ)

# சாரதி அனுமதிப் பத்திரங்கள்; காலாவதி தினங்களில் மாற்றம்

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாகும் தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுப்படியாகும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன சட்டத்துக்கமைய போக்குவரத்து அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் “2021 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிலிருந்து 2022 மார்ச் மாதம் 31 ஆம் திகதி இறுதிவரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சகல சாரதி அனுமதிப் பத்தரங்களினதும் செல்லுப்படியாகும் காலம் காலாவதியான தினத்திலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தினம் மற்றும் நேரத்தை ஒதுக்கிகொள்ளும் சேவையினூடாக, நாளொன்றை ஒதுக்கிகொள்ளும்போது குறைந்தப்பட்சம் 13 நாட்களுக்கு பின்னரே தினமொன்று வழங்கப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

### A/L வினாத்தாள் திருத்த

# ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்கலாம்

பரீட்சைகள் திணைக்களமானது 2021 உயர்தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தல் பணிகளுக்கான விண்ணப்பங்களை ஒன்லைன் ஊடாக கோரியுள்ளது.

ஆசிரியர்கள் www.doenets.lk அல்லது அமைச்சின் கையடக்க தொலைபேசி அப்ளிகேஷன் DOE மூலம் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

ஒருவர் தனது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க தனது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிட வேண்டுமென பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஜனவரி 20ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

### பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும்

# அரச துறைக்கு நீதி வழங்க அரசு பின்னிற்கவில்லை

### இதுவொரு சாதனை என்கிறார் அமைச்சர் டலஸ்



பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அரச துறைக்கு நீதி வழங்குவதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை பாரிய சாதனையென அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

உலகமே கொரோனா தொற்றுக்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் வேளையில் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதையிட்டு ஜனாதிபதி மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

கம்புருபிட்டியவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# புல்மோட்டை வலத்தாமலை பகுதியில் சேற்றுக்குள் புதையுண்ட சடலம் மீட்பு

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை புல்மோட்டை வலத்தாமலை சேற்றுப் பகுதியில் ஆணொருவரின் சடலமொன்று நேற்று (07) காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த சின்னவன் என்றழைக்கப்படும் ஜெமீல் நிஸ்வர் (21வயது) எனவும் தெரியவருகின்றது.

இப் பிரதேசத்திலுள்ள சேற்றில் சடலமொன்று காணப்படுவதாக வயலுக்குச் சென்ற காவலாளியொருவர் குச்சவெளி பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலையடுத்து இச்சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சடலத்தை பார்வையிடுவதற்காக திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் ஏ.எஸ்.சாஹிர் சம்பவ இடத்துக்கு சென்றதுடன் சடலத்தை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனையை முன்னெடுக்குமாறு கட்டளையிட்டார்.

இருந்த போதிலும் தனது கணவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தாக பொலிசார் கைது செய்வதற்கு வீட்டுக்கு வந்ததாகவும் இதேவேளை அவர் தப்பி ஓடியதாகவும் இதனையடுத்து நானும் கணவரும் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது யான் ஓயா பாலத்தை அண்மித்த பகுதியில் பஸ்ஸை மறைத்து தனது கணவரை பொலிஸார் கைது செய்ய

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மார்கழி மாதம் 24ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 04

### குறள் தரும் சிந்தனை



நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாகும்.
தீய ஒழுக்கம் என்றும் துன்பத்தைத் தரும்.

# கொவிட் ஏற்படுத்திய தாக்கங்களை மறந்து செயற்படும் எதிரணி!

உலகின் பல நாடுகளில் கடந்த சில மாதங்களாக தணிவுக்கு வந்திருந்த கொவிட் தொற்று சமீப தினங்களாக திடீர் அதிகரிப்பைக் காட்டத் தொடங்கியுள்ளது. ஒமிக்ரோன் தொற்றானது வேகமாகப் பரவுகின்ற போதிலும், அதனால் ஓரிரு உயிரிழப்புகளே சம்பவித்துள்ளன. எனினும் ஏற்கனவே பரவியுள்ள கொவிட் தொற்று இப்போது அதிகரிப்பைக் காட்டுகின்றது.

கொவிட் அலை மீண்டும் உருவெடுக்குமென்று சர்வதேச மருத்துவ நிபுணர்களும், உலக சுகாதார நிறுவனத்தினரும் தொடர்ச்சியாக எச்சரிக்கை செய்து வருகின்றனர். சில நாடுகளில் கொவிட் தொற்று பரவலில் அதிகரிப்பைக் காணவும் முடிகின்றது. அந்நாடுகள் கொவிட் கட்டுப்பாடுகளையும் மக்களுக்கு விதித்திருக்கின்றன. சில நாடுகளில் பகுதியளவிலான முடக்கநிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இன்றைய நிலைமையை உலகம் அலட்சியம் செய்து விட முடியாது.

உலகளவில் நோக்குகின்ற போது கொரோனாவின் தாக்கமானது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி நிலைமைக்கு வந்துள்ளதென்பதை மறுப்பதற்கில்லை. கொரோனா தொற்றுகின்ற வேகமும், உயிரிழப்புகளும் பெருமளவில் குறைந்திருக்கின்றன. ஆனாலும் அவ்வப்போது உருவெடுக்கின்ற புதிய பிறழ்வுகளே அச்சம் தருகின்றன. அவ்வாறான பிறழ்வுகளில் ஒன்றுதான் இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற ஒமிக்ரோன்.

உலக நாடுகள் கொரோனாவின் அலைகள் பலவற்றைத் தாண்டி வந்துள்ளன. உலகம் பல மில்லியன்கணக்கான உயிர்களை இதுவரை பறிகொடுத்தும் விட்டது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கு அல்ல. எமது நாடும் பல்லாயிரம் உயிர்களைப் பறிகொடுத்து விட்டது. நாம் இதுவரை கொரோனாவின் மூன்று அலைகளைத் தாண்டி வந்திருக்கின்றோம். அவற்றின் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டெழுவதற்கு எமது நாடு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. பல்வேறு துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றின் தீவிரத் தன்மையை எமது நாடு கட்டுப்படுத்தி விட்டதே தவிர, பல்வேறுதுறைப் பாதிப்புகளில் இருந்தும் இன்னுமே மீண்டெழவில்லையென்பதே உண்மை. கொவிட் தொற்று எமது நாட்டை விட்டு முற்றாக நீங்கினாலும் கூட, அது ஏற்படுத்திய பாதிப்புகளிலிருந்து மீண்டெழுவதென்பது இலகுவான காரியம் அல்ல. அதற்கு சில வருடங்கள் செல்லக் கூடுமென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

கொரோனா ஏற்படுத்திய பொருளாதார வீழ்ச்சியின் பாதிப்புகள் இலங்கையில் மாத்திரமன்றி மற்றைய நாடுகளிலும் தற்போது உள்ளன. அனைத்து நாடுகளுமே முன்னைய நிலைமைக்குத் திரும்புவதற்காக பெரிதும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த இரண்டு வருட காலத்தில் நிலவிய பின்னடைவில் இருந்து மீண்டெழுந்து முன்னைய நிலைமைக்கு வந்து விடுவதென்பது சுலபமான காரியமல்ல என்பதை நாம் அனைவரும் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கொவிட் தொற்றின் விளைவையே எமது நாடு இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. எமது அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதன் காரணமாக வாழ்க்கைச் செலவும் அதிகரித்து விட்டது. சாதாரண மக்கள் இதனால் சிரமப்படுகின்றார்கள். இந்த நெருக்கடிக்கான உண்மைக் காரணம் எதுவென்பதை கற்றறிந்த மக்கள் நன்கறிவர். ஆனால் அரசுக்கு எதிரான சக்திகள் இன்றைய நெருக்கடியை தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியபடி அரசாங்கம் மீது குற்றம் சுமத்துவதிலேயே கண்ணுங்கருத்துமாக உள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியினர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினர் போன்றோரும், அவர்களுக்கு ஆதரவான கட்சிகளும் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாக அரசு மீதே குற்றம் சுமத்துகின்றனர். கடந்த இரு வருட காலத்தில் கொவிட் பெருந்தொற்று காரணமாக நாடே முடங்கிப் போயிருந்ததை அவர்கள் மறந்தபடி பேசுகின்றனர். ஊரடங்கு மற்றும் முடக்க காலத்தில் மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய நிதியுதவிகள் மற்றும் உணவுப் பொதிகள் போன்றவற்றைப் பற்றி எதிரணியினர் பேசுவதில்லை.

முடக்க காலத்தின் போது மக்களுக்கு வழங்கிய நிவாரணங்கள் மற்றும் பண உதவிகளுக்காக செலவிடப்பட்ட பெருந்தொகைப் பணம் குறித்து எதிரணியினர் பேசுவதாக இல்லை. கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும், மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காகவும் அரசாங்கம் பெருமளவு நிதியைச் செலவிட்டதன் காரணமாகவே இன்று இவ்வாறான பொருளாதார நெருக்கடியை நாடு சந்திக்க வேண்டியுள்ளதென்பதை எதிரணியினர் மக்களுக்குச் சொல்வதில்லை.

அரசு மீது குற்றம் சுமத்துவதிலேயே எதிரணியினர் கண்ணுங்கருத்துமாக உள்ளதைக் காண முடிகின்றது. அது மாத்திமன்றி அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டும் விதத்தில் ஆர்ப்பாட்டங்களையும் எதிரணியினர் ஏற்பாடு செய்வதையும் காண முடிகின்றது. எதிரணியினரின் இவ்வாறான செயற்பாடுகள் உண்மையிலேயே சுயநலத்தின் வெளிப்பாடுகளாகும். அவர்களது உள்நோக்கத்தை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# விமானம் மூலம் உலகை வெல்லப் போகும் சாரா!

## உலகம் பூராகவும் சுற்றி வரும் சாதனைப் பயணத்தில் இலங்கை வந்தடைந்த இங்கிலாந்து யுவதி

பத்தொன்பது வயது யுவதியினால் உலகம் பூராவும் பயணம் செய்ய முடியுமா? எமது நாட்டில் என்றால் அந்த யுவதி உயர்தரக் கல்வியை நிறைவு செய்து இருப்பார். ஆனால் நாம் இங்கு குறிப்பிடும் 19 வயது யுவதி இலகுரக விமானம் ஒன்றில் ஏறி உலக சாதனை ஒன்றை நிகழ்த்த உலகம் பூராவும் பயணம் செய்கின்றார்.

அவர் சாரா ரதர்போர்ட். அவரின் திட்டமிட்ட விமான பயண தூரம் 51ஆயிரம் கிலோ மீட்டர் ஆகும். சாராவின் இலக்கு விமானம் மூலம் பயணித்து உலகம் பூராவும் சுற்றி வந்த மிகக் குறைந்த வயதான பெண் விமானி என்னும் சாதனையை படைப்பதாகும். இதற்கு முன்னர் இந்த சாதனைக்குரியவர் தனியாக உலகை சுற்றிய 33 வயதான அமெரிக்கரான பெண் விமானி சேஸ்டா வைஸ் (Shasta Wais) ஆவார்.

அவர் இந்த சாதனையை 2017ஆம் ஆண்டு நிகழ்த்தினார். குறைந்த வயது இளைஞர் ஒருவரும் இதற்கு முன்னர் தனியாக பயணம் செய்துள்ளார் .அது 2018ஆம் ஆண்டு .அந்த சாதனையை நிகழ்த்தும் போது அவருக்கு வயது 18 ஆகும். அவர் மேஷன் என்ட்ரூ (Mason Andrews) ஆவார்.

சேஸ்டா வைஸின் சாதனையை முறியடிக்கும் எண்ணத்துடன் சாரா தனது 51ஆயிரம் கிலோமீட்டர் பயணத்தில் 5 கண்டங்களை கடக்கவுள்ளார். ஐக்கியக் குடியரசு ,ரஷ்யா மற்றும் கொலம்பியா உள்ளிட்ட 52 நாடுகளில் அவர் தரை இறங்கவுள்ளார். அவர் இரண்டு தடவைகள் பூமத்திய ரேகையை கடக்கவுள்ளார். ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி மேற்கு பெல்ஜியத்தின் KortrijkWevelgem விமான நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பயணத்தை மூன்று மாத காலத்திற்குள் நிறைவு செய்ய அவர் திட்டமிட்டிருந்தாலும் தற்போது அத்திட்டம் மாற்றமடைந்துள்ளது. சீரற்ற காலநிலையாலும் அவர் தரை இறங்க திட்டமிட்டிருந்த சில நாடுகளில் விசா கிடைக்காததாலும் அவர் திட்டமிட்டிருந்த காலத்தை நீடிக்க வேண்டி நேரிட்டது.

சாராவை பற்றி நாம் இவ்வளவு ஆராய்வதற்கு காரணம் அவர் தனது ஸாக்.எல். யூ வகையான இலகுரக விமானத்தை இயக்கி கடந்த 28ஆம் திகதி 40வது தங்குமிடமாக இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்தார் என்பதனால் ஆகும். விமான நிலைய அதிகாரிகள் அவரை வரவேற்றார்கள்.

சாரா இரண்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்தார். கடந்த 30 ஆம் திகதி அதிகாலையில் அவர் இந்தியாவின் கோயம்புத்தூரை நோக்கி பயணமானார். இங்கு தங்கியிருந்த இரண்டு நாட்களும் அவர் மகிழ்ச்சியாக ஓய்வெடுத்துக் கொண்டார். 5 மணிநேர விமானப் பயணத்தின் பின்னர் அவருக்கு ஓய்வு தேவைப்பட்டது .சிவில் விமான அதிகார சபை, இரத்மலானை விமான நிலைய பணிக்குழுவினர் மற்றும் விமானப்படையினர் அவரை வரவேற்ற விதம் குறித்தும் அவருக்கு வழங்கிய நினைவுப்பரிசு குறித்தும் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

"நீங்கள் என்றாவது உலக பயணம் ஒன்றை மேற்கொண்டால் கட்டாயமாக இலங்கையை ஸ்பரிசியுங்கள்." என்னும் செய்தியை உலக மக்களுக்கு தெரிவித்தார். இலங்கை தேநீரின் சுவையையும் இலங்கையின் அழகான இடங்களையும் அவர் மிகவும் ரசித்தார்.







சாரா 2022ஆம் ஆண்டு பிறந்தார் .தற்போது அவருக்கு வயது 19 .இங்கிலாந்தின் வின்செஸ்டரில் பிறந்த அவர் தற்போது பெல்ஜியத்தில் வசிக்கின்றார். சாராவின் தந்தை பெல்ஜிய தேசிய விமானவோட்டியாவார். அவர் ஷாம் ரதர்பேட். தாயார் பியற்றிஸ் டீ ஸ்மேட். அவரும் விமானியே. அவரும் பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளார். சட்டத்தரணியான அவர் பின்னர் விமான ஓட்டியாக பயிற்சி பெற்று இத்தாலி ,பிரான்ஸ் ,போட்ஸ்வானா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற பல நாடுகளில் வசித்துள்ளார். அவர் இலகுரக விமானம் மூலம் தென் ஆபிரிக்கா முழுவதும் பயணித்துள்ளதுடன் சஹாரா பாலைவனம் ஊடாக மேற்கு மற்றும் தென் ஆப்பிரிக்கா முழுவதும் போ வீல் ஜீப் வண்டியை செலுத்தியுள்ளதுடன் பயணங்களின் புகைப்படங்களைத் தொகுத்து புகைப்பட விவரணத்திலும் ஈடுபட்டுள்ளார். 14 வயதிலேயே தனது விமானமோட்டும் அனுபவத்தை பெற்றுக் கொண்டதோடு 2020ஆம் ஆண்டு தனது அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக் கொண்டார். அவ்வேளையில் அவருக்கு வயது 17 ஆகும்.

அவரைப் போன்றே அவரது விமானமும் மிகவும் இலகுவானது. உலகத்தில் இலகு ரக விமானங்களில் மிக வேகமாக பயணிக்கும் விமானமாகும்.320 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கக் கூடியது.

மேற்கு பெல்ஜியத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவர் தனது பயணத்தை பற்றி உலகிற்கு கூறினார்.flyzolo.com இணையத்தளம் பின்வருமாறு குறிப்பிட்டுருந்தது.

"நான் சாரா. எனக்கு வயது 19. 2021 ஓகஸ்ட் 18ஆம் திகதி நான் சிறிய ரக விமானம் மூலம் தனியாக உலகம் பூராவும் பயணம் செல்ல தீர்மானித்துள்ளேன். எனது பயணம் வெற்றி அடைந்தால் இளவயதில் உலகை சுற்றிய பெண் என்ற கின்னஸ் சாதனைக்கு உரியவளாவேன். "

பெண் பிள்ளைகளும் மற்றும் யுவதிகளும் தங்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கு ஊக்குவிப்பதே எனது இந்த பயணத்தின் தேவையாகும். நாம் சிறுவயதில் கேட்கும் தேவதைக் கதைகளில் வீரம் மிகுந்த இளவரசர்களே காணப்படுவார்கள். ஒரு கதையில் தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து 'சிலீப்பிங் பியூட்டியை' விடுதலை செய்வார். இளவரசர் வந்து காப்பாற்றும் வரை இளவரசி காத்திருப்பார். சிறுவயதில் எமக்கு பொம்மைகள் கிடைக்கும் போது ஆண் பிள்ளைகளுக்கு கணித மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை பெறக் கூடிய விளையாட்டுப் பொருட்கள் கிடைத்தன. இந்த எண்ணம் மாற்றப்பட வேண்டும் என நான் எண்ணினேன். இந்த உலகம் பூராவும் பயணிக்கும் பயணத்தின் மூலம் நான் எதிர்பார்ப்பது விமான சேவை போன்று விஞ்ஞானம் ,தொழில்நுட்பம் ,பொறியியல் விஞ்ஞானம் மற்றும் கணிதம் போன்ற துறைகளில் ஈடுபடும் பெண்களுக்கு ஊக்கமளிப்பதேயாகும். அதன்மூலம் அத்துறைகளில் ஈடுபடுபவர்களிடையே ஆண், பெண் பேதங்களை களைவதாகும்.

இச்சிறிய பெண் அவ்வாறான பெரிய செய்தியொன்றை எடுத்துக்கொண்டு உலகம் பூராகவும் பறக்கின்றார். பயணத்தை முடித்துக் கொண்ட பின்னர் உயர் கல்விக்காக பல்கலைக்கழகம் செல்லவுள்ளார். உலகை சுற்றும் அவரது அடுத்த விருப்பம் விண்வெளி பயணத்தை மேற்கொள்வதாகும்.

டானியா மோசஸ்...
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# உலக நாடுகளால் பரபரப்பாக உற்றுநோக்கப்படும் சீன வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு வருகை

இப்புத்தாண்டில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ தன் ஐந்து நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளார். கிழக்கு ஆபிரிக்கா, கென்யா, எரித்ரியா ஆகிய ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்யும் அவர், மாலைதீவுக்கும் இலங்கைக்கும் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார். இவ்வாண்டில் இலங்கை வரும் முதல் வெளிநாட்டு உயர்மட்ட அரசியல் பிரமுகர் இவராகவே இருப்பார்.

சீனா இலங்கையின் நட்பு நாடு என்ற வகையிலும், இலங்கையில் பெருமளவு முதலீடுகளைச் செய்திருக்கும் நாடு என்ற வகையிலும் வெளிவிவகார அமைச்சரின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இலங்கை அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது. இதேசமயம் இவ்விஜயத்துக்கான அரசியல் மற்றும் இராஜதந்திர காரணங்கள் எவையாக இருக்கக் கூடும் என்ற ஊகம் இப்பிராந்திய வட்டாரங்களில் எழுந்துள்ளது. நிச்சயமாக இந்தியா இப்பயணத்தை வெகு உன்னிப்பான கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்பது மிகையல்ல. குவாட் நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவற்றின் கவனத்தையும் இப்பயணம் ஈர்க்கவுள்ளது.

இழுபறியில் இருந்து வந்த திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு சுமுகமான முடிவு காணப்பட்டு 61 குதங்களை 51 49 பங்குகள் என்ற அடிப்படையில் புதிய நிறுவனமொன்றின் கீழ் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதேசமயம் இலங்கைக்கு இந்தியா பெருமளவு டொலர்களைக் கடனாக வழங்கவும் முன்வந்துள்ளது.

சமீப காலமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு நெருக்கமடைந்திருப்பதோடு, பொருளாதார ரீதியான உடன்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பின்னணியில் பார்க்கும் போது இந்தியா இலங்கையில் சமீப காலமாக மேற்கொண்டு வரும் நகர்வுகளுக்கு மாற்றாக தமது அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் இவ்விஜயத்தின் பின்னணியாக அமையலாம் என்பது அரசியல் அவதானிகளின் ஆருடமாக உள்ளது.

இவ்விஜயம் வழமையானது, பரஸ்பர கௌரவத்தை மேலும் உயர்த்துவது என்றெல்லாம் இராஜதந்திர வார்த்தைப் பிரயோகங்கள் சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தை விளக்குவதற்கு பயன்படுத்தப்பட்டாலும், இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஸென்ஹொங்கின் சமீபகால நடவடிக்கைகளையும் இவ்விஜயத்தோடு பொருத்திப் பார்க்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. சமீப காலமாக இலங்கையின் உள்விவகாரங்களில் அவர் தன் ட்விட்டர் பதிவுகளில் கருத்து தெரிவித்து வருகிறார்.

சமீபத்தில் யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்து உலர் உணவுப் பொருட்கள், நூல்கள் என்பனவற்றை வழங்கியதோடு தமது உதவும் பணி தொடரும் எனவும் கூறியிருந்தார். அவர் தலைமன்னார் சென்று அங்கிருந்து இராமர் பாலத்தையும் பார்வையிட்டார். கடந்த மாத இறுதியில் தென்மாகாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். சீனத் தூதுவர் இவ்வாறான விஜயங்களை மேற்கொள்வதும் மக்களை சந்திப்பதும் முன்னர் நிகழாதவை.

பருத்தித்துறைக்கும் இராமர் பாலத்துக்கும் அவர் மேற்கொண்ட விஜயங்களும் உபயோகித்த சொற்களும் இந்தியாவுக்கு சமிக்ஞைகளை விடுத்ததாகவே இராஜதந்திர ரீதியாக அறியப்படுகிறது. இத்தகைய சூழலிலேயே சீன வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வருகிறார்.



**சமீப காலமாக இலங்கை–இந்திய உறவுகள் நெருக்கமடைந்து வருகின்ற வேளையில், சீனா தனது அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை இலங்கை மீது மேம்படுத்துவதில் கூடுதல் நாட்டம்!**



இலங்கையின் நெருங்கிய நண்பனான சீனாவின் உயர்மட்ட அமைச்சரின் வருகை என்றும், சீன இலங்கை இறப்பர் ஒப்பந்தம் நிகழ்ந்து 70 ஆண்டுகள் ஆகின்றமை, சீன இலங்கை இராஜாந்திர உறவு ஏற்பட்டு 65 ஆண்டுகளாகின்றமை என்ற வகையிலும் இப்பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறப்பட்டாலும், இவ்விரு நாடுகளுக்கு இடையே காணப்படும் சில பிரச்சினைகளைத் தீர்ப்பதும் இப் பயணத்தின் நோக்கமாக இருக்கலாம்.

சீன இலங்கை உறவில் சீன உரக்கப்பல் விவகாரம் பாதிப்பை ஏற்படுத்தி இருப்பது கண்கூடு. உரம் ஏற்றி வந்த கப்பலில் உள்ள உர மாதிரி பரிசோதிக்கப்பட்டதும், அதில் காய்கறி விவசாயத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நுண்ணுயிர்கள் இருப்பதாக தெரியவந்ததையடுத்து அக்கப்பல் திருப்பி அனுப்பப்பட்டதும், அக்கப்பல் திரும்பிச் செல்லாமல் களுத்துறைக்கு அப்பால் கடலில் தரிந்து நின்றதும் நாம் அறிந்தவையே.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் அக்கப்பலில் இருந்த உரம் பாவனைக்கு உதவாது என்பது நிரூபணமான பின்னரும் இலங்கை சீனத் தூதரகம் விடாப்பிடியாக நடந்து கொண்டதாகும். இது தூதரக இராஜதந்திரத்துக்கு உவப்பானதாக இருக்கவில்லை என்பதாகும். அக்கப்பலில் வந்த உரத்துக்கான கொடுப்பனவை செலுத்துவதற்கு மக்கள் வங்கிக்கு நீதிமன்றம் தடை விதித்ததும் சீனத் தூதரகம் ஆத்திரமடைந்து மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்து பழி தீர்த்துக் கொண்டது.

மக்கள் வங்கி செய்ததெல்லாம் நீதிமன்றக் கட்டளைக்கு அடிபணிந்தது மட்டும் தான். ஒரு நட்பு நாட்டின் அரச வங்கியை கறுப்புப் பட்டியலில் அதுவும் நீதிமன்ற தீர்ப்பின்படி நடந்த ஒரு வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதும் சீன வர்த்தகர்கள் அவ்வங்கியை பயன்படுத்தக் கூடாது என அறிவிப்பதும் இராஜதந்திர உலகில் நல்ல முன்மாதிரி அல்ல. தற்போது அத்தடை நீக்கப்பட்டு கொடுப்பனவு வழங்கப்பட ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந் உரம் மீளவும் இலங்கைக்கு வருமா என்று தெரியவில்லை. விவசாயிகளால் நிராகரிப்புக்கு உள்ளாகியுள்ள ஒரு சேதனப் பசளைக்கு விலை கொடுக்கப்படும் போது அது மக்களின் பணம் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதேபோல இலங்கை அரசாங்கம் மின்சார உற்பத்தியின் பொருட்டு யாழ்ப்பாணத்தை அண்டிய மூன்று தீவுகளில் சீனாவுக்கு இடம் அளிக்க சம்மதம் தெரிவித்திருந்தது. பின்னர் இந்தியாவின் அழுத்தத்தையடுத்து அத்திட்டத்தை சீனா கைவிட வேண்டியதாயிற்று. இவ்விடயத்தில் இந்தியாவின் அச்சங்கள் நியாயப்படுத்தக் கூடியவையே.

பருத்தித்துறை கரையில் நின்றபடி "இந்தியா இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று சீனத் தூதர் வினவியதை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். மேலும் கொழும்பு துறைமுகத்தில் சில ஏக்கர் காணியை சீனாவுக்கு வழங்குவதாக வெளியான தகவலையடுத்து துறைமுக தொழிற்சங்கங்களும் ஜே.வி.பியும் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டன. அக்காணி தொடர்பாக இதுவரை முடிவு எட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இவை தவிர, கொழும்பு துறைமுக நகரம், இன்னும் திறக்கப்படாமல் விடப்பட்டிருக்கும் தாமரைக் கோபுரம் உட்பட சில விஷயங்களில் பிரச்சினைகள் காணப்படுவதாகத் தெரிகிறது. இவற்றைப் பற்றி பேசி பிரச்சினைகளைத் தீர்ப்பதை முதன்மையாகக் கொண்டே சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை வருகை அமைகிறது என்று அவதானிகள் கருதுகின்றனர்.

இலங்கை சீனாவின் நட்பு நாடு மாத்திரமல்ல, இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனா முன்னெடுக்கவுள்ள கடல் பட்டுப்பாதை திட்டத்தில் இலங்கை ஒரு முக்கிய இடத்தை வகிப்பதாகவே சீனா கருதுகிறது. இதற்கு எதிராகவே அமெரிக்காவின் தலைமையில் ஜப்பான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்துள்ளன. எனவே இலங்கையின் உறவு சீனாவுக்கு பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்தது.

# மண்கும்பானில் படகு கட்டும் தொழிற்சாலை; அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்துவைப்பு

**யாழ். மண்கும்பான் பிரதேசத்தில் அமைக்கப் பட்டுள்ள படகு கட்டும் தொழிற்சாலை மற்றும் பயிற்சி நிலையம் என்பன கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டன.**

வெளிநாட்டு மற்றும் இலங்கை தனியார் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ள குறித்த படகு கட்டும் தொழிற்சாலை மூலம் மண்கும்பான் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன் பிரதேசத்தின் வளர்ச்சிக்கான பொருளாதார நன்மைகளும் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2009 இற்கு பின்னரான சூழலில் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்திகளை உருவாக்கி, அழிந்த வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப வேண்டும் என்ற வேலைத் திட்டத்தின் வெளிப்பாடாக இவ்வாறான தொழிற்பேட்டைகள் எமது பிரதேசங்களில் தற்போது உருவாகி வருவதாக இந்த படகு கட்டும் தொழிற்சாலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் தீவக பகுதியில் வேலைவாய்ப்பு இன்றி காணப்படும் இளைஞர், யுவதிகளின் தொழில் முயற்சிக்கான வாழ்வாதாரத்தின் பெற்றுக் கொடுக்க சுற்றுலாத்துறையின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"கடற்பரப்பில் துரித அபிவிருத்தி சேவையிலான பங்களிப்பினை வழங்க தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்த நிலையில், இதற்கான நடவடிக்கை அரசாங்கத்தினால் முன்னேடுக்கப்பட்டுள்ளது. அதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு மிகுந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்" எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் இலங்கை கப்பற்துறை கூட்டுத்தாபனத்தின் தலைவர் வீரமன்னன் ராஜவே, வடபிராந்திய கடற்றொழில் கட்டளைத் தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா, யாழ் இந்திய உதவித் துணைத் தூதரகத்தின் பதவிநிலை அதிகாரி டீ.கேசர், வேலணை பிரதேச சபையின் தலைவர் கருணாகரகுருமூர்த்தி மற்றும் அதிகாரிகள், சுற்றுலாத் துறை அதிகாரிகள், வேலணை பிரதேச







சபையின் உறுப்பினர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே படகு கட்டும் தொழிற்சாலை பணிகளுக்கான ஒரு வருடப் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

மண்கும்பானில் வெளிநாட்டு, உள்ளூர் தனியார் முதலீட்டாளர்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் தொழிற்சாலைக்கான பணியாளர்களாக பிரதேச இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிப்பதற்கு முதலீட்டாளர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சுமித்தி தங்கராசா...**
(யாழ் குறூப் நிருபர்)

# பசும்பால் பாவனைக்கு மக்களை ஈர்க்கும் திட்டம்

**2022 ஆம் ஆண்டுக்கு இடுகை வளங்கள் அபிவிருத்திக்காக அரசாங்கம் 1000 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. இது தொடர்பில் விளக்கமூட்டும் முதலாவது அமர்வு வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் இடுகை வளங்கள் பண்ணை ஊக்குவிப்பு , பால் மற்றும் முட்டை உள்ளிட்ட தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் பங்குபற்றுதலுடன் பொலன்னறுவை சந்திரமண்டல விழா மண்டபத்தில் நடைபெற்றது.**

இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாட்டுக் கொட்டில்களை அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கமாகும். அதனூடாக உள்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தேசிய பசும்பால் பழக்கத்திற்கு மக்களை ஈர்ப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இதன் மூலம் பால்மா இறக்குமதி நிறுவனத்திற்கு அதிகமாக செலவு செலவாகின்ற டொலரின் அளவை மீதப்படுத்துவதுடன், பால்மா மூலம் ஏற்படும் வியாதிகளில் இருந்தும் மக்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்கு இணைவாக வட மத்திய மாகாண சபை மூலம் நான்கு வேலைத்திட்டத்தின் கீழ் இதற்கு பங்களிப்பு வழங்கப்படவுள்ளன. இதன் கீழ் 1500 பால் பண்ணைகள் அபிவிருத்தி செய்யப்படுவதன் மூலம் மூன்று வருடத்தினுள் ஒரு பண்ணையில் இருந்து நாளொன்றிற்கு 100 லீட்டர் திரவப் பால் உற்பத்தி செய்வதே இதன் நோக்கமாகும். அதன் மூலம் வடமத்திய மாகாணத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதுடன் தற்போது நாடளாவிய ரீதில் பால் உற்பத்தியில் 03 ஆம் இடத்தில் உள்ள வட மத்திய மாகாணத்தை இரண்டாம் இடத்திற்கு முன்னோக்கி கொண்டு வருவது மற்றுமொரு நோக்கமாகும்.

அதன் மூலம் மாகாணத்தில் வாழ்கின்ற மக்களின் ஊட்டச்சத்துநிலை விருத்தி செய்யப்படும். திடமான பண்ணை உற்பத்தி வேலைத்திட்டத்தின் மூலம் இரண்டாவது கட்டத்தின் ஊடாக வடமத்திய மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பண்ணையாளர்களுக்கு மூன்று கறவைப் பசுக்கள் மற்றும் 20 கோழிக் குஞ்சுகளும் வழங்கப்படவுள்ளன.பால் மற்றும் முட்டை உற்பத்தி துறையின் மூலம் பண்ணை குடும்பங்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும்.

இரண்டாவது நோக்கு பண்ணையாளர்களுக்குத் தேவையான சேதனப் பசளைகளை அவர்களின் தோட்டத்திலேயே உற்பத்தி செய்வதன் மூலம் பசுமை விவசாய வேலைத் திட்டத்தினை மேம்படுத்துவதாகும்.





மூன்றாவது திட்டத்தின் கீழ் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கு முட்டை காப்பீட்டு நிறுவனம் அனுராதபுரம், திறப்பனை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படும். இதுவரைக்கும் வடமத்திய மாகாணத்தில் அவ்வாறான உற்பத்தி ஆலை இல்லாமையினால் வேறு மாகாணங்களில் இருந்து கொழிக் குஞ்சுகளை வாங்க வேண்டியிருந்தது.

நான்காவது திட்டத்தின் மூலம் பால் உற்பத்திக்கு மேலதிகமாக இடைக்கால திட்டமாக யோகட், மேன்மை பால், சீஸ், மற்றும் பட்டர் உள்ளிட்ட உற்பத்திகள் தொடர்பில் மாகாணத்தில் தொழில் முனைவோர் பயிற்சி நிலையம் ஒனறு ஆரம்பிக்கப்படும். இதுவரைக்கும் குறித்த பயிற்சிக்கு மாகாணத்தில் நிறுவனம் ஒன்றில்லாத குறைபாடு இதன் மூலம் நிறைவடையும்.

கறவைப் பசுக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதுடன் அதன் மூலம் நாளொன்றிற்கு 70,000 லீற்றர் பால் உற்பத்தியை அதிகரிப்பதனால் மாதம் ஒன்றுக்கு 36 மில்லியன் லீற்றர் பாலை பெற முடியும்.

## பால்மா பயன்பாட்டால் மக்களுக்கு ஏற்படுகின்ற வியாதிகளை தவிர்த்து, டொலரை மீதப்படுத்தவும் நடவடிக்கை

**மதார் தம்பி ஆரிப்...**
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# அம்பலந்துவை கிராம அபிவிருத்திக்காக முன்னின்று உழைத்த மர்ஹூம் அப்துல் அஸீஸ் மஹ்ரூப் மாஸ்டர்

**பாணந்துறை, அம்பலந்துவை முஸ்லிம் கிராமத்தின் பல்துறை அபிவிருத்திக்காக தன்னலம் பாராது உழைத்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கிய பாணந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் மர்ஹூம் அப்துல் அஸீஸ் மஹ்ரூப் மாஸ்டரின் முதலாவது வருட நினைவு தினம் (8.1.22) இன்றாகும்.**

பாராளுமன்ற பிரதிநிதித்துவம், மாகாண சபை மற்றும் அம்பலந்துவை பிரதேசத்துக்கான தனியான உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதித்துவம் மற்றும் தனியான கிராம அதிகாரி பிரிவைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் களமிறங்கிய மஹ்ரூப் மாஸ்டர் விடாமுயற்சியுடன் செயல்பட்டு அதில் வெற்றி கண்டார். இதற்காக அமைக்கப்பட்ட அரச குழுக்கள் முன்னிலையில் தனது கருத்துக்களையும் வாதங்களையும் முன்வைத்த பெருமைக்குரியவரும் இவரேயாவார்.மேலும், பாராளுமன்ற மற்றும் மாகாண சபையில் களுத்துறை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவம் தொடர்பிலும் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டார்.

கிராம சபை உள்ளூராட்சி பரிபாலனத்தின் கீழ் இருந்த தனது கிராமத்தின் அபிவிருத்திக்காக அவர் ஊக்கத்துடன் பாடுபட்டார். முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்கார், இராஜாங்க அமைச்சர் மேர்வின் ஜே குரே, பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் நெவில் பெர்னாண்டோ, சட்டத்தரணி பத்மின் பொன்சேகா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் நெருக்கமான சினேகபூர்வமான தொடர்பாடல்களை முன்னெடுத்து தனது பிரதேசத்தின் அபிவிருத்திக்கான உந்துசக்தியாகவும் செயலாற்றினார்.



## முதலாம் வருட நினைவு தினம் இன்று

பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர் மற்றும் கட்டடத் தொழிலாளர்களுக்கான பயிற்சி மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளையும் பெற்றுக் கொடுத்தார்.எளிமையான குணாதிசயம் கொண்ட இவர் சகோதர இன மக்களுடன் இணக்கப்பாட்டுடன் சாணக்கியமாக செயல்பட்டு நல்லுறவுடன் பழகினார்.அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வைப்பதில் முன்னின்று செயலாற்றினார். தனது பிரதேச எல்லையில் வதியும் சகோதர இன மக்களுடன் நல்லெண்ணம் மற்றும் பொலிஸ் _பொதுமக்கள் நல்லுறவை வளர்ப்பதிலும் தூரதிருஷ்டியுடன் செயல்பட்டார்.

தாருல் குர்ஆன் ஹிப்ல் மத்ரஸாவை ஆண்கள், பெண்களுக்கான வெவ்வேறு பிரிவுகளாக ஆரம்பித்த முன்னோடிகளில் இவரும் ஒருவராவார். இவர் நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியர் பணியாற்றிய பின்னர் தனது பிறந்த ஊரின் இல்மா வித்தியாலயத்தில் உபஅதிபராக பணியாற்றிய நிலையில் ஓய்வு பெற்றார். இவரின் சிரேஷ்ட புதல்வரான பாணந்துறை முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் இல்மா முஸ்லிம் வித்தியாலய அதிபருமான சில்மி மஹ்ரூப் மற்றொரு புதல்வரான மாவட்ட நீதிமன்ற முன்னாள் சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளரும் ஆசிரியருமான சியான் மஹ்ரூப் ஆகியோர் தந்தையின் எண்ணக்கருவை முன்னெடுத்து வருகின்றனர்.

மர்ஹூம் அப்துல் அஸீஸ் மஹ்ரூப் தனது ஓய்வின் பின்னர்ஆன்மீகத் துறையில் தனது இறுதிக் காலம் வரையில் தவ்வாப் பணியில் ஈடுபட்டார். அன்னாரின் முதலாவது வருட நினைவு தினம் தொடர்பான பிரார்த்தனை நிகழ்வு இன்று இடம்பெறுகிறது.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# 'போதையற்ற தேசத்துக்கான சுதந்திர போராட்ட முன்னோடி' விருது பெற்ற றிப்தி அலி

**ஊடகவியலாளர் றிப்தி அலிக்கு 'போதையற்ற தேசத்திற்கான சுதந்திரப் போராட்ட முன்னோடி' எனும் விருது புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது.**



புகையிலை, புகைபிடித்தல் மற்றும் மதுசாரம் தொடர்பில் அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையத்தள ஊடகங்கள் ஊடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உழைத்து வரும் ஊடகவியலாளர்கள் இந்த அதிகார சபையினால் வருடாந்தம் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்கள்.

இதற்கமைய 2021ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நடைபெற்றது. இதன் போது 'விடியல்' இணையத்தளத்தின் ஆசிரியர் றிப்தி அலிக்கு தமிழ் மொழிக்கான விருது சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் வழங்கப்பட்டது.

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ஷ உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**றிசாத் ஏ காதர்...**

# சிறார்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதில் அரசு மும்முரம்

## -குருநாகலில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்யும் வகையில், தற்போது 18 வயதுக் குட்பட்ட சிறார்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்கு செல்லாத சிறார்களை பாடசாலைக்கு அனுப்பும் திட்டமொன்றையும் செயல்படுத்தி வருவதாக தெரிவித்த பிரதமர், பிள்ளைகளை பெற்றோர் போன்றே ஆசிரியர்களும் கண்காணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியின் புதிய மூன்று மாடிக் கட்டடத்தை நேற்று(06) திறந்து வைத்து உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொவிட்19 காரணமாக வீட்டில் இருந்த பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகி இருப்பதாக பெற்றோர்கள் முறையிடுகின்றனர். இதுகுறித்து மருத்துவர்கள்கூட எச்சரித்துள்ளனர். தொழில்நுட்பத்தினூடாக நன்மை ஏற்படும் அதேவேளை, தீமைகளும் உள்ளன.எனவே, தவறான வழியில் செல்லாது தொழில்நுட்பத்தினூடாக நன்மையை மாத்திரம் பெறுவதற்கு பிள்ளைகள் அறிந்துக்கொள்ள வேண்டும்.

சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்யும் வகையில், தற்போது 18 வயதுக்குட்பட்ட சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை சட்டப்படி தடை செய்துள்ளோம். அதேநேரம், பாடசாலைக்கு செல்லாத சிறார்களைக் கண்டறிந்து அவர்களை பாடசாலைக்கு அனுப்பும் திட்டமொன்றையும் செயல்படுத்தி வருவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில்**

# அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனம் மகஜர் கையளிப்பு



அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரக பதில் துணைத்தூதர் ராம் மகேஷை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்திய இழுவைப்படகுகள் தொடர்பிலான பிரச்சினையைப் பற்றி மகஜர் ஒன்றை கையளிப்பதற்காக நேற்று மாலை யாழ்ப்பாணம் மருதடி வீதியிலுள்ள இந்திய துணைத்தூதரகத்துக்கு வருகைதந்த அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே, தலைவர் நிஹால் கலப்பத்தி ஆகியோர் இந்திய துணைத் தூதரக பதில் துணைத்தூதர் ராம் மகேஷை சந்தித்து உரையாடினர்.

இதன்போது மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரும் கலந்துகொண்டிருந்தார்.

இந்த மகஜரில், சுமார் ஒரு தசாப்த காலமாக இலங்கையின் வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர் ஆக்கிரமிப்பு காரணமாக இலங்கையின் வடபகுதி மீன்பிடித் தொழில் முற்றாக சரிவடைந்துள்ளது.

இந்நிலை காரணமாக வடபகுதி சுமார் ஐம்பதாயிரம் மீனவர்களும், அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களான சுமார் இரண்டு இலட்சம் பேரும் முகம் கொடுக்கும் நிலைமை மிகவும் கவலைகரமானதாகும்.

இந்திய மீனவர்களின் செயற்பாட்டினால் இந்நாட்டு மீனவர்களுக்கும், படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கும் ஏற்படும் அழிவு நாளுக்கு நாள் அதிகரிப்பதோடு அவர்கள் பயன்படுத்தும் சட்டவிரோத 'இழுவைப் படகுத் தொழில் முறை காரணமாக கடலின் அடிபரப்புச் சூழலுக்கு ஏற்படும் அழிவு பாரியதொன்றாகும். இந்நிலமை காரணமாக இந்நாட்டு மீன்பிடித் துறைக்கு ஒரு வருடத்திற்கு சுமார் 1,000 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

அத்துடன் கடற் சூழலுக்கு ஏற்படும் அழிவை எடைபோட முடியாது. இவ்விடயம் குறித்து எமது நாட்டு உரிய பொறுப்பு வாய்ந்தோருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறியத் தந்தாலும், கண்டனங்கள், ஆர்பாட்டங்கள், பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தாலும் ஆக்கபூர்வமான எவ்வித தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாமல் சென்றுள்ளது.

இந்நாட்டு வடபகுதி மீன்பிடி தொழிற்துறைக்கும், மீனவர்களுக்கும் ஏற்படுத்தும் இந்த அழிவு தொடர்பாக இந்திய அரசுக்கு எமது கவலையை தெரிவிப்பதோடு இலங்கை மற்றும் இந்திய அரசுக்களின் பொறுப்புவாய்ந்தோர் தலையிட்டு துரிதமாக நிரந்தரமான தீர்வை பெற்றுக்கொடுக்கும் படி வலியுறுத்துகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புல்மோட்டை வலத்தாமலை... 03ஆம் பக்கத் தொடர்

முற்பட்டதாகவும் இதனையடுத்து கணவர் மீண்டும் தப்பி ஓடியதாகவும் நீதவான் முன்னிலையில் மனைவி தெரிவித்தார்.

அத்துடன் தன்னை வாகனத்தில் ஏற்றிச் சென்று திரியாய் சந்தியில் வைத்தியசாலைக்கு அருகில் இறக்கி விட்டு கணவர் வீட்டுக்கு வருவாரென பொலிசார் கூறியதாகவும், தனக்கு அருகில் நின்ற பொலிசாரின் உடையில் சேறு இருந்ததாகவும் இதனால் தனது கணவரை பொலிஸார் துரத்தி சென்றமையினாலேயே சேற்றில் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம் எனவும் மனைவி நீதிவான் முன்னிலையில் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்த நீதவான் உத்தரவிட்டதுடன் புல்மோட்டை பொலிஸ் நிலையத்தினால் விசாரணைகளை முன்னெடுக்குமாறு திருகோணமலை மாவட்டத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

### இரத்து செய்ய கோரி... 03ஆம் பக்கத் தொடர்

இந்த ஒப்பந்தத்தில் காணி ஆணையாளர் நாயகம், திறைசேரியின் செயலாளர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி மற்றும் Trinco Petroleum Terminal தனியார் நிறுவனம் ஆகியன கைச்சாத்திட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இதற்கமைய, 99 எண்ணெய் தாங்கிகளில் 85 எண்ணெய் தாங்கிகள் இலங்கைக்கும் ஏனைய 14 எண்ணெய் தாங்கிகள் இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### மக்கள் எதிர்நோக்கும்... 03ஆம் பக்கத் தொடர்

இருந்த இடத்திலேயே விமர்சித்துக் கொண்டிருக்கும் போது ஏன் விமர்சிப்பதற்கு முன்னர் செயற்பட முடியாது போனது என்பதை மக்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் எதிர்காலத்தையும், உங்களது எதிர்காலத்தையும் வெற்றியடைய செய்ய வேண்டும் என்பதே எமது நோக்கம். உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையை வெற்றியடைய செய்யுங்கள். அதற்கு நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழையுங்கள் எனத் தெரிவித்தார்.

### படகு மூலம் நாடு திரும்ப... 03ஆம் பக்கத் தொடர்

இதற்கமைய, சம்பவ இடத்திற்கு சென்ற கடலோர காவல்துறையினர் அந்த நபரைக் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (போல்ராஜ் சந்திரமதி)

### எதிராக போராட்டம்... 03ஆம் பக்கத் தொடர்

மீண்டும் நிகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் மற்றும் சில அமைச்சுக்கள் முன்பாக போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு அதிக நன்மை பயக்குமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### கொவிட் ...

அதேவேளை உலகளாவிய ரீதியில் பதிவான கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 54 இலட்சத்து 90 ஆயிரத்து 90 ஆக அதிகரித்துள்ளது.

### தன்னை...

அவரது கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அதனை நேற்று நிராகரித்தது.

### வெளிநாடுகளிலிருந்து வரும்...

நிலையத்தில் விஷேட கொவிட்19 தடுப்பூசி மையமொன்றை இலங்கை விமானப்படை ஸ்தாபித்துள்ளது.

24 மணி நேரமும் 7 நாட்களும் என்ற அடிப்படையில் இந்த விஷேட கொவிட்19 தடுப்பூசி மையம் நேற்று (07) முதல் செயற்படுவதாக இலங்கை விமானப் படையின் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்ஹ தெரிவித்தார். வெளிநாடுகளிலிருந்து விமானம் மூலம் வருகைத்தரும் இலங்கையர் முதலாவது, இரண்டாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ள முடியாமல் போனவர்கள் பைசர் தடுப்பூசியை விமான நிலையத்திலேயே மிக இலகுவாக பெற்றுக் கொள்ளும் பொருட்டே இந்த புதிய தடுப்பூசி மையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கைக்கு ஒத்துழைப்புகளை...

தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணுவதற்கு இணங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதற்காக, இரண்டு நாடுகளுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் இருதரப்பு வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடனுதவியை நீடிப்பது குறித்து, தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ், இலங்கையை முக்கியமான தரப்பாகக்கொண்டு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் புதுடில்லியில் நேற்று(06) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரதமர் மோடிக்கு அனுப்பவுள்ள...

கையெழுத்திட்ட நிலையில் ஏனைய தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இந்த ஆவணத்தில் கையெழுத்திடவில்லை.

இந்திய பிரதமருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள ஆவணத்தில் பல கட்சிகளின் தலைவர்கள் கையொப்பம் இட்டுள்ளதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா, தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனுடன் தாமும் ஆவணத்தில் கையொப்பமிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் வெளியில் இருந்து இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்குவதாக கூறியதாகவும் செல்வம் அடைக்கலநாதன் எம்பி தெரிவித்துள்ளார்.

### மார்ச் 04 இல் மீண்டும் ...

திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

2015 ஆம் ஆண்டு பிணை முறி மோசடி தொடர்பான வழக்கு நீதியரசர்களான சம்பா ஜானகி ராஜரத்ன, தமித் தொட்டவத்த மற்றும் நாமல் பலல்ல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி பிணைமுறி மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரான அர்ஜூன் மகேந்திரன் உள்ளிட்ட 10 பிரதிவாதிகளுக்கு எதிராக 23 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

### தாக்கத்தை குறைத்து ...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஒமிக்ரோன் தொற்றுறுதியாகும் நபர்களின் எண்ணிக்கையானது, சுகாதாரக் கட்டமைப்புக்கு கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்துவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரொஸ் அதனம் கெப்ரியேஸஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை, அமெரிக்காவில் 10 இலட்சத்துக்கும் அதிகமான கொவிட் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த நிலையில், உலகளாவிய ரீதியில் கடந்த வாரம் தொற்றாளர்களின் எண்ணிக்கை 71 சதவீதத்தினாலும், அமெரிக்காவில் 100 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் சுகாதார முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. குறித்த காலப்பகுதியில் உலகெங்கிலும் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கையில் 90 சதவீதமானோர் தடுப்பூசி செலுத்தப்படாதவர்கள் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

### சீன வெளிவிவகார...

நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்துக்கொள்ள சீன அமைச்சர், இலங்கை வருவதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்திருந்தது. சீன வெளிவிவகார அமைச்சர் இரண்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

இந்தியாவின் தந்திரோபாயமான நான்கு பொதிகள் மூலம், இலங்கை மீது ஆதிக்கத்தை செலுத்தும் வகையிலான நடவடிக்கையாக திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொகுதிகள் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நிலையில், சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் தொடர்பில் பரவலாக பேசப்படுகிறது.

### வட,கிழக்கு கட்சிகளின்...

வம்சாவளி மலையக தமிழரின் அபிலாசைகளையும் உள்ளடக்குவதில் சிக்கலை எதிர்கொண்டதாலும், எமது பங்களிப்பு வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகளின் சுதந்திர செயற்பாட்டுக்கு பாதகமாக இருப்பதை உணர்ந்ததாலும், இந்த செயற்பாட்டுக்கு வெளியில் நின்று அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவோம் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் என்ற பொது நோக்கில், இந்த செயற்பாட்டை ஆரம்பித்த ஏற்பாட்டாளர்கள் செல்வம் அடைக்கலநாதன் எம்பி, தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்பி, இணைப்பாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருக்கு எமது வாழ்த்துகளை தெரிவிக்கிறோம் எனவும் த.மு.கூ தெரிவித்துள்ளது.

அதேவேளை பொது இணக்கப்பாட்டின் மூலம் பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில் கொண்டு மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரத பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தனித்தனியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் ஆவண கடிதம் எழுதப்படும் எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### யாழில் புதிய வகை...

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்ஆபிரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள சிலருக்கு மலேரியா தொற்று ஏற்பட்டுள்ளதாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசேட வைத்திய நிபுணர்கள் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாண நகர எல்லையில் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த நுளம்ப துரிதமாக பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### 6.9 மில்.அமெ. டொலர்...

வங்கி செலுத்தியதாக தெரிவித்துள்ளது. சீனாவை தளமாகக் கொண்ட Qingdao Seawin Biotech Group Co., Ltd க்கு கடன் கடிதம் செலுத்துவதைத் தடுக்கும் தடை உத்தரவை கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் நீக்கியதை அடுத்து, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 03 அன்று, சர்ச்சைக்குரிய கரிம உர ஏற்றுமதியை ஏற்றுக் கொள்ளாத போதிலும், புதிய தரப்படுத்தப்பட்ட உரத்தை அனுப்புவதற்கான தீர்வுக்கு அனைத்து தரப்பினரும் ஒப்புக்கொண்டதால், தடை உத்தரவு விலக்கிக்கொள்ளப்பட்டது. இந்நிலையில், சீன நிறுவனத்திற்கு 6.9 மில்லியன் அமெரிக்க டொலரை மக்கள் வங்கி செலுத்தியுள்ளது. (ஸ)

### வழமைபோல இம்முறை...

என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் கொழும்பு மாவட்ட செயலக கட்டடத்திலுள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜீ. தர்மதிலக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டு சுதந்திர தின விழாவுக்கான ஏற்பாடுகளை தெளிவுபடுத்தினர்.

சுதந்திர தின விழாவையொட்டி சமய வழிபாடுகள் அன்றைய தினம் காலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளன. பௌத்த மத நிகழ்வு நாரஹேன்பிட்டியிலுள்ள அபேயராம விஹாரையில் நடைபெறவுள்ளதுடன் முக்கிய அமைச்சர்கள் பலரும் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்து சமய மத நிகழ்வுகள் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளதுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் எம்.பி. ஆகியோரும் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். முஸ்லிம் சமய மத வழிபாடுகள் கொழும்பு 12 பெரிய பள்ளியில் நடைபெறவுள்ளதுடன் நீதியமைச்சர் அலிசப்ரி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். கத்தோலிக்க சமய மத வழிபாடு புஞ்சிபொரளையிலுள்ள அனைத்து புனிதர்களின் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அநுரத்த, திருமதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதில் கலந்துகொள்ளவுள்ளனர். கிறிஸ்தவ வழிபாட்டு நிகழ்வு கொழும்பு 02 இல் உள்ள இரட்சணிய சேனை ஆலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை சுதந்திர தின நிகழ்வுகள் நாட்டில் நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கமைய நடைபெறவுள்ளன. நிகழ்வு நடைபெறும் சுதந்திர சதுக்கத்தையொட்டிய பிரதேசங்கள் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்படுவதுடன் நிகழ்வில் பங்குபற்றுவோருக்கான பொது வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திர தின நிகழ்வுகளின் முக்கிய அம்சமான முப் படைவீரர்களின் அணிவகுப்பில் இம்முறை 6,783 வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஒத்திகை நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் ஒத்திகை நேரம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் வீதிகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் தேசிய கீதம் இசைப்பதற்காக 45 பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். விசேட அதிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களுக்காக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் காலை 7.30 மணிக்கு முன்பதாக அனைவரும் ஆசனத்தில் அமரவேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்முறை சுதந்தர தின நிகழ்வுகளை பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் கடந்த வருடங்களைப் போன்று வீதியில் இரு மருங்குகளிலும் இருந்து நிகழ்வுகளை பார்வையிடுவதற்கு மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். நேற்றைய இந்த விசேட பேச்சுவார்த்தையில் முப்படைகளின் பிரதானிகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை உயரதிகாரிகள், ஊடக நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள், சுதந்திர தின நிகழ்வுகளோடு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

### எனது பதவிக் காலத்தில் நான்...

காணப்படுவதைக் கருத்திற் கொண்டு நல்ல நோக்கத்துடன் சேதன உரங்களை பயன்படுத்துவதற்கு விவசாய சமூகத்தினரிடையே முன்மொழிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

சேதன உரம் என்பது உரம் மாத்திரம் அன்றி ஏனைய நாடுகளில் பயன்படுத்தப்படும் அபிவிருத்தியடைந்த தொழில்நுட்பமாகும்.

பயிர்ச்செய்கைக்காக பெருமளவிலான விவசாயிகள் சேதன உரங்களைப் பயன்படுத்துகின்றனர். எனினும் விவசாய சமூகத்திற்குத் தேவையான அறிவை அரசாங்கத்தால் வழங்க முடியவில்லை என தெரிவித்த ஜனாதிபதி, நெல்லுக்கு 50 ரூபா சான்றளிக்கப்பட்ட விலையுடன் கடந்த இரு வருடங்களாக உரங்களை இலவசமாக வழங்கியதாகவும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி , நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரினதும் ஆதரவு முக்கியமானது .அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒருவர் அரசாங்கத்தை விமர்சித்தால், அவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் வகையில் தம்மையே விமர்சித்துக் கொள்வதாகவும்ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்மானம் எடுப்பதில் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது.

தற்போதைய நிர்வாகம் ஐந்தாண்டு பதவிக் காலத்திற்கான அனைத்து இலக்குகளையும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் அடையும் என ஜனாதிபதி பொது மக்களுக்கு உறுதியளித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் எதிர்நோக்கிய சவால்கள் குறித்து பொதுமக்கள் அறிந்திருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, அரசாங்கத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் உதவ வேண்டிய பொறுப்பு உள்ளது. மக்களுக்கு சேவை செய்வதற்கு அமைச்சுப் பதவிகள் மாத்திரம் தேவையில்லை என்றார்.

மக்களுக்கு பணியாற்ற அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அதிகாரிகளின் முழு ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதி இதன் போது அழைப்பு விடுத்தார்.



இலங்கைக்கான கொரிய தூதர் H.E.சந்துஷ் வூன்ஜின் ஜியோங், Kpop மற்றும் கலாசாரத்தின் மீதான ஆர்வத்தைப் போற்றும் வகையில், இலங்கையின் KFandom குழு உறுப்பினர்களுக்கு தூதுவரின் இல்லத்தில் விருந்துபசாரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் Bangtan Overload, Bulletproof Spinels, Enhypen, ExoL Sri Lanka, KPop Sri Lanka உத்தியோகபூர்வ ரசிகர் குழு, K சகோதரிகள், SHINee Sri Lanka மற்றும் உத்தியோகபூர்வ ரசிகர் குழு போன்ற கொரிய ரசிகர் குழுக்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# பேருவளை கெச்சிமலை தர்காவின் தமாம் வைபவம்



*பேருவளை விசேட நிருபர்*

வரலாற்று பிரசித்திபெற்ற பேருவளை கெச்சிமலை தர்காவில் வருடாந்தம் நடைபெறும் புனித சகிவுல் புகாரி மஜ்லிஸின் தமாம் வைபவம் கொவிட் 19 சுகாதார வழிமுறைகளுக்கு அமைய வரையறுக்கப்பட்ட உலமாக்கள் முறீதீன்கள் பங்குபற்றலுடன் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவை, தமாம் நிகழ்ச்சிகளை 70 வது வருடமாகவும் நேரடியாக அஞ்சலி செய்யவுள்ளது. சங்கைக்குரிய காலிப் அலவி ஆலிம் பின் அஷ்ஷெய்க் அப்துல்லா ஆலிம் அலவியத்துல் காதிரி அவர்கள், அவரது புதல்வரும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை நிறைவேற்றுக்குழு உறுப்பினருமான மௌலவி சக்கி அஹமட் (அஷ்றபி) ஆகியோர் தலைமையில் மஜ்லிஸ் நடைபெறும்.

## இலங்கையின் உற்பத்தி பொருட்களை சீனாவுக்கு அனுப்ப திட்டம்

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

அநுராதபுர மாவட்ட சௌபாக்யா உற்பத்தி கிராமங்களின், உற்பத்தி பொருட்களை சீனாவின் வர்த்தக சந்தைக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக மாவட்ட திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகத் நயனாநந்த தெரிவித்தார்.சௌபாக்யா உற்பத்தி கிராமங்களிலிருந்து பெறப்படும் உற்பத்தி பொருட்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு அனுப்புவதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த பயனை பெற்றுக் கொடுக்க முடியும்.

## உரிமம் பெற்ற ஏலதாரரின் பெயரைத் திருத்தம் செய்தல்

2022.01.07 ஆம் திகதியில் தினமின,டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் முறையே 27,05 மற்றும் 07ஆம் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள மக்கள் வங்கியின் கடுகண்ணாவ கிளைக்கு உரித்தான ஏலவிற்பனை விளம்பரத்தில் உரிமம் பெற்ற ஏலதாரர் பெயராக தவறுதலாக டலஸ் கெலார்ட் நிறுவனம் என இடம் பெற்றுள்ளது. எனினும் இவ் ஏலவிற்பனையின் ஏலதாரர் பெயராக உரிமம் பெற்ற ஏலதாரர் திரு.பிரேமசிரி வடுகே எனும் பெயர் இடம்பெற வேண்டுமென்பதனைத் அறியத் தருகின்றோம்.

**பிரேமசிரி வடுகே,**
**அகில இலங்கை சமாதான நீதவான்**
**ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற பதிவாளர்,**
**உரிமம் பெற்ற ஏலதாரர், நீதிமன்ற ஆணையாளர்,**
**''உத்பலா'', சந்தகிரிவத்த,**
**கம்பஹா.**
**தொலைபேசி இலக்கம்: 0777-003939, 071-6172804, 071-1659616**

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்தியத் தலைமைக் காரியாலயம்,**
**தலதா வீதி,**
**கண்டி .**
**தொலைபேசி இலக்கம்: 081-2228385**

## பெறுகை அறிவித்தல்

### இப்பாகமுவ பிரதேச சபை

இப்பாகமுவ பிரதேச சபைக்கு உரித்தான மெல்சிரிபுர தகனச்சாலைக்கு மின்பிரப்பாக்கி இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

- மூன்று வரிசை 10 KVA கொள்ளளவுள்ள மின் பிறப்பாக்கியொன்றின் வகை, மொடல் மற்றும் உற்பத்தி நாடு மற்றும் பொறுப்புக்கூறுங்காலம் போன்ற விபரங்களுடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- மீளளிக்கப்படாத ரூபா 500/- இற்கான கட்டணத்தை இப்பாகமுவ பிரதேச சபையில் செலுத்தி ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்கான முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
- 2022.01.10 முதல் 2022.01.24 வரை அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரை விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- 2022.01.25 அன்று 10.00 மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அன்றைய தினம் மு.ப. 10.30 இற்கு விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களின் முகவர்களின் முன்னிலையில் அவை திறக்கப்படும்.
- இதற்கான மேலதிக விபரங்கள் தேவையெனின், 0372259977 தொலைபேசி இலக்கத்தின் மூலம் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 04.00 வரையான காலப்பகுதியில் விசாரித்துக் கொள்ளலாம்.

**அஜித் விக்ரமசிங்ஹ**
**தலைவர்**
**பிரதேச சபை,**
**இப்பாகமுவ.**

## கேள்விப் பத்திரம் விலைமனுகோரல்

### பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

### 50kg சீமெந்து பக்கட்டுகள் 417 விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன

குளியாபிடிய நீதவான் நீதிமன்றத்தின் எல்லைக்குள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் கைப்பற்றப்பட்ட சீமெந்து தொகை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. விலைமனுக்களின் இரண்டு பிரதிகள் அனுப்பப்பட வேண்டும். சீமெந்து தொகை 2022.01.08ம் திகதி முதல்2022.01.12ம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை குளியாபிடிய மாதம்ப பாதை இல. 306ல் அமைந்துள்ள சென்ரல் ஹாட்வெயார் நிறுவனத்தின் பண்டகசாலையில் பார்வையிட்டு பரீட்சிக்க முடியும்,
2. கேள்விப் பத்திர விலைமனுக்கள் 2022.01.08 திகதியில் இருந்து காலை 9.00 முதல் பி.ப 3.00 மணிவரை சமர்பிக்கப்பட முடியும் சமர்ப்பிக்கப்படும் போது மீளளிக்கப்பட முடியாத 2000/- விண்ணப்ப கட்டணம் அதிகாரசபையின் சிராபரிடம் செலுத்தி பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 014-1-001-2-0110475 மக்கள் வங்கி கணக்கு இலக்கத்திற்கு ரூபா 2000/- வைப்புச் செய்து www.caa.gov.lk என்ற இணையத்தினூடாக விண்ணப்ப படிவத்தை பெற்று அவ்வாறு பெற்றுக்கொண்ட விண்ணப்படிவத்தை பூரணப்படுத்தி பற்று சீட்டை இணைத்து கீழுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு பெறப்படும் விண்ணப்பபடிவத்தில் மாத்திரம் விலைமனுக்களின் விலை முன்வைக்கப்பட வேண்டும்.
3. கேள்விப்பத்திர விலைமனுப்பெட்டி 2022.01.10 திகதி பி.ப 2.30 மணி வரை திறந்துவைக்கப் பட்டிருக்கும்.
4. தாமதமாக பெறப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு விலைமனுக்கள் 2022.01.24 திகதி பி.ப 2.30 மணிக்கு மீள்திறக்கப்படும். அந்த சமயத்தில் தேவைப்படின் உங்களுடைய பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
5. சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திர விலைமனுக்கள் அடங்கியபிரதிகள் 2022.01.19 திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாககிடைக்கக் கூடியவாறு தபால் உறையின் மேல் மூலையில் ''50kg சீமெந்து தொகை 417 க்கான விலைமனு'' என குறிப்பிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் இரண்டாம் மாடியில் பணிப்பாளர் நாயகத்தின் காரியாலயத்தில் வைத்திருக்கும் கேள்விப்பத்திர விலைமனுக்கள் இடமுடியும். விலைமனுக்கள் கோரப்பட்ட காலம்முடிவடைந்து. உடனடியாக திறக்கப்படும் போதுகேள்வி உரிமையாளரோ அல்லது உங்களது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்க முடியும்.

கேள்வி பத்திர மனுக்கள் அனுப்பவேண்டிய முகவரி

**பணிப்பாளர் நாயகம்**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை,**
**இல.27, ச.தொ.ச செயலாளர் காரியாலயம்,**
**வொக்சோல் வீதி,**
**கொழும்பு 02.**

**தொடர்புகளுக்கு:- 077-1088904/ 071-4412667**


திகதி 06.01.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4639
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,802,550.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 2 8 7 6 9 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,443,376.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2934
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,406,840.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 37 40 54 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,585,023.60

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 987
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,881,660.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 165,651,948.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து B சுப்பர் இலக்கம் 18 வெற்றி இலக்கங்கள் 13 26 44 75

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 669
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,101,720.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 14 20 66 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,585,254.80

செவண உங்களுக்கு வீடு – கைகளில் காசு
சீட்டிழுப்பு இலக்கம் : 341
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,077,400.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 33 44 62 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,077,812.80

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1659
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,694,360.00
சுப்பர் இலக்கம் 11 வெற்றி இலக்கங்கள் 17 35 40 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,404,073.60

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416



ST&S SINCE 1892
BMICH
ஏல விற்பனை

9750 மற்றும் 5000 சதுர அடி கொண்ட 02 வெளிப்புற PVC உருக்கு கவர் கட்டமைப்புடனான பெரிய கூடாரங்கள், பெரிய அளவிலான டவர் மற்றும் பிளவு வகையான குளிரூட்டிகள், கொத்து விளக்குகள், வைபவங்களுக்கான மற்றும் விருந்து மண்டபங்களுக்கான பெரிய அளவிலான தரை விரிப்புகள், சுழலும் நாற்காலிகள், சுவர் கண்ணாடிகள், தொழிற்சாலைகளுக்கான மோட்டார்கள், புளோவர்கள், நீரில் மூழ்கக்கூடிய குழாய்கள், கேபிள்கள், இரும்புக் கழிவுகள் உட்பட மேலும் பல்வேறு பொருட்கள்.

2022 ஜனவரி 12 புதன்கிழமை
கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தை,
BMICH இன் மண்டபம் 'E'
என்னுமிடத்தில்
மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பார்வையிடல் - 10 ஆந் திகதி திங்கட்கிழமை
மண்டபம் 'C' என்னுமிடத்தில்
(மு.ப 9.00 முதல் பி.ப 3.00 மணி வரை)

மேலதிக விபரங்களுக்கு www.sandslanka.com என்ற எமது இணைய தளத்தைப் பார்க்கவும்.

விற்பனை நிபந்தனைகள்
- ஏல தினத்தில் நுழைவு: செல்லுபடியான அடையாள சான்று, COVID 19 தடுப்பூசி பெற்றமைக்கான சான்று என்பவற்றுடன், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1,000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 10,000/- ஐ வைப்புச் செய்தல் வேண்டும். வாயில் கதவு காலை 8.30 மணிக்கு திறக்கப்படும். முதலில் வந்தவர்களுக்கு முதல் சேவை என்ற அடிப்படையில், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய, வரையறுக்கப்பட்ட அளவில் கொள்வனவாளர்கள் அனுமதிக்கப்படுவர்.
- கொடுப்பனவுகள்: விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 50% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 50% ஐயும் 2022 ஜனவரி 13 ஆம் திகதி வியாழக்கிழமை க்கு முன்னர், காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- ஏல விற்பனை இடம்பெற்ற 7 நாட்களுக்குள் பொருட்கள் யாவும் அகற்றப்படல் வேண்டும்.
- பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப முகாமைத்துவத்தின் / ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
011 2671468 www.sandslanka.com



ST&S SINCE 1892 Celebrating 125 Years
காலி மாவட்ட நீதிமன்றத்தினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, வழக்கு இல. T/447/15 இன் கீழ், பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் பகிரங்க ஏல விற்பனை

காலியில் பெறுமதிமிக்க இரண்டு சொத்துக்களின் ஏல விற்பனை

2022 ஜனவரி 22 ஆம் திகதி
எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை 1
4 படுக்கை அறைகளுடன் பெறுமதிமிக்க இரண்டு மாடி குடியிருப்பு ஆதனம் அதிலுள்ள அனைத்து அசையும் பொருட்களுடன்
வரி மதிப்பீட்டு இல.
192/14, ரிச்மன்ட் ஹில்,
காலி
காணியின் விஸ்தீரணம் : ஏ: 00 ரூ: 01 பே: 9.3
(பாதை உரிமையுடன்)
மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஏல விற்பனை 2
பகுதியளவு கட்டப்பட்ட வீட்டுடன் பெறுமதி மிக்க குடியிருப்பு ஆதனம்
வரி மதிப்பீட்டு இல.
247/12, 1வது ஒழுங்கை
சனிசைட் கார்ட்ன், கராப்பிட்டிய, காலி
காணியின் விஸ்தீரணம் : ஏ: 00 ரூ: 00 பே: 12.11
பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இப்போது பார்வையிட முடியும்!
சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.

கொடுப்பனவு செய்யும் முறை:
வெற்றி பெற்ற கொள்வனவாளர், ஒவ்வொரு ஏல விற்பனையின் முடிவிலும் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் மாவட்ட நீதிமன்றம், காலி என்ற முகவரியிலுள்ள பதிவாளரிடம் குறித்த வழக்கு இலக்கத்துடன் செலுத்தப்பட வேண்டும்.
(4) குறித்த சொத்தின் விற்பனை நீதிமன்ற உத்தரவுக்கு அமையவே மேற்கொள்ளப்படும்.

ஆதன உறுதி உட்பட ஏனைய ஆவணங்கள் மற்றும் சட்ட ரீதியான விபரங்களுக்கு தொடர்பு கொள்ள:
திருமதி புத்திபாஷினி கொடகம, சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு
• திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை பி.ப 3.00 - பி.ப 6.00 மணி வரை இல. 221, ஷரீப் எஸ்டேட், கராப்பிட்டிய, கொடகந்த, காலி - 0777 327 647

அல்லது ஏல விற்பனையாளர்கள்.
ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671465, 011-2671468 தொலை/.:.பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com
011 2671468 www.sandslanka.com

# இன்பம் ஊட்டும் சேயோன் குன்றம்

மலையைப் பின்னணியாகக் கொண்ட மணிநீலம் பூத்த குறிஞ்சிக் கவிதை சேயோன் குன்றம். தலைவன் தலைவியை காணச் செல்லும்போது அழகிய மலர் அல்லது தழையைத் தன் அன்பின் அடையாளமாகக் கொண்டுசெல்வது சங்ககால வழக்கம். அதைத் தோழி மூலம் தலைவியிடம் சேர்த்துவிடுவான். இதற்கு 'கையுறை யளித்தல்" என்று பொருள்.

முருகப் பெருமானின் போர்க்கோலத்தை சிவந்த நிறம் கொண்டு அலங்கரித்த தோழி, மலையில் காந்தள் மலரின் சிவப்பை பற்றிச் சொல்லும்போது மட்டும் 'குருதிப்பபூ' என்கிறாள். போர்க்களம் நிறைந்து கிடக்கும் ரத்தத்தைக் குருதி என்று கூறாமல் மலரைக் குருதிப்பூ என்றது முரண் நயம். ஓர் அகப் பாடலில் புறச் செய்தியைப் பேசிய தோழியின் நுண்ணறிவு சிறப்பானது சிந்திக்கத் தக்கது.



**முருகப் பெருமானின் போர்க்கோலத்தை சிவந்த நிறம் கொண்டு அலங்கரித்த தோழி, மலையில் காந்தள் மலரின் சிவப்பை பற்றிச் சொல்லும் போது மட்டும் 'குருதிப்பபூ' என்கிறாள். போர்க்களம் நிறைந்து கிடக்கும் ரத்தத்தைக் குருதி என்று கூறாமல் மலரைக் குருதிப்பூ என்றது முரண் நயம். ஓர் அகப் பாடலில் புறச் செய்தியைப் பெய்து பேசிய தோழியின் நுண்ணறிவு சிறப்பானது சிந்திக்கத்தக்கது.**

தோழி அதை ஏற்கவோ அல்லது மறுக்கவோ செய்யலாம். அவ்வாறு தோழி ஒருத்தி தலைவன் தந்த கையுறையை மறுத்த செய்தியை புலவர் திப்புத் தோழாரது கவிதை காட்டுகிறது. அதே நேரத்தில் அக்கவிதையில் முருகன் அரக்கர்களை சூரசம்ஹாரம் செய்த நிகழ்வையும் எடுத்துரைக்கிறது. அப்பாவி தலைவன் ஒருவன் ஒரேயொரு செங்காந்தள் மலரை எடுத்து வந்து தலைவியிடம் கொடுக்குமாறு வேண்டுகிறாள்.

அதற்கு 'தாங்கள் வாழும் மலையில் என்னவெல்லாம் உண்டு' என்பதை பட்டியலிட்டுச் சொல்லிக் காட்டுகிறாள் தோழி. "செங்களம் படக்கொன்று அவுணர்த்தேய்த்த செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக் கழல் தொடிச் சேஎய் குன்றம் குருதிப் பூவின் குலைக் காந்தட்டே"(குறுந்1) குறிஞ்சி தலைவன் முருகன் வாழும் எங்கள் மழையும் செங்காந்தள் மலர்கள் குலைகுலையாய் நிறைந்திருப்பதால், குருதி படிந்தது போல செந்நிற மலர்களால் காட்சியளிக்கின்றது.

இத்தகைய மலையில் வாழும் தலைவியைக் காண வந்த தலைவன் கையுறையாக ஒரே ஒரு செங்காந்தள் மலர் எடுத்து வந்து தோழியிடம் தந்தான்.

அதைப் பார்த்து குறும்பு மிகுந்த தொனியில் பேசினாள் தோழி.

இப்பாடலில் எப்போதும் போல் முருகனின் அழகினை குறித்துப் பேசாமல் சினத்துடன் நின்றமை, அஞ்சாமையுடன் எதிரிகளை வென்றது, யானையில் கொம்பில் எதிரணியினை மாட்டி வீழ்த்தியது, வேலின் நுனியில் குருதிக் கறை படிந்திருக்க சேயோன் காட்சியளித்தமை என்று எவ்விடமும் குருதிப்புனல் கொப்பளித்து நிற்கின்றது. ஆனால் தோழி அவற்றையெல்லாம் குருதி என்ற சொல்லால் சுட்டாது செம்மை, சிவப்பு என்ற சொல்லினால் சுட்டினாள். ஆனால் காந்தள் மலரின் மென்மையைச் சுட்ட வேண்டிய இடத்தில் குருதிப்பூ என்று வீரவுணர்வுடன் கூறுகிறாள். எதிரிகளைக் கொன்று போர்க்களத்தையே செங்களமாக்கிய முருகன் வாழும் குன்று இது. அவன் கையில் இருப்பதும் செங்கோலம்பு. அவன் ஊர்தியும் செங்கோட்டு யானை. இவ்வளவு ஏன், அவனே சிவந்த நிறச்சேயோன் தானே! இப்படி எங்கும் செந்நிறமாக விளங்கும் மலையில் வாழும் எங்களுக்கு நீ செங்காந்தள் மலரை பரிசாய் தருகிறாயே! எங்கள் மலை எங்கும் செங்காந்தள் மலர்கள் குலைகுலையாக மறைந்திருப்பதை நீ பார்த்தாயா? என்று கேட்கிறாள். சமயக் கவிதையாகவும் போர்க்கவிதையாகவும் அகப்பொருள் கவிதையாகவும் மூவகைச் சூழல்கள் காணப்பட்டு கற்போருக்கு இன்பம் ஊட்டுகிறது இது.

-இரா.மணிமேகலை

## கலைக் கதம்பம்

சைத்திரியன்



### கொஞ்சம் காதலும் தேவை...

காதல் கவிதை எழுத
கொஞ்சம் காதலும் தேவைப்படுகிறது

எழுத்துக்கள் மோகத் தறியில்
நெய்யப்படக் காதல்
அவசியமானதாகத்தான் உள்ளது

சோம்பலான மூளையை
சுறுசுறுப்பாக்க சோமபானமாய் – காதல்
அவசியமானதாகத்தான் உள்ளது

சிறைப்பட்ட இதய வாசலில்
பட்டாம்பூச்சி பறக்க காதல்
அவசியமானதாகத்தான் உள்ளது

எழுதுகோலோடு விரல்கள்
காதல் செய்யவும்
காகிதத்தோடு எழுத்துகள்
காதல் செய்யவும்
குறைந்தபட்ச காதலாவது
அவசியமாகத்தான் உள்ளது

பிரபஞ்சம் மலர எவ்வளவு
காதல் தேவைப்பட்டிருக்கும்?

நீயும் நானும் பிரபஞ்சத்தின்
அங்கம்தானே காதல் சிறைப்பிடிக்காமல்

–செ.புனிதஜோதி

### 'மல்லிகை ஜீவா' விருது எழுத்தாளர் கோபாலபிள்ளைக்கு



ஈழத்தின் முக்கிய இலக்கிய ஆளுமையாகத் திகழ்ந்த அமரர் டொமினிக் ஜீவா ஞாபகார்த்தமாக வழங்கப்படவுள்ள மல்லிகை ஜீவா விருது 2022 ஈழத்தின் சிரேஸ்ட சிறுகதை எழுத்தாளரான க.கோபாலபிள்ளைக்கு வழங்கப்படவுள்ளது.

இவ்விருது வழங்கல் ஜனவரி 28ஆம் திகதி பிம்பங்கள் வழியே நடைபெறவுள்ள முதலாவது டொமினிக் ஜீவா நினைவேந்தல் நிகழ்வில் வழங்கப்படும்.

சிரேஸ்ட சிறுகதை எழுத்தாளரான க.கோபாலபிள்ளை டொமினிக் ஜீவ்வைப்போன்றே சாதி அரசியலால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் படைப்புகளைப் படைத்து வருபவர் என்பதும் குறிப்பிடதக்கது.(ஸ)

# "காலமும் காலனும்" கவிதை நூல் வெயியீட்டு விழா

கவிஞர் மு.குணரெத்தினத்தின் காலமும் காலனும் கவிதை நூல் வெயியீட்டு விழா அம்பிளாந்துறை கலாசார மண்டபத்தில் பட்டிப்பளை கலை கலாசார ஒள்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் த.மேகராசாவின் தலைமையில் அண்மையில் நரடபெற்றது.

கவிஞர் மு.குணரெத்தினத்தினம்அம்பாரை மாவட்டத்தின் கோமாரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அங்கு ஆரம்ப கல்வி பயின்ற அவர், அக்கரைப்பற்று இராமகிருஸ்ண மிஷன் பாடசாலையில் உயர்கல்வி கற்று பேராதனை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி கலைமாமணி மற்றும் கலை முதுமாணி பட்டங்களைப் பெற்றவராவார்.நீண்ட காலம் ஆசிரியராகவும் பின்பு அதிபராகவும் இருந்து கல்விச் சேவையில் தடம் பதித்தவர்.

இளமையில் இருந்தே கலைத் துறையில் ஈடுபாடு கொண்டவர். நாடகக் கலையிலும் பிரகாசித்தவர். நாடகத்துறையின் திருப்பு முனையாக மண்ணின் மைந்தர்கள் என்னும் அவரது நாடகம் பேசப்பட்டது. இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக காலமும் காலனும் வைபவ ரீதியாக வெளியிடப்பட்டுள்ளது.





இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய கல்வி நிறுவனத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகு தயாநிதி கலந்து கொண்டார். மற்றும் பேராசிரியர் செ.யோகராசா, கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் க.சந்திரகுமார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

நூலின் முதற் பிரதியை திருகோணமலை நீர்வழுங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதம பொறியியலாளர் பா.சுதாகரன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து அதிதிகளுக்கும் ஏனையோருக்கும் பிரதிகள் வழங்கப்பட்டு அறிமுக உரையும் நயவுரையும் ஆற்றப்பட்டது.

பேராசிரியர் யோகராசா நூலின் அணிந்துரையில் நூல் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்,சங்க இலக்கிய பாடல் மரபுகள், அகத்திணை, புறத்திணை மரபுகள் ;நவீனகாலச் சூழலில் பல மாற்றங்களைக் கண்டுள்ளன.அனுபவ முதிர்ச்சியினால் காலம் கற்பித்த பாடங்களை உணர்ந்து ஓய்வாக கிராமமொன்றில வாழ்ந்து, வருகின்ற நவீன கிராமிய புலவர் ஒருவரினது புலமையாளரது பார்வையில் பல்கிப் பெருகியிருப்பதை இக் கவிதைத் தொகுப்பில் தெளிவாக காண முடிகின்றது.



அன்றைய கவிஞர்களுள் சங்ககால யாப்பு வடிவங்களை பின்பற்றுவோர் சிலரேயாவர். அவர்களில் மரபுசார் வடிவங்களை கையாளும் ஆற்றல் கொண்டவராகம், நாட்டார் பாடல் வடிவங்களையும் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ள மெல்லிசைப் பாடல் வடிவங்களையும் இயல்பான முறையில் பயன்படுத்தும் ஆற்றல் இவரிடம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

படமும் தகவலும்: கல்லாறு தினகரன் நிருபர்

# யாழ்ப்பாணத் தீவகத்திற்கேயுரிய தனித்துவமான கலைவடிவம் அருகிவரும் நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணத் தீவகத்திற்கேயுரிய தனித்துவமான கலைவடிவங்களில் நாட்டுக்கூத்தும் முக்கியத்துவம் பெறுகிறது. .இது குடாநாட்டின் நாலாபுறங்களிலும் பரந்து வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில் காலாதிகாலமாக நிலவிவந்துள்ளது. காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை, அளவெட்டி, பருத்தித்துறை, நீர்வேலி, குருநகர், பாசையூர், வட்டுக்கோட்டை என குடாநாட்டின் நாட்டுக்கூத்து கிராமங்களின் பட்டியலைஅடுக்கிக்கொண்டேபோகலாம்.



இக்கூத்துக்கள் பாமர மக்கள் மத்தியில் கிராமப் புறங்களில் நடாத்தப்படுகிறது. நாடகத்தன்மையை விட சமூகம்சார் அம்சங்களுடன் மேலோங்கிக் காணப்படுகிறது. கிராமத்து மக்களின் எளிமை,பாமரத்தன்மை, உலகப் பார்வை என்பன இக்கூத்துக்களிலும் நாடகங்களிலும் உள்ளடக்கமாகக் கொள்ளப்படுகிறது.

பாரம்பரிய கலைகளை மீட்டெடுத்து பாதுகாப்பது நமது பண்பாட்டுதனித்துவத்தைப் பேணும் முயற்சியாகவே போற்றப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் கிழக்குமாகாணத்தில் வாழும் தமிழர்கள் பறைமேளக்கூத்து, மகுடிக்கூத்து, வசந்தன்கூத்து, தென்மோடிக்கூத்து, வடமோடிக்கூத்து போன்ற பாரம்பரிய நாடகவடிவங்களை நிகழ்த்தினர். ஏனைய கூத்துக்களை விடதென்மோடி, வடமோடிக்கூத்துக்கள் வளர்ச்சி பெற்ற நாடகவடிவமாகும்.

இத்தகைய கூத்துக்கள் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்ஆகிய பகுதிகளில் சிறப்பாக ஆடப்பட்டன. பண்டைக்காலத்தில் இருந்தே யாழ்ப்பாணப்பகுதியிலும் கூத்துக்கலை சிறப்புற்றது எனலாம். தமிழ்நாட்டில் ஏனைய பாகங்களில் நிலவிவந்தது போல யாழ்ப்பாணத்திலும் முதன்முதல் தென்மோடியே நிலவிவந்தது.



நாடகப் பள்ளி

ஆனால் தமிழ்நாட்டில் வடநாட்டு இசைப்பாணிகளும் கூத்துமுறைகளும் வந்துசேர மெல்லமெல்ல யாழ்பாணத்தின் கூத்துமுறையும் மாறியது வடமோடிக்கூத்தும் வந்துசேர்ந்தது."நாற்பதுஆண்டுகளுக்கு முன்னே இந்தியாவிற்கும்இலங்கைக்கும் இடையில் ஒருவகை தடையுமின்றி மக்கள் வந்துபோகக்கூடிய ஏதுக்கள் இருந்தமையால் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த நாடகக்குழுவினரால் வடமோடிக்கூத்து இங்கே கொண்டுவரப்பட்டது.

குறிப்பாக வேலணை, நயினாதீவு,புங்குடுதீவு, அனலைதீவு, ஊர்காவற்துறை, நெடுந்திவு ஆகிய தீவுப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் மத்தியில் நாட்டுக்கூத்துக்கள் அடையாளங்களுடன் மேடையேற்றப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மக்கள் வாழ்விலும் கூத்துமரபு இரண்டறக்கலந்து நிலைபெற்று வந்துள்ளது. தமது நாளாந்ததொழில்நடவடிக்கைகள் நிறைவு பெறும் மாலையில்அப்பொழுதினை பயனுறும் வகையில் கழிக்கும் பொருட்டு நாட்டுக்கூத்துக்களைப் பழக்கியும்பழகியும்அரங்கேற்றிவந்தனர்.

பிற்காலத்தில்கூடுதலாக இத்தீவில் கிறிஸ்தவநாட்டுக்கூத்துக்களே அரங்கேற்றப்பட்டன. அத்தோடு இத்தீவின் விசேடமான தேவாலயங்களில் வருடாந்த திருவிழாக் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் நாட்டுக் கூத்துக்கள் மேடையேற்றப்பட்டு வந்தமை குறிப்பிடப்படவேண்டியது.

வெடியரசன், ஞானசௌந்தரி, ஆட்டுவணிகன், பொன்னூல் செபமாலை என்ற கூத்துக்கள் நெடுந்தீவிற்கே யுரித்தான தனித்துவத்தை அளிக்கும் வகையில் மேடையேற்றப்பட்டு வந்துள்ளன. அத்தோடு இத்தீவின் பண்பாட்டுபாரம்பரிய மரபுகளே கலைகளை வளர்ப்பதிலும் அவற்றின் வளர்ச்சிக்கும் முன்னின்றுள்ளது. இரவிரவாக நிகழ்வுகளும்இடம்பெற்றன. யாழ்ப்பாணத்திலும் பல்வேறுபகுதிகளிலும் இருந்துநூற்றுக்கணக்கான மக்கள் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டதோடு கலைஞர்களும் பேச்சாளர்களும் இந் நிகழ்வுகளில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

வெடியரசன் கிறிஸ்துவுக்குப் பின் 2ஆம் நூற்றாண்டளவில் நெடுந்தீவை மையமாகக் கொண்டு நல்லாட்சி புரிந்தவன். அவனது மண்ணின் வீரம் செறிந்த வரலாற்றைப் படம்பிடித்துக்காட்டும் வகையில்வெடியரசன் கூத்து என்ற அரியமுயற்சி மேற்கொள்ளப்பட்டது.

(மிகுதி அடுத்த வாரம்)

-ரமேஸ் ரெஜினா,
யாழ்.பல்கலைக்கழகம்




# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து வீதியை மறித்து போராட்டம்





**பருத்தித்துறை விசேட, யாழ்.விசேட நிருபர் கள்**

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாக வீதியை மறித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சம்மேளனமும், மாதகல் பிரதேச கடற்தொழிலாளர்களும் இணைந்து நேற்றைய தினம் இந்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

2500 இந்திய இழுவை மடி தொழிலை நிறுத்தும் வரை போராடுவோம், இந்திய அரசு வடக்கு மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்க கோருகின்றோம், எமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் , பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்துவோம் போன்ற கோஷங்களை முன்வைத்தே போராட்டத்தினை முன்னெடுத்தனர். வீதியை மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையால் , அவ்வீதி வழியான போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது. பொலிஸார் போராட்டக்காரர்களை வீதியோரமாக நின்று போராடுமாறு பணித்த போது , " கடலில் அயல் நாட்டவர்களின் அத்துமீறல்களை தடுக்க முடியவில்லை, சொந்தநாட்டு மக்களை அடக்க முயல்கிறீர்களா ? ", " எங்களுடன் கடலுக்கு வாருங்கள் , அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை காண்பிக்கிறோம். முடிந்தால் அவர்களை கைது செய்யுங்கள் " என கோரி பொலிஸாரின் பணிப்பை புறம் தள்ளி வீதியில் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்தை முன்னெடுத்து உதவி பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றினை கையளித்த பின்னர் தமது போராட்டத்தினை முடிவுக்கு கொண்டுவந்தனர்.

# பேச்சு சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தக்கூடாது

## வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா

**யாழ்.விசேட நிருபர்**

பேச்சு சுதந்திரம் போன்ற அடிப்படை சுதந்திரங்களை தவறாக பயன்படுத்தக் கூடாது என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்த கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு 14 மெய்ப்பாதுகாவலர்களும் 6 சாரதிகளும் காணப்படுகின்றனர். இவர்களுக்காக பல இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது. அத்துடன் ஆளுநர் தனது எரிபொருள் மற்றும் ரீசேட் கொள்வனவிற்காக பல இலட்சம் ரூபாவை மக்களின் வரிப்பணத்தில் செலவிடுகின்றார்" என தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் அதற்கு பதிலளிக்கும் முகமாக வடமாகாண ஆளுநர் செய்தி குறிப்பொன்றை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். அச்செய்தி குறிப்பிலேயே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடதாவது,

ஆளுநரின் ஊழியர்கள், மாகாண நியமன ஊழியர்கள் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். ஆளுநர் நீதியான சமுதாயத்தை நம்புகிறார். அதற்காக நேர்மையாக பணியாற்றுகிறார்.

இங்குள்ள சிலர் பேச்சு சுதந்திரம் போன்ற அடிப்படை சுதந்திரங்களை தவறாக பயன்படுத்த கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக அங்குரார்ப்பணம்






**கிளிநொச்சி குறுப், பரந்தன் குறுப் நிருபர்கள்**

கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கு அமைய பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. பாடசாலையின் முதல்வர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்று 07.01.2022 நாடளாவிய ரீதியில் இடம்பெறுகின்ற நேரத்தின் படி காலை 11.05 க்கு பாடசாலையின் பெயர் பலகையினை அதிதிகள் திறந்து வைத்தனர். அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் ஒருங்கமைக்கப்பட்ட இடத்தில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் உத்தியோகபூர்வமாக பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பாடசாலை முதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

## அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 37 ஆம் ஆண்டு நினைவு தினம்

**(மன்னார் குறுப், தலைமன்னார் விஷேட நிருபர்கள்**

மன்னார் வங்காலை பகுதியில் 1985 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்ட அப்பாவி சிறுவர்கள் மற்றும் பொது மக்களின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் (6) வியாழக்கிழமை நினைவு கூறப்பட்டது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை (6) காலை 7 மணியளவில் வங்காலை புனித ஆனாள் தேவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்பாக நினைவேந்தல் இடம்பெற்றது. 1985 ஆண்டு தை மாதம் 6ஆம் திகதி அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் தங்கியிருந்த அப்பாவி சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் 10 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் மூங்கிளாறு தெற்கு கிராம சேவகர் பிரிவில் பிரதமரின் இந்து மத விவாகரத்துக்கான இணைப்பாளர் இராமச்சந்திர பாலு சர்மா குருக்களினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்து சமய முறைப்படி மூங்கிளாறு பேச்சியம்மன் ஆலயத்தில் விசேட பூஜைகள், கோமாதா பூஜை என்பன இடம்பெற்று பொது நோக்கு மண்டபத்தில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

### வவுனியா வைத்தியசாலைக்கு

# எதிர்க்கட்சித் தலைவரினால் இரத்த சுத்திகரிப்பு தொகுதி வழங்கி வைப்பு



**ஓமந்தை விஷேட, வவுனியா விசேட நிருபர்கள்**

வவுனியா வைத்தியசாலைக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவினால் இரத்த சுத்திகரிப்பு தொகுதியொன்று நேற்று கையளிக்கப்பட்டது.

எதிரக்கட்சித்தலைவரின் வடக்கிற்கான விஜயத்தின் முதற்கட்டமாக நேற்று (07) வவுனியாவிற்கு வருகை தந்த அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் மூச்சு செயற்திட்டத்தின் ஊடாக வவுனியா வைத்தியசாலைக்கு 24 இலட்சம் பெறுமதியான இரத்த சுத்திகரிப்பு தொகுதியை கையளித்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ உபகரண தொகுதிகளில் 35 ஆவது வைத்தியசாலையாக வவுனியா வைத்தியசாலைக்கு குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி க.ராகுலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுர்தீன், புத்திக பத்திரன, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் உமா சந்திரபிரகாஸ், வன்னி மாவட்ட அமைப்பாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழ்.அரசாங்க அதிபர் இராணுவ கட்டளைத் தளபதிக்கிடையில் சந்திப்பு

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர். கணபதிப்பிள்ளை மகேசன் யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதிக்கும் மேஜர் ஜெனரலுக்கும் DGS Senarath Yapu RWP RSP ndu இடையிலான மரியாதை நிமித்தமான சந்திப்பொன்று நேற்றைய தினம் (07.01.2022) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.சி.என். கமலராஜன் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சந்திப்பில் பொதுவான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் மக்களின் முன்னேற்றம் கருதி பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் Covid19 இடர்காலத்தில் மக்கள் நலனுக்காக இணைந்து செயற்பட்டமைக்காக மாவட்ட அரசாங்க அதிபர் தனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும்,விவசாய நடவடிக்கைகளில் சேதனப்பசளை உற்பத்தி நடவடிக்கைகள்,வீதி அபிவிருத்தி, நகர சுத்தப்படுத்தல்கள், மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் Covid19 தடுப்பூசி நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும், மக்களின் முன்னேற்றம் கருதி அபிவிருத்திக்காக முழுமையான ஒத்துழைப்புக்களை தொடர்ந்து வழங்க தயாராக இருப்பதாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கிணற்றில் குளிக்கச் சென்றவர் சடலமாக திரும்பிய சோகம்

**ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியா நெளுக்குளம், சாம்பல்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள கிணறு ஒன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா சாம்பல்தோட்டம் பகுதியில் வசித்து வரும் ரமேஸ் (வயது 34) இரண்டு பிள்ளைகளின் தந்தை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் சிற்றூழியராக கடமையாற்றி வருகின்றார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மரணச்சடங்கு ஒன்றிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய இவர், இரவு 8 மணியளவில் குளித்துவிட்டு வருவதாக வீட்டிலுள்ள வயல் கிணற்றுக்கு சென்றுள்ளார் .

எனினும் பல மணி நேரமாகியும் அவர் அங்கிருந்து திரும்பிவரவில்லை. தேடிப்பார்த்த போது அவரைக்கண்டு பிடிக்க முடியவில்லை. அயலவர்களின் உதவியுடன் கிணற்றில் தேடியபோதும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் கிணற்றிலிருந்த நீர் இறைக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் (06) இரவு 11 மணியளவில் குடும்பஸ்தரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இவருக்கு வலிப்பு ஏற்படுவதாகவும் குளித்துக்கொண்டிருந்தபோது, வலிப்பு ஏற்பட்டு கிணற்றுக்குள் தவறி வீழ்ந்திருக்கலாம் எனவும் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவருகின்றது.

சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதிவிழா

தென்மராட்சி இலக்கிய அணி நடாத்தும் பாரதி விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நிகழ்நிலை நிகழ்ச்சி ஊடாக நடைபெறவுள்ளது. ஆண்டுதோறும் கம்பன் விழா,வள்ளுவர் விழா,பாரதி விழா எனும் முப்பெரும் விழாக்களை நடாத்திவருகின்றனர். வைத்திய கலாநிதி சு.சி. அருளானந்தம் தம்பதியினரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் கடவுள் வாழ்த்தினை இசைப்பேரறிஞர் பஞ்சாபிகேஷன் பேரப்புதல்வர்களான இசை இளவல்கள் வி.சித்தார்த்தன் வி. பிரதித்தன் சகோதரர்கள் இசைக்கவுள்ளனர். தொடர்ந்து நிகழ்விற்கான எழிலுரையினை அதிவண.கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் 'நல்லவிதைகளைத் தூவிச் சென்ற நமது பாரதி'என்றபொருளில் ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து விழாவின் சிறப்பரங்காக விவாத அரங்கு மலரவுள்ளது.

## யாழில் வழிப்பறிக் கொள்ளை

**யாழ். விசேட நிருபர்**

யாழில் வங்கியில் இருந்து பணத்தினை மீளப்பெற்று சென்ற முதியவரின் பணத்தினை வழிப்பறி கொள்ளையர்கள் திருடிசென்றுள்ளனர். யாழ்ப்பாணம் பழைய தபால் நிலைய வீதியிலுள்ள தனியார் வங்கியில் இருந்து 60ஆயிரம் ரூபாய் பணத்தினை மீளப்பெற்றுக்கொண்டு, வீதிக்கு வந்த போது, துவிச்சக்கர வண்டியில் வந்த வழிப்பறி கொள்ளையர்கள் பணத்தினை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

# முன்னாள் கண்டி மாநகர சபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான அல்ஹாஜ் ஏ.எல்.எம். நுஹ்மானின்

# சேவை நலன் பாராட்டு விழா





கண்டி ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் கண்டி நகர் ஜம்மிய்யதுல் உலமா கண்டி நகர் பள்ளிவாசல்கள் சம்மேளனம், கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கம், கண்டி மீராக்காம் பெரிய பள்ளிவாசல் மற்றும் மலே பள்ளிவாசல்கள் ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடத்தும் முன்னாள் கண்டி மாநகர சபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான அல்ஹாஜ் ஏ. எல். எம். நுஹ்மான் அவர்களது சேவை நலன் பாராட்டு விழா கண்டி மீராமக்காம் பெரிய பள்ளிவாசலின் கேட்போர் கூடத்தில் இன்று பி. ப 6.15 மணிக்கு மஹ்ரிப் தொழுகைக்குப் பின் நடைபெறுகிறது. இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் எம். வை. எம். ரிஸ்வி முப்தி பிரதம பேச்சாளராகவும் பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் கண்டி மாநகர சபையின் பிரதி முதல்வர் அல்ஹாஜ் இலாஹி ஆப்தீன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தாம் வாழும் சமூகத்தின் மீதான பற்றும் தம் சக்திக்குரிய வகையில் தமது நல்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சமூகம் பாராட்டக் கூடிய செயல்களில் ஈடுபாடு காட்டி உழைத்தவர்களுள் முன்னாள் கண்டி மாநகரசபை உறுப்பினர் அல்ஹாஜ் ஏ. எல். எம். நுஹ்மான் குறிப்பிடத்தக்க ஒருவர். 2012 மற்றும் 2016 களில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கண்டி மாநகர சபைக்காக இரு தடவைகள் போட்டியிட்டு கண்டி மாநகர சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். இவர் அரசியல் பிரதிநிதி என்ற சொல்லுக்கப்பால் கடந்த 37 வருடங்களாக எந்த விதமான எதிர்ப்புக்களுமின்றி முஸ்லிம் சமூகத்தின் உயிரிழந்த ஜனாஸாக்களை குளிப்பாட்டி அடக்கம் செய்வதில் அவருடைய பண்பும் பலமும் இஸ்லாமிய மார்க்கம் நெறிமுறையிலான உழைப்பும் பரந்த மனமும் உடையவர்.

அதேவேளை முஸ்லிம்களுடைய புனித நோன்பு காலங்களில் சஹருக்கு மக்களை எழுப்புவதற்காக அவர் ஆற்றிய பணி மிகவும் அளப்பரியது. இத்தகைய சேவையைக் கருத்திற் கொண்டு கண்டி மலையக கலாசார சங்கத்தின் இரத்தினதீப விருது, கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் விருது. ரம்புக்கெஹெல ஜும்ஆப் பள்ளிவாசலின் விருது எனப் பல்வேறு சமூக அமைப்புக்களினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டவர்,அவருடனான உரையாடலில் அவர் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு,...

கலந்துரையாடியவர்
**இக்பால் அலி**

**கே:- உங்களது ஆரம்ப கல்வி வாழ்க்கை முறை...**

ப- என் தந்தை பெயர் பிச்சை முஹமட் அப்துல் லத்தீப். அவர் பழைய ஜனாஸா நலன்புரிச் சங்கத்தில் இருந்தவர். தாய் மீராசாய்ப் ஜெஜிஉம்மா. 1951களில் நான் ஆரம்பக் கல்வியினை இந்து சீனியர் வித்தியாலயத்தில் கற்றேன். அங்கு நான் 08 வகுப்பு வரையிலும் கற்றேன். வீட்டில் பொருளாதார நெருக்கடி இருந்தது. நான் முதல், செய்தது நாட்டாமைத் தொழில்தான். காலப் போக்கில் ஒவ்வொருவராக என்னை அழைத்து பழவகை வியாபாரம் செய்வதற்கு வழிகளைக் காட்டினார்கள்.

1960 களில் எனது சாச்சா எச். எம். சாலி கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான பொது சந்தையில் கடை திறந்திருந்தார். சாச்சாவின் கடையில் வேலைக்கு சேர்ந்தேன். அவர் ஒரு நாளைக்கு சம்பளம் 25 சதம் தருவார். போகப் போக தனியாக வியாபார நடவடிக்கைகளில், ஈடுபடவும் முயற்சிகள் செய்தேன். சந்தைக்கு முன்னால் பழக்கடை வைத்தேன். அத்தோடு கண்டியில் மதார் முபாரக் ஹாஜியாரின் நானாவின் நட்பும் எனக்கு கிடைத்தது. எங்கள் இருவருக்கிடையே ஓர் ஆத்மார்த்தமான நட்பு இருந்தது.

**தாம் வாழும் சமூகத்தின் மீதான பற்றும் தம் சக்திக்குரிய வகையில் நல்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சமூகம் பாராட்டக் கூடிய செயல்களில் ஈடுபாடு காட்டி உழைத்தவர்.....**





**கே- நீங்கள் கண்டியில் முஸ்லிம்களின் ஜனஸாக்களை குளிப்பாட்டுவதில் ஒரு பிரதான நபர். ஆனால் அந்த துறையில் நாட்டம் வரக் காரணம் என்ன?**

ப 1983இல் என்னுடைய வாப்பா திடீரென உயிரிழந்து விட்டார். என்னுடைய வாப்பாவின் மையத்தை குளிப்பாட்டியது நான் தான். அன்று என் ஊரில் உள்ள மக்கள் குடும்பத்தவர்கள் பள்ளிவாசல் நிர்வாகசபை உறுப்பினர்கள் என எல்லோரும் இணைந்து இனி வரும் காலங்களில் தம் பகுதிகளில் மரணம் அடையும் ஜனாஸாக்களை நான்தான் குளிப்பாட்ட வேண்டும் என் ஒன்று சேர்ந்து ஏகமனதாக கூறினார்கள். என் வாப்பா கூட மையம் குளிப்பாட்டுவதில் 40 வருடம் அனுபவம் வாய்ந்தவர். வாப்பாவிடம் கற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படை மற்றும் இஸ்லாமிய மார்க்க வழிமுறை அம்சங்களை தெளிவாக விளங்கி மையம் குளிப்பாட்டும் பொறுப்பினை நிரந்தரமாக செய்ய ஆரம்பித்தேன். சுமார் 37 வருடங்கள் மையம் குளிப்பாட்டும் பணியைச் செய்து இன்று ஓய்வு பெற்றுள்ளேன். கண்டி ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் தலைவராக கண்டியில் முபாரக் ஹாஜியார் இருந்துள்ளார். தற்போது மௌலவி பசுலுர்ரஹ்மான் இருந்து வருகின்றார். இச் சங்கத்தில் 23 வருடங்களுக்கு மேலாக நானும் சேவையாற்றி வந்துள்ளேன். இந்த அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி கண்டி வைத்தியசாலையில் உயிரிழந்த உடலை வெளியே எடுத்து அதற்கு வைத்திய பிரேத பரிசோதனை செய்து அவ்வுடலை மஹிய்யாவ மையவாடியில் அடக்கம் செய்தேன். அந்த சந்தர்ப்பத்தில் அசாரி என்ற சகோதரர் மிகவும் ஒத்துழைப்பு வழங்கினார். அதே போன்று நடைபெற்ற 12 வது பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது கண்டியில் 2001ல் இடம் பெற்ற தாக்குதலில் 12 முஸ்லிம் வாலிபர்கள் உயிரிழந்தார்கள். இவ்வுடல்கள் யாவற்றையும் தைத்து குளிப்பாட்டி அடக்கம் செய்தோம். இந்தச் சேவையினை அல்லாஹ் பொருந்திக் கொள்ள வேண்டும் என தினமும் அல்லாஹ்விடம் இருகைகளையும் ஏந்தி பிரார்த்தனை செய்கின்றேன்.

**கே- சேவை மனப்பாங்குடன் நீங்கள் செய்த சேவையில் நெருக்கடியான நிலைமைகளை எதிர்நோக்கியுள்ளீர்களா?**

ப ஆம். ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படும் பணியில் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கட்டுகஸ்தோட்டையிலுள்ள வைத்தியர் ஒருவரின் டிஸ்பென்சரியில் உஸைர் என்பவர் மரணம் அடைந்திருந்தார். இந்த உடலை யார் எடுத்து அடக்கம் செய்வது என்ற தயக்கம் இருந்தது. நானே முன்வந்து அதனைச் செய்தேன். அவ்வுடலை எடுப்பதற்கு தேவையான சகல ஆவணங்களையும் வைத்தியசாலைக்கு கையளித்து அவ்வுடலை வெளியே எடுத்து வந்து அவ்வுடலை குளிப்பாட்டி காபனிட்டு மையவாடிக்கு எடுத்துச் சென்று அடக்கும் வரையிலும் என் பணியை நேர்த்தியாக செய்து வந்துள்ளேன்.



**கே- உங்களுடைய அரசியல் பிரவேசம்?**

ப ஜனாஸா குளிப்பாட்டும் விடயத்தில் ஒவ்வொரு மக்களின் இதயத்திலும் இடம்பிடித்து இருக்கும் கால கட்டத்தில் சில நண்பர்கள் என்னிடம் வந்து நீங்கள் அரசியலில் களமிறங்கினால் எப்படி என்ற கேள்வியினை முன் வைத்தார்கள். எனக்கு இயலாது எனக் கூறினேன். மறைந்த முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்தவத்தவை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் வந்து இம்முறை கட்டாயம் தேர்தலில் நிற்க வேண்டும் தோல்வி அடைந்தாலும் பரவாயில்லை என கூறினார். ஒரு பெரிய மனிதன் வீட்டுக்கு வந்து அழைப்பு விடுக்கும் போது என்னால் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. அவர்களிடம் ஒரு உறுதியான கோரிக்கையை முன் வைத்தேன். நான் வெற்றியீட்டி மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டால் ஒருவர் மரணம் அடைந்துவிட்டால் எனக்கு மாநகர சபையில் இடம்பெறும் கூட்டம் பெரிய விடயமல்ல. எனக்கு உயிர் இழந்தவரின் உடல்தான் பெரியது விடயம். அந்த ஜனஸாவை குளிப்பாட்டுவதற்குச் செல்ல அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து ஒரு உடன்பாட்டோடுதான் நான் போனேன். 2012 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கண்டி மாநகர சபைக்காக போட்டியிட்டு வெற்றி பெற்றேன். இதுதான் என்னுடைய முதல் அரசியல் பிரவேசம். மாநகர சபை உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மாவில்மடவில் ஒருவர் மரணம் அடைந்து விட்டார்.



உயிரிழந்த உடல் வைத்தியசாலையில் இருக்கிறது. நீங்கள் வந்தால் தான் தருவேன் என்கிறார்கள் என தொலைபேசியில் கூறினார்கள். நான் சபையில் இருந்தவாறு அப்படியே கூட்டத்தில் அணியும் தேசிய சீருடையோடு கண்டி வைத்தியசாலைக்குச் சென்றேன். மையத்தை வெளியே எடுத்து அதனைக் குளிப்பாட்டி அனுப்பிட்டு மீண்டும் நான் மாநகர சபையின் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

அப்போது மாநகர முதல்வராக அலுவிஹார இருந்தார். அவசரமாக சென்ற விடயம் என்ன நடந்தது என்று வினவிய முதல்வர், என்னால் பெரிய சேவையொன்று கண்டியில் நடைபெறுகிறது என்று கூறி சேவையைப் பாராட்டினார்.

**கே- நீங்கள் ஜனஸா குளிப்பாட்டுவதிலிருந்து ஓய்வு பெறக் காரணம் என்ன?**

ப என் ஆரோக்கிய உடலில் பாதிப்பு ஏற்பட்டது. வைத்தியர்களுடைய ஆலோசனையும் பிள்ளைகளுடைய பணிப்புரையும் ஜனாஸா குளிப்பாட்டுவதில் இருந்து ஓய்வு பெற வேண்டிய நிலைமைக்கு கொண்டு வந்துள்ளது. தற்போது பூதொர மற்றும் வைத்தியசாலைக்கு அருகில் கவ்பார் ஆகிய இருவர்கள் என்னுடைய சேவையை செய்து வருகின்றார்கள். இத்தகைய பணிகளைச் செய்யும் போது எனக்கு அதிகளவு உதவி ஒத்தாசைகள் வழங்கி வருபவர்களுக்குள் ஒருவர் தான் மௌலவி பசுலுர்ரஹ்மான். நான் தனியே மஹிய்யாவ காட்டுப் பள்ளிக்கு மையத்தை எடுத்துச் செல்வேன். அவரிடம் பள்ளிக்கு மையம் எடுத்து வருகின்றேன் என ஒரு செய்தி மட்டும்தான் சொல்லுவேன். அவர் ஊர் மஹிய்யாவையிலுள்ள 7 பேர் அளவிலான இளைஞர்களை தயாராக வைத்துக் கொள்வார். மையத்தை ஒருவரால் தூக்கிச் செல்ல முடியாது. மலைப்பாங்கான மிக உயரமான இடம். வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத மையத்துக்கள் விழுந்தால் அடக்குவதற்கு என மையவாடியில் அதற்கென தனியான இடம் ஒன்றை பள்ளி நிர்வாகம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

**கே- அரசியல் ரீதியாக நீங்கள் ஆற்றிய பணிகள்.?**

ப மாநகர சபையால் செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகளில் கண்டி மாநகர சபைக்கு சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுத்துள்ளேன். கண்டி நகரிலுள்ள ஸ்ரீ செல்வவிநாயாகர் கோயிலுக்கருகால் செல்லும் வீதியை சுற்றிவரவுள்ள பாதை, லேக் பாதை, ஆட்டுப்பட்டி வீதி, அலி முடுக்கு வீதி என கண்டி நகரிலுள்ள அதிகளவிலான முடக்கு வீதிகளுக்கு காபட் இட்டு பொது மக்களின் பாவனைக்காக கையளித்துள்ளேன். பெரியளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக கொடுத்துள்ளேன். அப்பொழுது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தார். அவர் மூலமாக நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றது.

அதே போன்று அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே, லோஹான் ரத்தவத்தை, திலும் அமுனுகம போன்ற அரசியல் வாதிகள் நிதி ஒதுக்கீடுகள் செய்து தருவார்கள். அதே போன்று அப்போது முதல்வராக இருந்த மமேந்திர ரத்வத்தை 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டை செய்து தந்தார். இந்த நிதிக்கு ஐந்து வேலைத் திட்டங்கள் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இரு தடவைகள் கண்டி மாநகர சபைக்கு போட்டியிட்டு மாநகர சபை உறுப்பினராக இருந்துள்ளேன்.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## கண்மறையும் மனிதர்கள்

காலியான பாத்திரத்தில் காற்றிருக்கும் மறவாதே!
காதலென்று வீசும்புயல் காற்றினையே எண்ணாதே!
போலியான புன்னகையைப் புனிதமென்று நம்பாதே!
போக்கிலியின் வாக்குதனை போதனையாய்க் கொள்ளாதே!
வேலியிங்கு பயிர்மேயும் விசித்திரத்தை மெச்சாதே!
வேர்முறித்து மரம்ரசிக்கும் விலங்கினத்தை ஒட்டாதே!
தாலியொன்று போடுமுன்பு தாரமென்று ஆக்காதே!
தாய்மொழியைக் கொன்றழித்துத் தத்துவமும் பேசாதே!

கூலியின்றி வேலைசெய்து குடும்பமது நடத்தாதே!
கூட்டாளி யாகிடினும் கொள்கைவிட்டுக் கொடுக்காதே!
சோலிபெற்று விட்டபின்பு சொதப்புதலும் செய்யாதே!
சொத்துசுகம் சேகரித்தே சுகமிழந்து நிற்காதே!
காலிலாத மனிதர்முன் கலைநடன மாடாதே!
காசிலாத நேரத்திலே கடன்வாங்கித் தொலைக்காதே!
நூலிலாமல் நெசவுசெயும் நோக்கம்தான் வைக்காதே!
நூறிலாமல் ஆயிரத்தில் நோட்டமுமே விடாதே!

உழைத்திடாமல் வாழுமாசை உள்ளந்தனில் வைக்காதே!
உழைப்பவர்தம் வியர்வையினை உதாசீனப் படுத்தாதே!
அழைப்பிலாமல் பந்தியிலே அமர்ந்திருந்து உண்ணாதே!
அழகுக்காக மணந்துவிட்டு அவசரமாய் புலம்பாதே!
பிழைதிருத்திக் கொண்டிடாதப் பிழைமீண்டும் செய்யாதே!
பிழைக்கவழி இல்லையெனப் புலம்பிநிதம் தவிக்காதே!
கழைத்துளைக்குள் நுழையும்வளி கீதமாகும் அறிவாயே!
காற்றிழுத்து முடிவதகுள் கற்றுவாழ மறவாதே!

கார்முகிலை தடைசெய்யக் காடழிப்புச் செய்யாதே!
கானலிலே விதைபோட்டு காத்திருப்புக் கொள்ளாதே!
நீர்க்கரைகள் சிதைத்துவிட்டு நிலவரட்சிக் குதவாதே!
நெஞ்சமதில் பொய்நிரப்பி நேர்மையென விற்காதே!
ஊர்விழுங்கத் தவமிருக்கும் ஊழல்கை உயர்த்தாதே!
உன்வாழ்வோ உன்கையில் உணர்ந்தொழுக மறவாதே!.
தேர்தலிலே நிற்பவரை தெய்வமென்று நம்பாதே!
தெரிந்திருந்தும் வாக்களித்து தெருவினிலே நிற்காதே!

வாலிபத்தின் முறுக்கினிலே வயோதிபத்தை வதைக்காதே!
வளர்குழந்தை மனதினிலே விசவார்த்தை விதைக்காதே!
பாலிலாமல் அழுங்குழவி பார்த்திருந்து ரசிக்காதே!
பாவமெலாம் புரிந்துவிட்டு பக்தவேசம் போடாதே!
வாலிலாத குரங்கினத்தின் வடிவமாக மாறாதே!
வசதியற்றப் பெண்ணிடத்தில் வரதட்சணைக் கேட்காதே!
கோலிலாது நடக்குமட்டும் கூடவருவார் யாருமே
கொஞ்சம்நீ தளர்ந்துவிட்டால் கண்மறைவார் புரிவாயே!

**மெய்யன் நடராஜ்**



## நான் யார்?

ஈன்ற நேரம் உன் மேனியில்
ஈன்றவளின் இரத்தமும் அழுக்கும்
இருந்ததை உணர்ந்திராத நீ
தாயின் மேனியில் உன்னை
சுத்தம் செய்ததை
அறிந்திராத நீ
பசி என்பதை அறிந்திராத நீ
என்ன செய்வதென்று தெரியாத நீ
முலைக்காம்பில் அமிர்த உணவுண்டு
என்பதை புரியாத நீ
முலைக்காம்பை தானாக சுவைக்கத்
தெரியா அற்பன் நீ

அழ மட்டும் தெரிந்த நீ
தாயின் உதிரம் தான் என் உணவு
என்பதை உணரா நீ
நன்றாய் தூங்க தெரிந்த நீ
தூக்கம் தொலைத்தவளை அறியா நீ

பேச தெரியா நீ
பேச கற்றுத்தந்த
முதல் குரு அறியா நீ
நடக்கத் தெரியா நீ
கைபிடித்து பலக்கிய
கை மறந்த நீ

எழத்து தெரியா நீ
எழுத்தறிய வைத்தவள் அறியா நீ
காத்திருந்து மறைந்திருந்து
கலாசாலையில்
கல்விபயில வைத்தவள் அறியா நீ
ஒன்றும் தெரியா நீ
இப்போ உனக்கு ஒன்றும் தெரியா ?
என உரைப்பது சரியோ ?
மானிடா சற்று பின்னோக்கிப் பார்
எல்லாம் உனக்குத் தெரியும்
நான் யாரென்று புரியும்.

தோப்பூர்

**முகம்மது முகைதீன் நௌபீக்**




## கனவான வலிகள்

தூக்கம் இல்லாத
நாட்கள்,
கனவுகள் காணத
இரவுகள்,
மறக்க நினைத்த
ஞாபகங்கள்
யாவும் என்னுள்
சுமைகலாய் இன்று.

இரக்கம் இல்லாத
மனிதர்கள்,
உறக்கம் தேடும்
கயவர்கள்
யாவும் நிறைந்து
போன உலகம்
இது என்பதால்.

கவலை கொள்ள
யாருமில்லை என்று
பெறுமிதம் கொள்வதை
விட,
கவலையில்லாத மானிடர்களும்
இங்கில்லை என்று
பெறுமிதம் கொள்கிறது
வாழ்க்கை.

**பொத்துவில் அஜ்மல்கான்**



## உம்மாவுக்கு ஒரு கண்ணீர் கவிதை

அரபுலகின் செல்வச் சீமாட்டி
அன்னை கதீஜாநாயகி வழிவந்த
மாதசிரோன்மணிஅஸ்மா உம்மா
என் உம்மம்மா பாசத்தின் இருப்பிடம்
என்னை வளர்த்தெடுத்த மெருமாட்டி
அமுதூட்டி வார்த்தெடுத்த நல்லன்னை!

எனது வாழ்க்கையில் உம்மா என்றதைவிட
உம்மம்மா என்றழைத்ததே அதிகமென்பேன்
என் வளர்ச்சியில் பாங்கிபோலிருந்து
அன்பு காட்டியவர் என் உம்மம்மா
என் விடயத்தில் எந்த முடிவும்
அவரே எப்பொதும் எடுப்பார்!

உடுத்தும் ஆடை முதல் அனைத்து
அணிகளனும் அவரே தேர்ந்தெடுப்பார்
அவர் பேச்சுக்கு மறுவார்த்தை
எவரிடமும் கண்டறியேன்
காருண்யம் நிறைந்த மனங்கொண்ட
பெருமாட்டி எனது உம்மம்மா!

தானே உழைத்து தன்தேவையில்
நிறைவுகண்ட செல்வச் சீமாட்டி
தன்னுழைப்பில் சேர்த்தெ டுத்து
இறையில்லம் கஃபாவை கண்டு வந்தவர்
பொறுமையின் இருப்பிடமாய்
இறுதி மூச்சுவரை திகழ்ந்தவர்!
உம்மம்மாவுக்கு இதயநோய் வந்தபோது
உற்ற பேத்திகளாம் எமையழைத்து

டாக்டருக்குப்படி மா என்றே
புலம்புவார் என்னென்றும்
அவர் கண்டகனவை எம்மால்
நிறை செய்ய முடியாத கவலை எனக்கு!

என்றாலும் கூட நான் பல்கலைபோக
உம்மம்மாவின் துஆதான் காரணி
மறவேன் உம்மம்மா உங்களை ஒருபோதும்
உங்கள் மன்னறை சுவனத்து பூங்காவாய்
மாறுவதற்கு படைத்த நாயனிடம்
நாளும் பொழும் பிரார்த்திக்கிறேன்!

நல்லவர் என்றே ஊர் புகழ்ந்தது
அன்பு காட்டுவதில் உயர்குணம்
யாரையும் கடிந்ததை கண்டறியேன்
தன் பிள்ளைமட்டுமல்ல பேரப்பிள்ளையாம்
எம்மையும் வாரியணைத்து முத்தியவர்
கண்ணுக்குள் வைத்து எமை பார்த்தவர்

உம்மம்மா என்மீதி கொண்ட பாசம்
முழு நிலவுக்குச் சமமானது நீங்கள்
என்னிடம் சொன்ன ரகசியங்கள் நிறையவே
இன்று உங்களை நினைக்க என் கண்கள்

வற்றாத ஆறாய் ஓடிப் பாய்கிறது
என் இதயம் கணக்கிறது உம்மம்மா!

குடும்பத்தில் ஊரில் பிரச்சினை என்றால்
உங்கள் ஆலோசனை, அறிவுரைகள்
துணையாய் நின்றன
நல்ல தீர்வுக்கு வழிகாட்டின
ஈமானியத்தின் பொக்கிஷமாய்
திகழ்ந்த உம்மம்மா பெரும் சீமாட்டி!

படைத்தவனே ரப்பே உன்னிடம் ஆசிக்கிறேன்
என் உம்மம்மாவின் பாவம் பொறுத்திடு
எமைக்காத்த அன்னையவளுக்கு
பிர்தௌஸ் எனும் சுவனப்பூங்காவில்
ஓரிடத்தை அழகாய்வழங்கிடு
இது எனது ஆழ்மனப் பிரார்த்தனை!

**ஸும்லா சுல்பிக்**

பேராதனை பல்கலைக்கழக மாணவி
(அண்மையில் இறையடி சேர்ந்த பாணந்துறை எழுவிலவைச் சேர்ந்த அஸ்மா உம்மாவின் நினைவாக அவரது பேத்தி எழுதிய கண்ணீர்க் கவிதை )

## அன்புக் கணவன்

நீ அவளை உயிர் என்கிறாய்
அவள் உன்னை உலகம்
என்கிறாள்
கண்மூடினால்
அவள் எதிரில் நிற்கிறாய்
கண் கலங்கினால்
காதலைக் கொடுக்கிறாய்

தினமும் சண்டையிடுகிறாய்
அவளை சமாளிக்க அன்று
வேலைகள்
அத்தனையும்
நீயே செய்கிறாய்
காரணம் கேட்டால்
சமாதான
கெஞ்சல்களுக்காய்
என்கிறாய்

காலத்தை கனவுகளால்
அலங்கரிக்கிறாய்
கண்மணி
அவளை கண் கலங்காமல்
பார்க்கிறாய்

இரவில் சிசு அழுதால்
உன் தோளிலே
தூங்கவைக்கிறாய்
பரிதாபம் கொண்டு
அவள் பார்த்தால் நம்
குழந்தையென்று
புன்னகைக்கிறாய்

தவறுகள் அவள் செய்தால்
குழந்தையாய் அதட்டுகிறாய்
கோபத்தில் அவள்
அழுதால் அன்னையாய்
அரவணைக்கிறாய்

அவள் சமையலை
வாசனை நுகர்ந்தே
பாராட்டுகிறாய்
அவள் மனம் நோகாமல்
பக்குவமாய் அறிவுரைகள்
பல சொல்லுகிறாய்

வேலைக் கலைப்பில்
இருந்தாலும்
அவள் முகம் பார்த்தே
மகிழ்கிறாய்
உன் வாழ்நாளையெல்லாம்
உன் மனைவிக்கே
அர்ப்பணிக்கிறாய்

சோகத்தில் நீயிருந்தாலும்
புன்னகை முகமூடி
அணிகிறாய்
மனைவியின்
திட்டல்களையும்
அவள் திருப்திக்காய்
கேட்கிறாய்
பிள்ளைகளின்
குறும்புகளிலும்
புன்னகை காண்கிறாய்

தோல் சுருங்கும் வேலையிலும்
இப்படியே மாறா அன்போடு
இருந்து விடு என்கிறாள்
மனைவியே ! அப்போதும்
என் மனம் தேடும்
ஜீவன் நீ மட்டுமே என்கிறாய்

வயோதிப வயது வந்தாலும்
இறுதியில் உனக்கு நானும்
எனக்கு நீயும்
குழந்தையல்லவா
என்கிறாய் உன்
அன்பில் திகைத்தவளை
செல்லமாய்
சீண்டிப்பார்க்கிறாய்

இமைமூடாது உன்னவள்
உனதன்பில்
ஆனந்தக்கண்ணீர்
சிந்துகையில் அவளின்
நெற்றி முத்தமிட்டு

கண்மணியே..!
என் கரம் பிடித்த
உனக்கு காலம் முழுவதும்
காதலைத் தரும்
உன் அன்புக் கணவன்
நானல்லவா என்கிறாய்!

**மஜினா உமறு லெவ்வை**

மாவடிப்பள்ளி

## 2022 வயதாகும் வருடம்




நாளையும் நாளையையும்
நாழிகையில் கிழித்த நாட்காட்டியில்
சிறப்பித்திடும் ஏட்டினில்
பரிதவிக்கும் நாட்டினில்
காகிதம் கவலையடைந்த கோட்டினில்.
வீட்டில் வரையறுக்கும் எலும்பில்
வீதியில் வினையறுக்கும் விளிம்பில்
கொலை செய்யும்
நேரத்தின் விலை தெரியாது
மனமும் அறிவும் அறியாது
தேடலற்ற பயணத்தை புரியாது
நகரும் கடிகாரம் நிறுத்தது.
வாரத்தின் வார்த்தைகள்
வானவில்லின் நிறங்கள்,
மாதங்களின் இலக்கங்கள்
மாதிரி வினாத்தாள்கள்
பூர்த்தி செய்யாதே விடைகள்.
வாலிபமும் வயோதிபமும்
வரலாற்றின் சான்றுகள் தேடியது,
ஓடியது யாருக்காக என்று
இமைகள் மூடியது
விடிந்தது வழக்கம்
மாற்றியதா! பழக்கம்
நகர்த்தி சென்றதில்
நகர்ந்து செல்லும் சுவடுகள்
கடத்தியதில் நிகழ்த்தியதற்கு
காலம் பதில் சொல்லும்
வருடிக் கொண்டு
விட்டு சென்று
வயதாகும் வருடம்.

**மபாஸ்**

# கிழக்கின் குரல்



# கல்முனை கடற்கரைப் பள்ளி கொடியேற்ற விழா நினைவு முத்திரை வெளியீடு












**பெரியநீலாவணை விசேட, கல்முனை விசேட நிருபர்கள்**

கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற கல்முனை கடற்கரைப் பள்ளி வாசல் நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 200ஆவது வருடாந்த கொடியேற்ற விழாவை முன்னிட்டு 25 ரூபா பெறுமதியான நினைவு முத்திரை ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் என்பவற்றின் நிர்வாக சபைத் தலைவர் டாக்டர் எஸ்.எம். ஏ.அஸீஸ் தலைமையில் நேற்று முன்தினம் (06) மாலை, பள்ளிவாசல் மண்டபத்தில் இடம்பெற்ற இம் முத்திரை வெளியீட்டு வைபவத்தில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம்.ஹரீஸின் விசேட அழைப்பின் பேரில் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதம அதிதியாக கலந்து கொண்டு முத்திரையை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

இந் நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா, கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், பிரதித் தபால் மாஅதிபர் ரஞ்ஜித் ரணசிங்க, கிழக்கு மாகாண பிரதி தபால் மாஅதிபர் ஜெயநந்தி திருச்செல்வம், தபால் தலைமையக பணிப்பாளர் சாந்தகுமார மீகம, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் எஸ்.எம்.வை.செனவிரத்ன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க ஆகியோர் கௌரவ அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

## மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலையாக தரமுயர்வு

**(கல்முனை விசேட நிருபர்)**

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தல் அங்குரார்ப்பண வைபவம் நேற்று (07) நடைபெற்றது.

நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாகவும் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டிருந்தனர்.

அரசின் ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தல் திட்டத்தின் கீழ் இக்கல்லூரியும் உள்வாங்கப்பட்டு, தேசிய பாடசாலையாக தரமுயர்த்தபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. பெரு வெள்ளம்; 842 பேர் பாதிப்பு

### மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 தினங்களாக பெய்த அடைமழை காரணமாக, ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 227 குடும்பங்களைச் சேர்ந்த 842 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி பெய்த மழையினால் 183 குடும்பங்களைச் சேர்ந்த 692 பேரும், 4ஆந் திகதி பெய்த மழையினால் 25 குடும்பங்களைச் சேர்ந்த 84 பேரும், 5 ஆந் திகதி பெய்த மழையினால் 19 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேருமாக மொத்தம் 842 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் 9 கிராம சேவகர் பிரிவுகளும், மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் 5 கிராம சேவகர் பிரிவுகளும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவுகளும் மண்முனைப்பற்று ஆரையம்பதி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த தலா 1 கிராம சேவகர் பிரிவுகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் பகுதியளவில் சேதமான வீடு ஒன்றும், அடிப்படைக் கட்டமைப்பு பாதிப்பு ஒன்றுமாக பதிவாகியுள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவுக்கு தகவல் தெரியவந்துள்ளது.

## கிழக்கின் தேசிய பாடசாலைகள் கையளிக்கும் பிரதான நிகழ்வு

**றொட்டவெவ குரூப் நிருபர்**



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சௌபாக்கியத்தின் நோக்கு' வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தலைமையில் நேற்று (07) மஹதிவுல்வெவ சிங்கள தேசிய பாடசாலையில் கிழக்கு மாகாணத்தின் பிரதான நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையின் கல்வியின் உண்மையான சுதந்திரத்துக்காக தேசிய பாடசாலைகள் எண்ணிக்கையை ஆயிரம் வரையில் அதிகரிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் 71 பாடசாலைகள் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துக்கோரல, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரல மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் என்.புள்ளநாயகம், கிழக்கு மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆரியவதி கலப்பத்தி, பிரதேச சபை தவிசாளர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் அழைப்பின் பேரில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை சிலோன் மீடியா போரத்தின் உறுப்பினர் சந்தித்து கலந்துரையாடி பின்னர் பிடிக்கப்பட்ட படம்.

## கொக்குவில் வீடு தீக்கிரை; இரு பெண்கள் உட்பட 07 பேர் கைது

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு 50 வீட்டுத் திட்டத்தில், வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் உட்பட 7 பேரை வியாழக்கிழமை (06) கைது செய்ததாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை (01) இப் பகுதியில், மீன்பிடியில் ஈடுபட்டு வரும் இரு குழுவினர் மதுபோதையில், வாய்த்தர்க்கம் ஏற்பட்டு சண்டையாக மாறியதையடுத்து ஒருவர் படுகாயமடைந்ததுடன், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நாகநாதன் நவநீதனின் வீடு இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டு, வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், இரு பெண்கள் உட்பட 7 பேரை கைது செய்துள்ளனர்.

### சிரேஷ்ட ஊடகவியலாளர்

## லசந்த விக்ரமதுங்கவின் நினைவு தினம் இன்று மட்டக்களப்பில்

**கல்லடி குறூப் நிருபர்**



படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் 13 வது ஆண்டு நினைவு தினம் இன்று (08) காலை மட்டக்களப்பில் அனுஸ்டிக்கப்படும்.

இன்று காலை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நிகழ்வை நடத்தவுள்ளது.

முதல் நிகழ்வாக காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு நகரில் உள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

அதனை தொடர்ந்து மட்டு. ஊடக அமையத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் திருவுருவப் படத்திற்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரமுகர்கள் மற்றும் மத தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மாகாண ஆளுநர் முறைமை ஜனநாயகத்துக்கு முரணானது

**மாளிகைக்காடு நிருபர்**



13வது திருத்தம் என்பது இலங்கையையும், தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்காக இந்தியாவினால் கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தமாகும். இச்சட்டத்தின் படி மக்கள் வாக்குகள் மூலம் தெரிவாகும் மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அச்சபைகளை கட்டுப்படுத்தும் முழு அதிகாரமும் மத்திய அரசுக்கு உண்டு என்பதை ஆளுநர் நியமிப்பதன் மூலம் வரையறுத்தது என ஐக்கிய காங்கிரஸின் தலைவர் மௌலவி கலாபூசணம் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும்,

அன்றிருந்த தமிழ் கட்சிகள் ஆக குறைந்தது ஆளுநர் என்பவரும் ஜனாதிபதி போல் மாகாண மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என சட்டம் இயற்றியிருக்கலாம். அப்படி செய்யவில்லை. மாறாக ஆளுநர் என்பவர் மத்திய அரசால் நியமிக்கப்படுபவர். அவருக்கு அடிமையாகவே மாகாண சபையும் இருக்கிறது.

இந்தியாவிலும் மாநிலங்களை ஏற்படுத்தி விட்டு அம்மாநிலங்களை மத்திய அரசின் அடிமைகளாக வைத்திருக்கும் வகையிலேயே ஆளுநர் பதவி ஏற்படுத்தப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்படாத ஆளுநர் நினைத்தால் மக்கள் தெரிவு செய்த மாநில சபையையும் கலைப்பதற்கு சிபாரிசு செய்யலாம். இது ஜனநாயகத்துக்கு முற்றிலும் முரணானதாகும் என குறிப்பிட்டுள்ளார்.

## சேதன பசளை செய்பவர்களுக்கான இயந்திரங்கள் வழங்கிவைப்பு

**கல்குடா தினகரன் நிருபர்**

விவசாய அமைச்சின் சேதன விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாரிய அளவில் சேதன பசளை செய்பவர்களுக்கான இயந்திரங்கள் செயலகம் தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் விவசாய அமைச்சின் சேதன விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாரிய அளவில் சேதன பசளை செய்பவர்களுக்காக விவசாய ரோட்டாவேட்டர், உரம் கிரஷர் இயந்திரம் வழங்கும் நிகழ்வு செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கணக்காளர் எம்.ஐ.எஸ். சஜ்ஜாத் அஹமட், நிருவாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.ஹமீட், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




# நுவரெலியாவில் இன்றும் நாளையும் மின்தடை

**தலவாக்கலை குறூப் நிருபர்**

அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று (8) சனிக்கிழமை நாளை (9) ஞாயிற்றுக்கிழமைகளில் காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணி வரை எட்டு மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் நுவரெலியா கிளை அறிவித்துள்ளது.

இதன்படி லிந்துலை வைத்தியசாலை, லிந்துலை நகரம், லெமிலியர் தோட்டம், மட்டுக்கலை தோட்டம், சென் கூம்ஸ், பாமஸ்டன் தோட்டம், கல்கந்தவத்தை தோட்டம், சமர்செட் பங்களா, சமர்செட் தோட்டம், லேங்டல் தோட்டம், வங்கிஓயா தோட்டம், ரதெல்ல தோட்டம், ரதெல்ல கிளப், உடரதெல்ல, உடரதெல்ல இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகிய பகுதிகளில் மின்சாரம் தடை செய்யப்படும்.

# மனித வள அபிவிருத்தி நிதியத்தின் (PHT) செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்

2022 ஆம் ஆண்டு பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தினால் (PHT) முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் பத்தரமுல்லையில், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் கடந்த ஆண்டு இடம்பெற்ற அபிவிருத்தி செயற்பாடுகள் என்பன அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடும் போது இளைப்பாற, உணவு உட்கொள்ள, கழிவறை வசதிகளுடன் நிர்மாணிக்கப்படும் இளைப்பாறு கட்டடத்தை விரைவாக முன்னெடுக்குமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.



மேலும் ஹட்டன், நுவரெலியா, பதுளை, கண்டி, காலி, கேகாலை, இரத்தினபுரி ஆகிய பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய காரியாலயங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வீடமைப்பு திட்டங்கள் தொடர்பாக இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அத்தோடு கடந்த அரசாங்கத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உடனடியாக பூர்த்தி செய்து மக்களுக்கு கையளிக்குமாறும், பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள விளையாட்டு மைதானங்களை புனரமைக்குமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய காரியாலயத்தின் அதிகாரிகள், சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பணிப்பாளர் மற்றும் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

# மாத்தளையில் கலைமகளின் தெய்வீக கிராமிய நிகழ்வு

இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலைமகளின் தெய்வீக கிராமிய நிகழ்வு நாளை மாத்தளையில் இடம்பெற்றவுள்ளது.

இந்நிகழ்வு மாத்தளை கந்தேநுவர தமிழ் வித்தியாலயத்தில் நாளை மு.ப. 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்களும், சிறப்பு அதிதியாக மாத்தளை இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சங்கீதா கோபிநாத் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும், கௌரவ அதிதிகளாக இரத்தோட்ட பிரதேச சபை உபதலைவர் ஏ. ஆனந்தகுமார், பாடசாலையின் அதிபர் ஜே. நந்தரூபன், அருட்சொல் செம்மணி சைவ புலவர் ஜீவன் பிரசான், நித்திய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ இரமேஷ் குமார் சர்மா ஆகியோரும் கலந்துக் கொள்ளவுள்ளனர்.





2020 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய கிளனனோர் தோட்டத்திற்கான உள்வீதி புனரமைக்கப்பட்டு இ.தொ.காவின் உப தலைவரும்,பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்ட போது. செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வீதிக்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிகிரியாவிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

வரலாற்று சிறப்புமிக்க சிகிரியா பிரதேசத்தை பார்வையிடுவதற்காக வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக சிகிரியா குன்று பராமரிப்பு திட்ட முகாமையாளர் நிசாந்த தெரிவித்தார்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளினால் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

தற்போது கொவிட்19 தொற்று பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததையடுத்து சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த இரண்டு மாதத்திற்குள் சுமார் 25 000 உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் சீகிரியா பிரதேசத்திற்கு வருகை தந்துள்ளனர். இதில் ஜப்பான், இந்தியா, கனடா, மத்திய கிழக்கு ஆசிய நாடுகளை சேர்ந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளே அதிகளவில் வருகை தந்துள்ளதாக தெரிய வருகின்றது.

# இரத்தினக்கல் அகழப்பட்ட குழிகளால் டெங்கு பரவும் அபாயம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இரத்தினக்கல் அகழ்ந்து விட்டு கைவிடப்பட்ட பாழடைந்த நிலையிலுள்ள குழிகளால், டெங்கு நோய் பரவும் ஆபத்து நிலவுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அரசியல் தரப்புக்கள் பொறுப்பான அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக இடம் பெற்று வரும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வின் பின் தோண்டப்பட்ட குழிகள் கை விடப்படுவதால் நுளம்புகளின் ஆதிக்கம் அதிகரித்து டெங்கு உட்பட ஏனைய நோய்களுக்கான அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருவதாக சூழல் பாதுகாப்பு அமைப்புகள் பொதுமக்களுக்கு முறையிட்டு வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்தலை கட்டுப்படுத்துவதில் நெருக்கடிகள் நிலவுகின்றது. நோய்கள் பரவும் ஆபத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க இரத்தினக்கல் அதிகார சபை இந்த குழிகளை மூடிவிட அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# சதொச நிலையத்தை மீண்டும் திறக்குமாறு மக்கள் கோரிக்கை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை பிரதான வீதியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையம் ஒரு வருடத்துக்கும் மேலாக மூடியிருப்பதால் அசௌகரியத்துக்கு உட்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக இயங்கி வந்த சதொச விற்பனை நிலையம் பழுது பார்ப்பதற்காகவும் நவீனப்படுத்துவதற்காகவும் எனக் கூறி ஒரு வருடமாக மூடப்பட்டுள்ளது. எனினும் நாட்டின் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் பொது மக்கள் நிர்க்கதியாகி உள்ள நிலையில், சதொச மூலம் சில பொருட்கள் சலுகை விலையில் விற்கப்பட்டது. இந்த வாய்ப்பு ஏழை மக்களுக்கு கிடைப்பதில்லை என இம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பழுது பார்த்தல் நடவடிக்கைகள் இருப்பின் அப்பணிகளை விரைவாக பூர்த்தி செய்து விட்டு, பொது மக்களுக்கான சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி சதொச நிலையத்தை மீண்டும் திறக்குமாறு மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

# பாடசாலை இடைவிலகல் ஏற்படுத்தும் பிரச்சினைகள்

## குற்ற உணர்வால் பாதிப்படையும் பெற்றோர்

உளநலம் என்பது ஒரு நபர் தனது சொந்த திறன்களை உணர்ந்து வாழ்க்கையின் இயல்பான போக்கையும் அது தரும் அழுத்தங்களையும் சமாளித்து மகிழ்ச்சியான நிறைவுமான வாழ்க்கை நடத்துவதை குறிக்கின்றது. சமூகத்தின் ஒவ்வொரு தரப்பினரும் தமது வாழ்க்கையை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு உள்ளம் நலமாகவும், இயல்பு தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும். உளநலம் பாதிப்படைகின்ற போது ஒருவர் தன் அன்றாட பணிகளை முறையாக செய்து முடிக்கக் கூடிய நிலையில் இருக்க மாட்டார்.

இதேசமயம் சமூகமொன்றின் அனைத்து தரப்பினரும் ஏதோ ஒரு வகையில் உள நலம் பாதிக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இதற்கு அதிக மன அழுத்தமும் சூழல் காரணிகளுமே பிரதான காரணிகளாகின்றன. நாட்டின் பிரஜையாக வாழ விரும்பும் ஒவ்வொரு நபரும் குடும்பம் எனும் அலகிலிருந்தே தோற்றம் பெறுகின்றனர்.

**'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது'**

தன்னை விட தனது குழந்தைகள் அறிவு பெறுவது, உலகின் அனைத்து உயிர்களுக்கும் இனிமையானதாகும் என்பது வள்ளுவன் வாய்மொழியாகும். தான் ஈன்றெடுத்த பிள்ளைகளை சான்றோராக உருவாக்குகின்ற பெரும் பொறுப்பு பெற்றோர்களுடையதாகின்றது.

ஆனால் மாணவர்கள் அறிவை விருத்தி செய்து கொள்ளக்கூடிய பாடசாலைகளிலிருந்து தமது கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்திக் கொள்ளும் போது பாதிக்கப்படும் முதல் தரப்பினர் பெற்றோர்களே. பிள்ளைகளுக்கு உணவளித்து, உடை அளித்து, தன் அறிவை வளர்த்துக்கொள்ள கல்வி எனும் அழியாப்பொருளை பெற்றுத்தர பகீரதப்பிரயத்தனம் செய்பவர்களும் பெற்றோர்களே.

பல்வேறு காரணங்களால் பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் தொகை கொரோனா சூழ்நிலைக்கு பின்னர் மிக வேகமாக அதிகரித்துள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சமமான தரமான கல்விக்காக கற்பதை கட்டாயமாக்கியுள்ளது. மாணவர்களுக்கு அடிப்படை கல்வியை சமத்துவமாக வழங்குவதற்கு முயற்சித்து வருகின்றன.

**ஏன் மாணவர்கள் இடைவிலகுகின்றனர்?**

மாணவர்கள் கற்பதை சுமையாக கருதுகின்றமையே பிரதானமான காரணியாகும். இளவயது பால் உணர்வால் தூண்டப்பட்டு மாணவர்களின் கல்வி இடையிலேயே பாதிப்படைகின்றது. அதுமட்டுமல்ல கல்வியில் ஆர்வம் இன்றி பொறுப்பற்று செயற்படுவதும் இடைவெளிகளுக்கு காரணமாகின்றது. மாணவர் சார்ந்த காரணங்களில் இதை மட்டும் குறிப்பிட முடியாது.

மாணவர் கல்வி இடைவிலகலில் குடும்ப காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்ப வறுமையும் ஒரு முக்கிய காரணம். தனக்கு கீழ் சகோதர சகோதரிகள் இருக்கும் வறுமையான குடும்பங்களில் மூத்தவர் கல்வியை தொடர முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றார். சில குடும்ப அங்கத்தவர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. பிள்ளைகளை மட்டந்தட்டுவதும் மாணவர்களின் கல்வி இடைவிலகலுக்கு காரணமாக அமைகின்றது.

பாடசாலை காரணிகளை பொறுத்தவரையில் ஆசிரியர்களின் கவனக்குறைவு மிக முக்கியமானதாகின்றது. பாடசாலை கல்வியில் குறைவான ஆர்வம் கொண்ட மாணவர்களை மட்டம் தட்டி அவர்களிடம் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிவிடும் பாடசாலை சமூகத்தின் கீழ்தரமான செயற்பாடுகளினால் மாணவர்கள் இடைவிலகளை நோக்கி தள்ளப்படுகின்றனர்.

சமூகத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளினாலும், பிறரின் முன்னேற்றத்தை விரும்பாத பொறாமைக் குணத்தினாலும் மாணவர்கள் இடைவிலகிச் செல்ல நேர்கிறது. சமூகம் கட்டமைக்கும் உண்மைக்கு புறம்பான அம்சங்களும் வறுமையில் வாடும் மாணவர்களுக்கு உதவாத நிலையும் ஏனைய காரணங்களாகின்றன.

சமூகத்தில் உறவினர்கள் அயலவர்கள் என சமூகச் சூழல் காரணிகள் பலவும் மாணவர் இடைவிலகல் ஊக்குவிக்கின்றன.

இதனால் மாணவர்கள் ஒரு புறமும் பெற்றோர்கள் ஒருபுறமும் பாதிக்கப்படுகின்றனர்.

எனினும் மாணவர்கள் இடைவிலகும் போது அதற்கான பொறுப்பின் பெரும் பங்கை பெற்றோர்களே ஏற்க வேண்டியுள்ளது. தம் பிள்ளைகள் கல்வியில் இருந்து இடை விலகும் போது பிள்ளைகளுக்கான முழுமையான கல்வியை பெற்றுக் கொடுக்க தவறியவர்களாக எண்ணிக் கொள்கின்றனர். இதனால் உளநல மற்றும் உடல்நல பாதிப்புக்குள்ளாகின்றனர்.

இலங்கையின் தற்போதைய கொரோனா காலப்பகுதியில் 2020ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் இலங்கையில் 62 வீதமான தந்தைமாரும் 58 வீதமான தாய்மாரும் தனது ஆரம்ப கல்வியை இடைநடுவில் விட்டுச் சென்றவர்களாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில் தம் பிள்ளைகளின் இடைவிலகலுக்கு காரணம் தாம் போதிய கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதே என எண்ணி சில பெற்றோர் கவலை அடைகின்றனர்.

அதிலும் தற்காலத்தில் நிலவும் விலைவாசி பிரச்சினைகளும், பொருளாதார நெருக்கடி நிலைமைகளும் சிறுபான்மையின மக்களை மட்டுமன்றி பெரும்பான்மையின சமூகத்தினரையும் கூட சிரமத்தை நோக்கி தள்ளியுள்ளது. உயிர்வாழ்வதற்கு உணவா? இல்லை பிள்ளைகளுக்கான கல்வியா? எனும் போது உணவே பிரதானம் ஆகின்றது. இவ்வாறான சூழ்நிலைகளால் பிள்ளைகளின் இடைவிலகல் துரிதப்படுத்தப்படுகிறது.

பாடசாலை கல்வி வலையமைப்பு கல்வியாக மாறியபோது ஒரு சில மாணவர்கள் அதனை முறையாகப் பெற்றுக் கொள்ள முடியாமலும் கல்வியை தொடர முடியாமலும் இடைவிலகினர்.

இன்னும் சிலர் தொலைபேசியை தவறான காரணங்களுக்காக பயன்படுத்தி இடைவிலகலுக்கு ஆளாகினர்.

இளவயது காதல்களினாலும் பொருத்தமில்லாத சகபாடிகளின் சேர்க்கையினாலும் இடைவிலகும் மாணவர்கள் பிற்காலத்தில் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதை பரவலாக காணலாம். இது போன்ற செயல்களினால் பெற்றோருக்கு இவர்கள் தேடி தருவது கெட்ட பெயரை மட்டுமே.

'பிள்ளைகளை பெற்றுப் போட மட்டும்தான் தெரியும் வளர்க்க தெரியாதவர்கள்' என்ற பெயர் பெற்றோர்கள் மீது சுமத்தப்படுகின்றது. இது அவர்களின் உளநல பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சமூகத்தில் கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழும் பெற்றோரின் நிலை, தாம் பெற்ற தவப்புதல்வர்களால் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது.

பிள்ளைகளின் இத்தகைய பொறுப்பற்ற தனத்தினால் அவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் அவர்கள் சார்ந்த ஒட்டுமொத்த சமூகமும் பாதிப்படைகின்றது.

மாணவர்களின் இடைவிலகல் காரணமாக பிள்ளைகளின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு தாம் உழைக்கவில்லை என்ற குற்ற உணர்வு பெற்றோருக்கு ஏற்படுகின்றது.

எனினும் இடை விலகும் மாணவர்களை தவறிழைத்தவர்களாக கருதமுடியாது. சூழ்நிலைகள் அவர்களை இந்நிலைக்கு தள்ளுகின்றன.

எனவே மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களை கண்டறிந்து நிவர்த்தி செய்வதன் மூலமே மாணவர்களின் கல்வி இடைவிலகலை குறைக்கலாம். இலங்கையில் ஒரு சில பகுதியிலேயே இடைவிலகும் விகிதம் அதிகமாக இடம் பெறுகிறது.

அப்பகுதியின் பொருளாதாரம், சூழல், காலநிலை போன்ற பல்வேறு அம்சங்களை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதன் மூலம் இடைவிலகலை பெருமளவு குறைக்கலாம்.

கல்வியில் போட்டித் தன்மையை உருவாக்கும் போது இடைவிலகல் குறைவடையும். யாழ்ப்பாணமானது கல்விச் சமூகம் என அழைக்கப்படுவதால் அங்கே இடைவிலகல் குற்றமாக பார்க்கப்படுகின்றது. கொழும்பு, கண்டி போன்ற பெருநகரங்களில் காணப்படும் போட்டித் தன்மையும் இடைவிலகலை குறைக்கின்றது எனலாம்.

**எஸ்.மங்களதர்ஷினி**
4ஆம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# வவுனியாவில் ஊடக அமையத்தின் அலுவலகம்



ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா ஊடக அமையத்தின் அலுவலகம் வவுனியா வைரவப் புளியங்குளத்தில் ஊடக அமையத்தின் தலைவர் எம்.ஜி.ரெட்னகாந்தன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ. சரத் சந்திரவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா நகரசபை செயலாளர் ஆர்.தயாபரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் சி .ரவீந்திரன் , வவுனியா பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கே. இராஜேஸ்வரன், வர்த்தகர் சங்கச் செயலாளர் ஆ.அம்பிகைபாகன், காஞ்சனா நகையக உரிமையாளர் க.செல்வராசா, மாவட்ட செயலக தகவல் உத்தியோகத்தர் உபுல் பாலசூரியவும் கலந்து கொண்டனர்.

வவுனியா ஊடக அமையத்திற்கான நிதி உதவி மற்றும் அலுவலக தளபாடங்கள் உட்பட பல்வேறு உதவிகளை அப்ரியல் அமைப்பின் பணிப்பாளர் ரவீந்திர டீ சில்வா வழங்கி வைத்தார்.



## ஹம்பாந்தோட்டை புதிய நகர பிரதேச பகுதி;

# மின் விளக்குகள் ஒளிராததால் பொதுமக்கள் அசௌகரியம்

### இரவில் யானைகள் நடமாட்டம் அதிகம்; மக்கள் அச்சம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை புதிய நகரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் விளக்குகள் நீண்டகாலமாக ஒளிராததன் காரணமாக இரவு வேளையில் பாதைகள் இருளில் மூழ்கிக் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஹம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில சந்தியிலிருந்து களஞ்சிய சந்தி வரையிலான நான்கு லேன்களைக் கொண்ட பிரதான பாதை, மேம்பாலங்கள் இரண்டு உட்பட நவீன வசதிகளுடன் அலங்கார மின் விளக்குகள் பொருத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப் பாதை பொது மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்ட காலங்களில் மிகவும் அழகாக காட்சியளித்திருந்ததாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வருடங்களாக மின் விளக்குகள் ஒளிராததன் காரணமாக இரவுவேளையில் பாதைகள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. அத்தோடு பிரதேசத்தில் இரவு வேளையில் யானை நடமாட்டமும் காணப்படுவதனால் குறித்த பாதையில் பயணிப்பதற்கு மக்கள் அஞ்சுகின்றனர்.

அடிக்கடி மனிதர்களும், வாகனங்களும் பாதையில் பயணிக்கும் போது யானையில் மோதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

சில பிரதேசங்களில் மின் விளக்குகள் திருடர்களால் திருடப்பட்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்தி மக்களை பாதுகாக்க வேண்டுமென அவர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# ஹெப்பற்றிகொல்லாவவில் இறந்த நிலையில் யானையின் சடலம் மீட்பு



ஓமந்தை விஷேட நிருபர்

ஹெப்பற்றிகொல்லாவ பகுதியில் காயமடைந்த நிலையில் காட்டு யானையின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் (06) கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

10 வயது மதிக்கத்தக்க யானையின் சடலமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பிரதேசத்திற்கு பொறுப்பான வனவிலங்கு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரேத பரிசோதனையின் பின்னரே மரணத்திற்கான காரணத்தை தெரிவிக்க முடியும் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பலாலி சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது

யாழ்.விசேட நிருபர்

பலாலி சர்வதேச விமான நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளமை கவலையளிப்பதாக முன்னாள் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட அவர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் யாழ்ப்பாண மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் முகமாக பலாலி சர்வதேச விமான நிலையம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டது.

குறிப்பாக வட பகுதியில் உள்ள மக்கள் குறைந்த நேரத்தில் குறைந்த செலவுடன் தென்பகுதிக்கு வந்து செல்வதற்கும் தென்னிந்தியாவிற்கு சென்று வருவதற்குமாக இந்த விமானநிலையம் திறந்து விடப்பட்டது.



அது வடபகுதி மக்களுக்கு கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம். ஆனால் இந்த அரசாங்கமானது அவ்வாறான சந்தர்ப்பத்தை வழங்க மறுத்து தற்போது விமான நிலையம் மூடப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது.

எனினும் பொறுத்திருந்து பார்ப்போம் நான் தற்போது அரசியலில் இல்லை. அத்தோடு நான் அங்கம் வகித்த கட்சியிலிருந்து விலகி இருக்கின்றேன். எனினும் நான் நினைக்கின்றேன் இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்பு கொண்டுள்ளனர்.

இந்த அரசாங்கம் விரைவில் வீடு செல்ல வேண்டி வரும். நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசுக்கு எதிராக குரல் கொடுப்பதற்காக கூட்டணியாக செயற்படும் காலம் விரைவில் கைகூடும். அது விரைவில் இடம்பெறும் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

# பூநகரி பிரதேசசபை பட்ஜட் நிறைவேற்றம்

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பூநகரி பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை அமர்வுகள் நேற்று முன்தினம் (06.01.2022) காலை 10 மணியளவில் சபையின் தவிசாளர் சி.சிறீரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது. தவிசாளரின் தலைமை உரையினையடுத்து இந்த ஆண்டிற்கான பாதீட்டினை சபைக்கு சமர்ப்பித்தார். பாதீடு தொடர்பான விவாதத்தையடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 20 உறுப்பினர்களை கொண்டுள்ள பிரதேசசபையில் பாதீட்டிற்கு 12 உறுப்பினர்கள் ஆதரவாகவும் மூன்று உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 5 உறுப்பினர்கள் சபைக்கு நேற்றைய தினம் சமூகமளிக்கவில்லை.


# அறிவித்தல்

## வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவு சங்கம்

2022.01.22 முதல் முன்வரும் மூன்று வருட (03) காலத்திற்கு கௌரவ தலைவர் கௌரவ உபதலைவர், கௌரவ பொருளாளர் மற்றும் கௌரவ பணிப்பாளர்கள் (08) எட்டுப் பேர்கள் உட்பட அனைத்துப் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பதினொறு (11) பேர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பெயர் குறிப்பிடுதல் கோரல்.

2021.11.17 அன்று தினமின, தினகரன் மற்றும் டெயிலிநியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த அறிவித்தலின் பிரகாரம் பெயர் குறிப்பிடுதல் கோரப்பட்டாலும் குறித்த எண்ணிக்கையான பதவிகளிற்கு மாத்திரம் அங்கீகாரம் பெற்ற பெயர் குறிப்பிடுதல் படிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளபடியால் 2022.01.22 அன்று இலக்கம். 348, பேராதெனிய வீதி, கண்டி என்ற முகவரியிலுள்ள மத்திய மாகாண ஹிந்து கலாசார மத்திய நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 44 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் உத்தியோகத்தர் தெரிவு நடவடிக்கை மாத்திரம் நடைபெறமாட்டாதென இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**ஹிமால் சஞ்ஜீவ ரொத்ரிகோ,**
**பிரதான உத்தியோகத்தர்,**
**தெரிவு அலுவலர்,**
**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இலக்கம் 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு -02.**



## சுகாதார சேவைத் திணைக்களம்

### போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய

### மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான

## கேள்வி அறிவித்தல்

01. காலி, கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலை, கேள்விச் சபைத் தலைவரினால் கீழே குறிப்பிட்டுள்ள மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் பெற்றுக் கொள்ளப்படும்.

| | அம்சத்தின் பெயர் | அளவு | வழங்கும் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | High End Paediatric (Cardiac) Echocardiography Machine | 01 | 2022.01.08 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் | 2022.01.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| 2. | Slit Lamp | 04 | | |

02. இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் ஏகநியமனம் பெற்ற பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களே இக்கேள்வியில் பங்குபெறுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

03. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர், முகவர், பிரதிநிதி அல்லது நியமனம் பெற்றவர் அல்லது கேள்விதாரரின் சார்பாகவுள்ளவரினால் இரு பிரதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியானது முத்திரையிடப்பட்ட கேள்விகளாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யும் நிகழ்வு:**

அ) காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.

ஆ) காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளரிடம் ரொக்கப் பணத்தில் ஒவ்வொரு கேள்விக்கும் 2500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்துதல்.

இ) அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதியொன்றுடனான வியாபார பதிவுச் சான்றிதழொன்று.

ஈ) உள்ளூர் முகவரொருவராக முகவராண்மைகளினால் நியமிக்கப்பட்டு வழங்கப்பட்டு சான்றிதழொன்று/ கடிதம்/அற்றோணித்தத்துவம்.

**கேள்வி ஆவணத்தை சமர்ப்பித்தல் நிகழ்வு:**

அ) கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, ‘சமாகம் மெதுர’ பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல்.

ஆ) 2% விலைமனுப்பிணையை சான்றுபகருவதற்கான ஆவணச்சான்று (விலைமனு பிணையத்திற்காக காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

இ) காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

ஈ) CIDA பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தொலைபேசி இல.: 091-2232159
தொலைநகல் இல.: 091-2227638

கேள்விகள் அவற்றை மூடிய பின்னர் உடனடியாகவே பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். காலி, கராப்பிட்டிய, போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர்/ கணக்காளரிடமிருந்து மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கேள்விச் சபை,**
**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய,**
**காலி.**



**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59 (2) இன் கீழ் பகிரங்க அறிவித்தல்**

அப்பிகோ சொப்.ஃட்வெயார் (பிரைவேட் லிமிட்டட்) (கம்பனிப் பதிவிலக்கம் பீவி 7980) இல.50, வார்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டது என்பதோடு அதன் கூறப்பட்ட மூலதனத்தை நான்கு கோடியே ஐந்து இலட்சத்து முப்பது ரூபாய் (ரூ.40,500,030.00) தொகையிலிருந்து பதினைந்து இலட்சத்து பதினாறாயிரத்து தொண்ணூற்றி இரண்டு ரூபாய் (ரூ.1,516,092.00) தொகையாக குறைப்பதற்கு முன்மொழிகின்றது என 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59 (2) இன் அடிப்படையில் இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**சபையின் கட்டளைப்படி**
**பிசினஸ்மேட் (பிரைவேட்) லிமிட்டட்**
**செயலாளர்**
**அப்பிகோ சொப்.ஃட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**


# பற் சிகிச்சை நிலையத்திற்கு உபகரணங்கள் அன்பளிப்பு



பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் குழுவின் "சமூக நலன்புரித்திட்டங்களுக்கமைய எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் பற் சிகிச்சை நிலையத்தில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் “அல் ஹுமைஸரா 88” பழைய மாணவர் குழுவினரால் பற் சிகிச்சை நிலையத்திற்கு தேவையான உபகரணங்கள் பல் வைத்தியர் இந்திகா ஹேமமாலியிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.
படம்: பேருவளை விசேட நிருபர்


## கேள்வி அறிவித்தல்

### சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - கொழும்பு மாவட்டம் அழுக்குத் துணிகளைக் கழுவுதல் - 2022

எமது கொழும்பு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைப் பிரிவிற்கு உரித்தான ஹோமாகம வைத்தியசாலையின் அழுக்குத்துணிகளைக் கழுவுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | நிறுவனத்தின் பெயர் | கேள்விப் பத்திர கட்டணம் |
|---|---|---|
| 1 | ஹோமாகம தள வைத்தியசாலை | 1000.00 |

கேள்வி ஆவணங்களை 2022.01.07 முதல் 2022.01.28 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை மீளளிக்கப்படாத மேலே குறிப்பிடப்பட்டள்ள விதத்தில் குறித்த லொட் இலக்கம் சார்பாக செலுத்த வேண்டிய கட்டணத்தை கொழும்பு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

தேவைப்படின் கட்டணங்கள் செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை தொ.பே. இல. 0112326248 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென) வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு இவ் அலுவலகத்தின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது பதிவுத் தபாலில் ‘தலைவர் பெறுகைக்குழு. பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை த.பெ. 1287 புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்த, கொழும்பு 10, என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘அழுக்குத் துணி கழுவுதல் - லொட் இல (.........) வழங்குவதற்காக விலைமனுக்கள் - 2022’ என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2022.01.31 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் அவை திறக்கப்படல் 2022.01.31 மு.ப. 10.00 இற்கு இவ் அலுவலகத்திலேயே இடம் பெறுவதுடன் மேற்படி நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை**
**த.பெ. 1287**
**புதிய செயலகம்**
**மாளிகாவத்த**
**கொழும்பு 10**


# கைநூல் வெளியீட்டு விழா

கரவெட்டி தினகரன் நிருபர்

வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் எழுதிய 'எளிமை மிகு பரிபாலக ஆளுமை' என்ற கைநூல் வெளியீடு நேற்று எதிர்வரும் 17.01.2022 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பரிபாலகர் அமரர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நற்செயற்பாடுகளை வெளிப்படுத்தும்விதமாக அமைந்துள்ள இந்த நூலின் வெளியீட்டுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமை தாங்கவுள்ளார்.

நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் கைநூல் இலவசமாக வழங்கப்படும். சுகாதார விதிகளை பின்பற்றி அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.


**ஒன்றிணைத்தல் அறிவித்தல்**
**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**ஃப்ருடன்பர்க் என்ட் விலென் இன்டர்நெஷனல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனம் ஃப்ருடன்பர்க் அபரல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்**

ஃப்ருடன்பர்க் என்ட் விலென் இன்டர்நெஷனல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 8802) ஆகிய நிறுவனம் ஃப்ருடன்பர்க் அபரல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 18003) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2021 டிசம்பர் 1ஆம் திகதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப, கீழ் 2021 டிசம்பர் 1ஆம் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள், கீழ் 2021 டிசம்பர் 1ஆம் திகதியில் இருந்து ஃப்ருடன்பர்க் அபரல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் என தொடரும்.

**நிர்வாகஸ்தர்**
**ஃப்ருடன்பர்க் அபரல் லங்கா (பிரைவட்) லிமிட்டட்**

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 2 – கம்பஹா

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு கம்பஹா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**கே.ஜே.எஸ். மாதவ,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 2 - கம்பஹா.**

**கம்பஹா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 1 – கொழும்பு

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**பீ.ஏ.எஸ். சேனாரத்ன,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 1 - கொழும்பு.**

**கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

SUNDAY OBSERVER adZ it's what you want
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| --- | --- | --- |
| ரூ. 300/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 650/- |

- ISLANDWIDE -

MONARAGALA
MONARAGALA ........ 077 6 565 653
SRI RAMYA STORES., NO 19., 20, MONARAGALA.

MATARA
MATARA ........ 047 2 230 093
NILMINI STORSE - NO 69., DHARMAPALA MAWATHA, MATARA

ANURADAPURA
THABUTTEGAMA ........ 025 2 276 431
MUTHUKUDA PAPER CORNER - No 36, Thambuttegama

ANURADHAPURA ........ 025 2 221 411
MAHAJANA BOOK SHOP - Anuradhapura

ANURADHAPURA ........ 025 2 222 806
SATHSARA BOOK SHOP - 40, KADAPANAHA., ANURADHAPURA

ANURADHAPURA ........ 025 2 222 575
PANDANTA BOOK SHOP - 56/24, MAITHRIPALA SENANAYAKE MW, NEWS BUS STAND, ANURADHAPURA

RATHNAPURA
RATHNAPURA ........ 071 2 900 35
NO 15, CHURCH ROAD, RATNAPURA

RATHNAPURA ........ 045 2 223 883
LAKE HOUSE ADVERTISING CENTER - NO 88, MAIN STREET, RATNAPURA

HAMBANTHOTA
MIDDENIYA ........ 047 2 27 245
SOMASIRI STORES - HUNGAMA ROAD MIDDENIYA.

TANGALLE ........ 047 2 240 402
D.W.TRADERS - NO 158., MATARA ROAD., TANGALLE

HAMBANTOTA ........ 077 0 051 975
MISHRIYA STORSE - NO 32 MAHAJANA POLA., HAMBANTOTA

AMBALANTOTA ........ 047 2 223 152
SUMITHRA TRADE CENTER - NO 11, MAIN STREET., AMBALANTOTA.

TISSAMAHARAMA ........ 047 2 239 088
T.D. MADANAYAKE & COMPANY (PVT) LTD - MAIN STREET, TISSAMAHARAMA

BATTICALO
KATHTHANKUDY ........ 077 7 435 566
A.L.M. UWAIS, OLD POST OFFICE BUILDING., KATHTHANKUDY.

BATTICALA ........ 065 2 226 034
PRIYA STORES, N.K. RATHNASINGHAM, NO. 01, MARKET ROAD, BATTICALOA.

POLONNARUWA
POLONNARUWA ........ 077 9 627 542
PARAKUM BOOK SHOP - HOSPITAL JUNCTION, POLONNARUWA.

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 3 – களுத்துறை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு களுத்துறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**காலிந்திர ஜயவீர பர்ணாந்து,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 3 - களுத்துறை.**

**களுத்துறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 4 – மஹநுவர

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**எச்.டீ.என். சம்பத் பிரனாந்து,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 5 - மஹநுவர.**

**கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 5 – மாத்தளை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு மாத்தளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**பீ.எஸ். புலஸ்தி பத்திரண,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 5 - மாத்தளை.**

**மாத்தளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 6 – நுவரெலியா

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு நுவரெலியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ள தென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**கே.ஏ.எல்.எஸ். கலுகம்பிட்டிய,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 6 - நுவரெலியா.**

**நுவரெலியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 7 – காலி

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு காலி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**டப்ளிவ். எச்.ஆர். விஜேகுமார,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 7 - காலி**

**காலி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 8 – மாத்தறை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு மாத்தறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**ரீ. டப்ளியூ. போஷிதா கௌமதி,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 8 - மாத்தறை**

**மாத்தறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 9 – ஹம்பாந்தோட்டை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு ஹம்பாந்தோட்டை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**ரவீந்திர சுபாஷன வெதகே**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 9 - ஹம்பாந்தோட்டை**

**ஹம்பாந்தோட்டை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 10 – யாழ்ப்பாணம்

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**ஆர். சீ. அமல்ராஜ்,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 10 - யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 11 – வன்னி

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**ஜே. ஜெனிற்றன்**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 11 - வன்னி.**

**வவுனியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

*2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு*

## தேர்தல் மாவட்ட இல. 12 – மட்டக்களப்பு

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**எம்.பி.எம். சுபியான்**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 12 - மட்டக்களப்பு**

**மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**2022 சனவரி மாதம் 07ஆந் திகதி**

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 13 – திகாமடுல்ல

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு அம்பாறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**எம்.பி.எம். சுபியான்,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 13 - திகாமடுல்ல.**

**அம்பாறை மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 14 – திருகோணமலை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு திருகோணமலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**எஸ். சுதாகரன்,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 13 - திருகோணமலை.**

**திருகோணமலை மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 15 – குருநாகல்

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு குருநாகல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**ஆர்.எம்.எச்.பி. ரத்நாயக்க,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 15 - குருநாகல்.**

**குருநாகல் மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 16 – புத்தளம்

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு புத்தளம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**பி.எம்.ஐ.எஸ்.ஐ. பண்டார,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 16 - புத்தளம்.**

**புத்தளம் மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 17 – அநுராதபுரம்

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு அநுராதபுரம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**கே. முகுந்தன்,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 17 - அநுராதபுரம்.**

**அநுராதபுரம் மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 18 – பொலன்னறுவை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு பொலன்னறுவை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**பியுமி ஆட்டிகல,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 18 - பொலன்னறுவை.**

**பொலன்னறுவை மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 19 – பதுளை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு பதுளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**இந்திக ஹத்துருசிங்க,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 19 - பதுளை.**

**பதுளை மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 20 – மொனராகலை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு மொனராகலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**என். ரேகன்,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 20 - மொனராகலை.**

**மொனராகலை மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 21 – இரத்தினபுரி

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு இரத்தினபுரி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**சுரங்க அம்பகஹதென்னெ,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 21 - இரத்தினபுரி.**

**இரத்தினபுரி மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

---

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**
**2021ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

## தேர்தல் மாவட்ட இல. 22 – கேகாலை

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அந்த இடாப்பு கேகாலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும், 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**எஸ்.டப்ளியு. வெல்கம,**
**உதவிப் பதிவு அலுவலர்,**
**தேர்தல் மாவட்ட இல. 22 - கேகாலை**

**கேகாலை மாவட்டத்**
**தேர்தல்கள் அலுவலகம்,**
2022 சனவரி மாதம் 07ஆம் திகதி

## புதிய தொழில் நுட்பத்துடன் இணைந்த

# திட்டங்கள்,கொள்கைகள் பலவற்றை நிறைவேற்றி புதிய வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம்



-அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

புத்தாண்டில் தனது கடமைகளை ஆரம்பித்து இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கடந்த மூன்றாம் திகதி இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் டன்கன்வைட் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது :

2022ஆம் ஆண்டு கடமைகளை ஆரம்பிக்கும் முதல் தினமான இன்று உங்கள் அனைவருக்கும் எனது புதுவருட வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சாக மிகவும் சவாலான ஒரு வருடத்தை கடந்து வந்து இளைஞர்களின் விருப்பங்களை நிறைவேற்ற புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை செயல்படுத்தி புதிய வருடத்தில் காலடி வைத்துள்ளோம்.

நாம் அனைவரும் சரித்திரத்திலேயே முகம் கொடுக்காத உலகளாவிய தொற்றுடன் கடந்த வருடம் பூராவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி நேரிட்டது. வழமைபோன்று அமைச்சுக்கு வருகை தரா விட்டாலும் தொழில்நுட்பத்தின் ஊடாக உங்கள் பணிகளுடன் நான் இணைந்து கொண்டேன்.

நாம் எதிர்பார்த்த இலக்கை மிகவும் சிரமத்துடனேயே அடைய முடிந்தது. விளையாட்டுத்துறையில் சர்வதேச வெற்றிகளையும் பெற தொடங்கினோம். எமது நாட்டிலும் உலக சாம்பியன்கள் உருவானார்கள். ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கங்களை வெற்றிகொள்ளும் அளவிற்கு விளையாட்டு துறையை உயர்த்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

21 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் 'துருனு சக்தி' திட்டத்தை ஆரம்பிக்க முடிந்துள்ளது. கிராமிய மட்டத்தில் இளைஞர்களுக்கு வேலை வழங்கும் திட்டங்களை நாம் செயற்படுத்தியுள்ளோம். தொற்று நிலைமை காரணமாக எமது இலக்கை அடைய முடியா விட்டாலும் பிறந்துள்ள புதிய வருடத்தில் எமது இலக்கை அடைய முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளோம்.

கடந்த வருடத்தில் இந்த அமைச்சின் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் தமது பணிகளை மேற் கொண்டார்கள். எனக்கு தெரியும் சில சந்தர்ப்பங்களில் வேலை அதிகமாகி இரவு நேரங்களில் கூட அமைச்சு பணிகளில் ஈடுபட வேண்டி நேரிட்டது. பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வந்த முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி விளையாட்டுத் துறையில் புதிய பிரவேசம் ஏற்பட்டதால் நீங்கள் அந்த மாற்றத்திற்கு உட்பட்டு உங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள். அதன் பலனும் கிடைத்துள்ளது.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சில் சேவை செய்த அதிகாரியாக கிராமத்துக்கு சென்றால் அங்கு நீங்கள் பெருமை அடையலாம், மகிழ்ச்சி அடையலாம் என நான் நம்புகிறேன். அதற்கு காரணம் எமது அமைச்சிலுள்ள அனைவரினதும் அர்ப்பணிப்பின் பலனாலாகும். இன்று நாம் அனைவரும் சந்தோஷப்படக்கூடிய பலன்கள் கிடைத்துள்ளன.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சராக விளையாட்டுத் துறையை இந்நாட்டில் வெற்றியை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். இளைஞர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான கொள்கை ரீதியிலான முடிவுகள் எடுப்பதற்கு அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான பாதையை உருவாக்கும் பொறுப்பு எனக்ளிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் அந்த இலக்கை அடைய முடியும் என நான் நம்புகிறேன்.

அதற்காக பணிகளை ஆற்றும் அதிகாரிகள் மற்றும் எமது அமைச்சுடன் இணைந்துள்ள அனைவரினதும் சேவைகளை இலகுவாக நிறைவேற்றுவதற்கு தேவையான சூழலை உருவாக்கித்தரும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்காக எமக்கு சட்டரீதியிலான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிவரும். அதற்காக எமது ஒழுங்கு முறைகளை மாற்ற வேண்டும். அதற்கு நாம் தயாராக உள்ளோம். அந்த நெறிமுறைகளை மாற்றுவதற்கு நாம் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கோப்புகளை மேசைமேல் வைத்துக் கொண்டு தலையில் கையை வைத்துக் கொண்டு இந்த கோப்புகளின் வேலையை எப்படி முடிப்பது என சிந்திப்பதற்கு பதிலாக புதிய தொழில்நுட்பத்தின் மூலம் மிக விரைவாக உங்களது நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான சூழலை உருவாக்கி தருவேன்.

தேசியக் கொள்கையாக நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னோக்கி செல்ல வேண்டும். நவீன தொழில்நுட்பத்துடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் பொறுப்பு அமைச்சராக எனக்கு வழங்கப்பட்டுள்ளதால் அதனை செயல்படுத்தும் பொறுப்பும் எமது அமைச்சுக்கு உண்டு. இந்த வருடத்தின் முதலாவது காலாண்டு பகுதிக்குள் எமது அமைச்சை டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப் படும்.

இதனை செயல்படுத்த தேவையான புதிய ஒழுங்கு முறைகளை அறிமுகம் செய்யவுள்ளோம்.

தற்போது ஒரு கோப்பு 4 இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. புதிய முறையின் ஊடாக ஒரே இடத்திலேயே அதன் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய தேவையான செயல்திறன்மிக்க மிகவும் நம்பிக்கையான முறையொன்றை அறிமுகம் செய்யவுள்ளோம்.

காகித பாவனையற்ற அமைச்சாக நாம் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சை மாற்றம் செய்யவுள்ளோம். இவ்வருடத்தில் அமைச்சில் உபயோகப்படுத்தும் காகிதத்தின் அளவை 50 வீதமாக குறைக்க எதிர்பார்த்துள்ளோம். அதிகமாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை உபயோகப் படுத்தும் இளைஞர்களை பிரதிநிதித்துவம் செய்யும் எமது அமைச்சு விரைவாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உள்ளேன்.

இதன்மூலம் உங்களது பணிகள் குறைக்கப்பட்டு மற்றும் உங்கள் சேவையை பெற்றுக்கொள்ள வரும் இளைஞர் யுவதிகளின் நலன் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த உங்களால் முடியும். மேலும் இளைஞர்கள் கடவுச்சீட்டு பெற, பிறப்பு சான்றிதழ் மற்றும் மரணச் சான்றிதழ் பெறுவதற்கு, பொலிஸ் அறிக்கை பெறுவதற்கு வரிசையில் நிற்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறான நிலைமைக்கு நாம் இந்த நாட்டை மாற்றம் செய்வோம்.

இன்று உலகம் மாறி வருகிறது உலகில் அனேகமான நாடுகள் டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சர் ஒருவர் இல்லை. அந்நாடுகளில் அவ்வாறான ஒரு அமைச்சர் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னரேயே காணப்பட்டார்கள்.

இன்று அந்நாடுகளில் டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சர்களே இருக்கின்றார்கள். ஆனால் எமது நாட்டில் டிஜிட்டல் தொழில்நுட்பத்துக்கான அமைச்சர் ஒருவர் இருக்கின்றார். எமது நாட்டில் சிக்னல் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு மரத்தில் ஏற வேண்டியுள்ளது. யாருடைய தவறு? யாருடைய பொறுப்பு? என்ற விடயத்தை ஆராய்வதல்ல அதனை எதிர்வரும் வருடங்களில் சீர் செய்வதே எமது இலக்கு.

அமெரிக்காவில் நியூ யோர்க் நகரில் கணக்கு நிறுவன மொன்றில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வீட்டிலிருந்தே பணிகளை ஆற்றுகிறார்கள். நாமும் ஒரு நாடாக அவ்வாறான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். தொழில்நுட்பத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இளைஞர்கள் இவ் அமைச்சில் இருக்கிறார்கள். அதனால் அதனை ஆரம்பிப்பதற்கு இலகுவான இடமாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு உள்ளது.

சவால்கள் முடிவதில்லை. சவால்கள் புதிதாகின்றன. கொவிட் தொற்று வைரஸும் முடிவுக்கு வரவில்லை. இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் எமக்கு அளிக்கப்பட்டுள்ள இலக்கை வெற்றி கொள்ள நாம் நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

அமைச்சராக எனக்கு ஏதேனும் கொடுப்பனவுகள் கிடைக்குமென்றால் ,அரசு ஊழியர்களாக உங்களுக்கும் சம்பளம் கிடைக்கும் என்றால், ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது எமது மக்கள் சேனைக்கு, வயலுக்கு, கடலுக்குச் சென்று உழைத்து சம்பாதிக்கும் பணத்தில் அரசாங்கத்துக்கு அளிக்கும் வரி மூலமாகும். 86 பில்லியன் ரூபாய்கள் உங்களைப் போன்ற 1.7 மில்லியன் ஆட்களுக்கு பகிரப்படுகிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

தற்போதுள்ள அமைச்சுகளிலேயே செயல்திறன்மிக்க அமைச்சு உங்களது அமைச்சு என்று கிராமத்தில் உள்ளவர்கள் உங்களுக்கு சொல்லும் அளவிற்கு நீங்கள் அதனை மாற்ற முடியும் என்றால் 2022ஆம் ஆண்டில் நீங்கள் பெற்ற வெற்றி அதுவேயாகும்.

அதற்கு இணைந்ததாக அபிவிருத்தி தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பு அமைச்சின் மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்ப மற்றும் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2022ஆம் ஆண்டின் புதியவருடத்துக்கான பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சஞ்சய் சமரசிங்க உள்ளிட்ட செயலாளர்கள் மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் அனுராத விஜயகோன் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

## 20க்கு 20 போட்டிகளில் புதிய விதிமுறைகளை அறிமுகம் செய்துள்ள சர்வதேச கிரிக்கெட் சபை

ஆண்கள் , மகளிர் என அனைத்துவகை ரி 20 போட்டிகளிலும் புதிய விதிமுறைகள் இரண்டு இந்த மாதத்தில் இருந்து அமுலுக்கு வருவதாக சர்வதேச கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

புதிய விதிமுறைகளில் முதல் விதிமுறையாக ரி 20 போட்டிகள் நடைபெறும் போதே மந்தகதியில் ஓவர்கள் வீசும் அணிக்கு தண்டனை வழங்கும் முறையானது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த தண்டனை வழங்கும் முறையில் களத்தடுப்பில் ஈடுபடும் அணியானது, ஒரு இன்னிங்ஸிற்காக ஒதுக்கப்பட்ட நேர அவகாசத்திற்குள் குறித்த இன்னிங்ஸின் கடைசி ஓவரின் முதல் பந்தினை வீசும் ஒரு நிலையில் காணப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

களத்தடுப்பில் ஈடுபடும் அணி அவ்வாறான நிலை ஒன்றில் இல்லாமல் போகும் சந்தர்ப்பத்தில், அந்த அணிக்கு இன்னிங்ஸின் ஓவர்கள் நிறைவடையும் வரை மைதானத்தின் 30 மீற்றர் சுற்று வட்டத்திற்கு வெளியே ஒரு களத்தடுப்பாளரை குறைவாக வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமை இனி தண்டனையாக இருக்கும்.

அதேநேரம் இந்த தண்டனை, மந்த கதியில் ஓவர்களை வீசும் போது வழங்கப்படும் ஏனைய தண்டனைகளுக்கு மேலதிகமான ஒன்று எனவும் ஐசிசி குறிப்பிட்டிருக்கின்றது.

இந்த தண்டனை முறைமை, இங்கிலாந்தின் உள்ளூர் கிரிக்கெட் தொடரான "த ஹன்ட்ரட்" தொடரின் பெறுபேறுகளில் இருந்து ஐசிசி இன் கிரிக்கெட் குழு வழங்கிய பரிந்துரைக்கு அமைய உருவாக்கப்பட்ட ஒன்று எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஐசிசி இனால் அமுலுக்கு கொண்டு வரப்படும் இரண்டாவது புதிய விதிமுறையில் ரி 20 போட்டிகளின் இன்னிங்ஸ்களில் நடுவே, சிறு இடைவேளை ஒன்று வழங்கப்படுவது குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த இடைவேளை கிட்டத்தட்ட 2 நிமிடம் 30 செக்கன்கள் வரை நீடிப்பதோடு, இந்த இடைவேளை தொடர்பில் போட்டிகளில் பங்கெடுக்கும் இரு நாடுகளினதும் கிரிக்கெட் சபைகள் தீர்மானம் மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விதிமுறை 2021ஆம் ஆண்டில் நடைபெற்று முடிந்த ஆண்கள் ரி 20 உலகக் கிண்ணத்தொடரில் பின்பற்றப்பட்டிருந்தமையை கண்டு கொள்ள முடியுமாக இருந்தது.

இந்த புதிய விதிமுறைகள் முதல் முறையாக இம்மாதம் 16ஆம் திகதி மேற்கிந்திய தீவுகள் மற்றும் அயர்லாந்து அணிகள் இடையில் நடைபெறவுள்ள ஆண்கள் ரி 20 போட்டியின் போதும், அதனை தொடர்ந்து எதிர்வரும் 18ஆம் திகதி மேற்கிந்திய தீவுகள் – தென்னாபிரிக்க மகளிர் அணிகள் பங்கெடுக்கும் மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடரின் முதல் போட்டியிலும் பின்பற்றப்படும் என ஐசிசி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

# 2ஆவது டெஸ்ட்: 7 விக்கெட் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்கா அபார வெற்றி








96 ஓட்டங்கள் பெற்று அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்த அணியின் தலைவர் டீன் எல்கர் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்தியா தென் ஆபிரிக்க அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் இந்தியா 202 ஓட்டங்களும், தென் ஆபிரிக்கா 229 ஓட்டங்களும் எடுத்தன. 2வது இன்னிங்சில் இந்தியா, 266 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரகானே 58 ஓட்டங்கள் எடுத்தார். புஜாரா 53 ஓட்டங்களும், ஹனுமா விகாரி 40 ஓட்டங்களும் சேர்த்தனர்.

இதையடுத்து 240 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா அணி 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 118 ஓட்டங்கள் குவித்தது. அணியின் தலைவர் எல்கர் 46 ஓட்டங்களுடனும், துசன் 11 ஓட்டங்ன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில் 4ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. வெற்றி இலக்கை எட்டுவதற்கு 122 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், தொடர்ந்து ஆடிய எல்கர், அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச் சதம் கடந்தார். மறுமுனையில் துசன் 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் எல்கர் டெம்பா பவுமா இருவரும் அணியின் வெற்றியை உறுதி செய்தனர். தென் ஆபிரிக்க அணி 3 விக்கெட் இழப்பிற்கு 243 ஓட்டங்கள் சேர்த்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தலைவர் எல்கர் 96 ஓட்டங்களுடனும், டெம்பா பவுமா 23 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஆட்டநாயகனாக டீன் எல்கர் தேர்வு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது.

## பாலமுனை றைஸ்டார் கழக உறுப்பினர்களுக்கான ரீசேட் அறிமுகம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

2022 புத்தாண்டை முன்னிட்டு பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டி, கழகத்தின் அங்கத்தவர்கள் கௌரவிப்பு, கழக உறுப்பினர்களுக்கான ரீசேட் அறிமுகம், மற்றும் கலை நிகழ்ச்சி போன்ற பல்வேறு நிகழ்வுகள் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம். பாயிஸ் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுள்ளா, உதவி தவிசாளர் எஸ்.எம்.எம். ஹனிபா, தென் கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப பீடாதிபதி ஏ.அப்துல் மஜீத், ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.எல்.ஏ.கபூர், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில், எம்.எம்.சித்திபாத்திமா, சட்டத்தரணி றிஸ்மியா அசாம், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.எம். றிபாஸ்தீன், பொத்துவில் மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.எல்.சுதைஸ் அகமட், அம்பாறை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எஸ்.எல்.தாஜூதீன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜி.பஸ்மில், பாலமுனை 4 கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ஐ.எம். அர்சாத், உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், கழகத்தின் ஆரம்பகால ஸ்தாபக உறுப்பினர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்,



இதன் போது பாலமுனை பொது விளையட்டு மைதானத்தின் உருவாக்கத்தில் பங்களிபாற்றிய அனைத்து கழக சம்மேளனத்தின் தலைவர் எஸ்.அப்துல் கரீம், பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்திகன் ஸ்தாபகர் கலீல் ஆசிரியர் உட்பட ஆரம்பகால உறுப்பினர்கள் அதிதிகளினால் 2022 றைஸ்டார் ஞாபகார்த்த நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தேசிய கபடி சுற்றுப் போட்டிகள் இன்று (8) கொழும்பில் ஆரம்பம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

தேசிய கபடி சுற்றுப் போட்டிகள் இன்று ( 8 ) கொழும்பில் ஆரம்பமாகின்றது.

இலங்கை கபடி சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள தேசிய ரீதியிலான மேற்படி சுற்றுப்போட்டி இன்று ( 8 ) முதல் 10 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளையாட்டுத்துறை அமைச்சின் உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது.

நாட்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக ஒத்திப்போடப்பட்டு வந்த மேற்படி சுற்றுப் போட்டி சுகாதார வழிமுறைகளைப் பேணி இவ்வருடம் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ள இறுதிப் போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 8ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.